# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



ஸ்ரீ தண்டாயுதபாணிப் பெருமாள்,
கௌமார மடாலயம், கோவை

மாலை 8] பராபவ ஆனி—ஜூலை 1966 [மணி 10

CONNEMARA ... JUL ... MADRAS

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



தெய்வயானை திருக்கல்யாணம் (சுவாமிமலை)

---

பொருளடக்கம்


1. தமிழ்நாடு தெய்விகப் பேரவை.
2. கச்சியப்ப முனிவர் கவி நலம்
3. விடை தெரியுமா?
4. விடை விளக்கம்
5. சிவஞான போதத் தெளிவுரை
6. 'வையந் தோறும் தெய்வம் தொழு'
7. மதிப்புரைகள்
8. இன்பியல் மனிதன்
9. ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்
10. ஞான சித்தர்களும் சித்த மருந்தும்
11. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
12. மதுரகவியும் மணிமொழியும்
13. உள்ளுறைப் பொருளாராய்ச்சி
14. சிவாலயப் பரிவார மூர்த்திகள்


---


**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விம்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள் அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்த மாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. — ஆசிரியர்




# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] பராபவ, ஆனி-ஜூலை [மணி 10


## தமிழ்நாடு தெய்விகப் பேரவை

'பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு'. அதிலும் குறிப்பாக, நம் தமிழ் நாடோ, தெய்விகம் நிறைந்த திருநாடு. நம் தமிழ் நாட்டில் தெய்வத் திருக்கோயில்கள் மிகப் பெரும் அளவில் செறிந்து விளங்குகின்றன. **மூர்த்தி தலம் தீர்த்தம்** என்னும் மூன்றானும், இத் தெய்வத் திருக்கோயில்கள் ஏற்றம் பெற்று எழில் மிக்குத் திகழ்ந்து வருகின்றன. நம் தெய்வத் தமிழ் நாட்டிலேதான், "பாததூளி படுதலால் இவ்வுலகு பாக்கியம் செய்ததே' என்றபடி, ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவதரித்து, கால்தரை தோய நடந்து, பல அற்புத அருட் செயல்களை நிகழ்த்தி, அமிழ்தினும் இனிய அரிய திருப்பாடல்களை அருளிச் செய்து, தெய்வச் செந்நெறியைப் பரப்பி யருளினர்.

தமிழ நாட்டின் இத்தகைய தனிப் பெருஞ் சிறப்புகள் பல! அவற்றுள், பழமையும் பெருமையும் வாய்ந்த சிறந்த திருமடங்கள் பலவற்றைப் பெற்றிருத்தலும் ஒன்றாகும். **திருமடங்கள்** தெய்வச் செந்நெறியைப் பரப்பும் சமயத் துறையிலும், மக்கள் நலம் பேணி வளர்க்கும் சமுதாயத் துறையிலும், தொன்று தொட்டே பெருந்தொண்டு ஆற்றி வருகின்றன. **பல்லவ அரசர்**களின் கல்வெட்டுகளும், **சோழ வேந்தர்**களின் கல்வெட்டுகளும், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிற் பரவி யிருந்த பற்பல திருமடங்களின் பெயர்கள், அவைகள் அவ்வப் பகுதிகளில் ஆற்றி வந்த அரும் பெருந் தொண்டுகள், ஆகியவை பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன. அவற்றினால் திருமடங்களின் பழமை பெருமை முதலிய பலவகைச் செய்திகளையும், நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

"கோதில் மான்தோல் புரிமுந்நூல்
குலவும் மார்பிற் குழைக்குடுமி
ஓது கிடைசூழ் சிறுவர்களும்
உதவும் பெருமை ஆசானும்,
போதின் விளங்கு தாரகையும்
மதியும் போலப் புணர்மடங்கள்
மீது முழங்கும் முகில்ஒதுங்க
வேத ஒலிகள் முழங்குவன"

எனப் பெரிய புராணத்திற் **சேக்கிழார் சுவாமிகளும்,**

ஆய்வார் பதிபசு பாசத்தின்
உண்மையை; ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கை எல்லாம்;
கல்வி கேள்வி அல்லல்
ஓய்வார்; சிவானந்த வாரியுளே
ஒன்றும் இரண்டும் அறத்
தோய்வார் ; கமலையுள் ஞானப் பிரகாசன்
மெய்த் தொண்டர்களே!

என மைசூர் மன்னருக்கு **ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகளும்** அருளிச் செய்த திருப்பாடல்கள், திருமடங்களின் சிறப்பினை விளக்கி யிருத்தல் காணலாம்.

திருமடங்களின் சிறந்த பெருந் தொண்டுகளினால்தான், மக்களிடையிற் கல்வியும் கலைகளும் செழித்தன; பழம் பெரும் நூல்கள் பலவும் போற்றிப் பாதுகாக்கப் பெற்றன. பக்தியும் ஒழுக்கமும் பண்பாடும் மக்களிடையிற் பெரிதும் பரவி வளர்ந்தன. திருக்கோயில்கள் பலவும் சிதைவின்றிச் சிறந்து விளங்குதற்கும், அறக்கட்டளைகள் பலப்பல அமைந்து நன்கினிது செயற்பட்டு வருவதற்கும், திருமடங்கள் பெரிதும் காரணமாக விளங்கி வருகின்றன. சிறந்துயர்ந்த பண்பாளர்களும், புலவர்களும், கலைஞர்களும் ஆகிய பெருமக்கள் பற்பலர் தோன்றுதற்கும், திருமடங்களே நிலைக்களமாகத் திகழ்ந்தன. பெரும் புலவர்களும், பெருங் கலைஞர்களும் ஆகிய பலர், திருமடங்களின் ஆதரவினாலேயே சீரும் சிறப்புமுற்றுத் தெய்வப் பணிகள் புரிந்து திகழ்ந்தோங்கி யிருந்தனர். அழியாப் புகழ் வாய்ந்த அரிய பெரிய கலை நூல்கள் மிகப் பல தோன்றுதற்கும் பரவுதற்கும், திரு மடங்களே தாயகமாக விளங்கி வந்திருக்கின்றன. சுருங்கக் கூறின், திருமடங்களால் தமிழ் நாட்டிற்கு விளைந்துள்ள நலங்களுக்கு அளவே யில்லை எனலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமடங்களின் தலைவர்கள் பலரும், அண்மையில் சில மாதங்களுக்கு முன்னர் (6, 7-2-66), 'அருளெலாம் ஒருவழிக் கூடி அமைந்தன' எனும்படி, ஒருங்கு திரண்டனர்; தம்முள் அன்பினாற் கலந்து அளவளாவி, ஒருமனப்பட்டு ஒன்றுகூடி இன்புற்றனர்.

நாட்டின் இந்நாளைய நடப்பு நிலைமைகளைத் தம் திருவுளங்களிற் கொண்டு, பல செய்திகளைக் கருதி யுணர்ந்து ஆராய்ந்தனர் மன்பதையை உய்யச் செய்தற் பொருட்டுத் தாங்கள் செய்து வரும் சிறந்த பெரும் பணிகளை, மேலும் மிக விரிவாகவும் சிறப்பாகவும் பரவலாகவும் செய்தருளுதற்குத் திருவுளங் கொண்டனர். **சௌலப்பியம் சௌசீல்யம்** எனப்படும் எளிமை இனிமையாகிய தம் சிறந்த அருட் பண்புகளால், நாட்டு மக்களுடன் காட்சிக்கெளியராய்க் கலந்தினிது பழகி நல்ல பெருந் தொடர்புகளை அமைத்துக் கொள்ளவும், அவ்வாற்றால் நாட்டு மக்களை யெல்லாம் தெய்விக நல்வழியிற் செலுத்தித் திருத்திப் பணி கொண்டு உய்வித்தருளவும், திருவுளம் பற்றியுள்ளனர். ஆக்கப் பணிகள் பல செய்தருளி, நாட்டு நலனும் மக்கள் நலனும் பேணிப் புரக்க மடிதற்று முனைந்து முற்போந்துள்ளனர். **'முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள் உளதோ?'** எனச் சேக்கிழார் பெருமான் பாடுதல் போல, நம் திருமடங்களின் தலைவர்கள் ஆகிய பெருமக்கள் பலரும் முன்னி முயன்றால், முடியாததொரு செயலும் உண்டோ?

இந்திய தேச வரலாற்றில், **ஹர்ஷ வர்த்தனர்** (கி. பி. 606 - 647) எனும் பேரரசர், **கனோஜ்** என்னும் நகரத்தில், கி. பி. 643-ஆம் ஆண்டில், பௌத்தம் ஜைனம் சைவம் வைதிகம் ஆகிய பல வேறு நெறியைச் சேர்ந்த சமயத் தலைவர்களும், அறிஞர்களும் ஒருங்கே கூடுமாறு செய்து, ஒரு சிறந்த சமயப் பேரவையினை நடத்தியதாக நாம் படிக்கின்றோம். அதனைப் போன்றதொரு சிறப்பு வாய்ந்த சமயத் தலைவர்களின் பேரவை ஒன்று, இந்த ஜூன் மாதம் 12, 13 தேதிகளில், இரண்டாம் முறையாக மீண்டும் சென்னையில் திருமயிலாப்பூரில் கூடியது **"கண்டோம்! கண்டோம்! கண்டோம்! கண்ணுக்கு இனியன கண்டோம்!"** என்றாற்போல

திருமடங்களின் தலைவர்கள் பலரும் கூடியிருந்த காட்சி, கண்டோர் கண்களுக்கும் மனத்திற்கும் விருந்தாக அமைந்தது.

அதுபோது திருமடங்களின் தலைவர்கள் பலரும் தங்கள் பேரருட் பெருந்தகைமையால் ஒன்று கூடிக் கலந்து ஆராய்ந்து இன்புற்று நிறுவியருளியதே "தமிழ்நாடு தெய்விகப் பேரவை" என்பதாகும். நமது தமிழக முதல் அமைச்சர் 'நல்லறங் காவலர்' திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்களும், இப்பேரவை அமைவதற்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து, திருமடங்களின் தலைவர்கள் அருளுரை வழங்கிய பொதுக்கூட்ட நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு, துவக்கவுரை ஆற்றிச் சிறப்பித்தார்கள்.

"சிந்தாமணி, தெண்கடல் அமிர்தம்,
தில்லையான் அருளால்
வந்தால் இகழப் படுமே?"

என மாணிக்க வாசகரும்,

"ஊருணி நிறையவும், உதவும் மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றுகவும்,
கார்மழை பொழியவும், கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின்
றுர்கள்யார்?"

எனக் கம்பநாடரும் பாடியிருப்பது போல, 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை' தொடங்கப் பெற்றுள்ள செய்தியறிந்து சமய வுணர்வுடைய தமிழக மக்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியுற்று வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம் திருமடங்களின் தலைவர்கள் பலரும் கலந்து கூடி நிறுவியுள்ள தமிழ் நாடு தெய்விகப் பேரவை யானது, ஆண்டுதோறும் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப் பெறும் ஒரு திருமடத்தலைவரின் கீழ், சிறந்த பெருமக்கள் சிலரைக் கொண்ட மாநில ஆலோசனைக் குழு ஒன்றின் துணையுடன், அங்கங்கே நிறுவப் பெற உள்ள மாவட்டக் குழுக்கள், உள்ளூர்ச் சங்கங்கள் ஆகிய பல அமைப்புக்களையும் உறுப்பினர்களையும் கொண்டு, வாரவழிபாடுகள், கலை நிகழ்ச்சிகள், சமயப் பிரசாரங்கள், நூல் வெளியீடுகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், பொதுநலப்பணிகள் முதலிய பல்வேறு துறைகளிலும், ஈடுபட்டுத் தொண்டாற்றுதற்குரிய திட்டங்களை வகுத்துள்ளது. தமிழ்நாடு தெய்விகப் பேரவைக்குரிய அமைப்பு விதிகளும் ஆராய்ந்து ஒழுங்கு செய்யப் பெற்று, 1860 ஆம் ஆண்டின் சபைகளின் பதிவுச் சட்டத்தின்படி முறையே பதிவு (Registration) செய்யப் படவும், ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபேறு இதனால்
எற்றைக்கும் திருவருள் உடையோம்"

என்றது போல, இதனால் இனி எதிர் காலத்தில் நம் தமிழகத்தில் சிறந்த சமய மறுமலர்ச்சியும் எழுச்சியும் உண்டாதல் திண்ணம்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் முதற்பெருந் தலைவராகத் திருமடங்களின் தலைவர்கள் அனைவராலும், இவ்வாண்டிற்கு (1966-67) ஒருமனமாக உவப்புற்றுத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருப்பவர், தருமபுர ஆதீன குருமகா சந்நிதானம் கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவர். அவர்களின் அரும்பெறல் அருட்பெருந் தலைமையின் கீழ், தமிழ்நாடு தெய்விகப் பேரவையானது தகவுற வளர்ந்தோங்கவும், பல துறைகளிலும் சிறப்புறப் பணியாற்றி நாட்டிற்கு நலம்பல பெருக்கவும், எல்லாம் வல்ல இறைவன் திருவருளை நாம் வணங்கி வாழ்த்துவோமாக!

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
போதின்லன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.

—சேக்கிழார் சுவாமிகள்.

பொலிக பொலிக பொலிக!
போயிற்று வல்லுயிர்ச் சாபம்,
நலியும் நரகமும் நைந்த.
நமனுக்கிங் கியாதொன்று மில்லை.
கலியும் கெடும்கண்டு கொள்மின் !
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்,
மலியப் புகுந்திசை பாடி
யாடி யுழிதரக் கண்டோம். —நம்மாழ்வார்.

(ஆசிரியர்).

# கச்சியப்ப முனிவர் கவி நலம்

**முன்னுரை ;**

கச்சியப்ப முனிவர் என்பவர், இற்றைக்கு ஏறத்தாழ 180 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த மாபெருங் கவிஞராவர். இவரைக் "கவிராட்சசர்" எனக் கற்றுவல்ல புலவர் பெருமக்கள் பாராட்டிப் புகழ்ந்து போற்றுவர். சிவஞான போதச் சிற்றுரை, பேருரை முதலிய பல பெரு நூல்கள் இயற்றியருளிய மாதவச் **சிவஞான சுவாமிகள்** அவர்களின் மாணாக்கர்களுள் தலைசிறந்தவர் இவரே. இவ்விருவரும் திருக்கயிலாய பரம்பரைத் **திருவாவடுதுறை** ஆதீனத்தைச் சேர்ந்த சிறந்த சைவ சித்தாந்தச் சான்றோர்களாவார்கள். கந்தபுராணம் இயற்றியருளிய கச்சியப்ப சிவாசாரியர், இவரின் வேறானவர்; இவருக்கு மிகவும் முற்பட்டு வாழ்ந்தவர்.

கச்சியப்ப முனிவர் இயற்றியருளியுள்ள நூல்கள் பல. திருவானைக்காப் புராணம், பூவாளூர்ப் புராணம், விநாயக புராணம், காஞ்சிப் புராணத்தின் இரண்டாம் காண்டம் ஆகிய, பல பெரு நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் தம் நூல்களில், அறிஞர்கள் எல்லோராலும் இனிதெடுத்து மிகப் பெரிதும் பாராட்டப்பெறுவது, செய்யுள் நலங்களிற் சிறந்த **திருத்தணிகைப் புராணம்** ஆகும்.

கச்சியப்ப முனிவரின் நூல்கள் பலவற்றுள்ளும் கலைநலம் பெரிதும் சிறந்தது தணிகைப் புராணம். அந்நூல் புலமையின் பெருஞ் சிகரம் எனப் பிறங்குகின்றது; கவிதை நலம் கனிந்தது; சமயக் கருத்துக்கள் நிறைந்தது; தத்துவ நுண்பொருள்கள் செறிந்தது; இயற்கை வருணனைகளாலும், இனிய உவமைகளினாலும் சைவ சித்தாந்த உண்மைகளை ஆங்காங்கே அழகுற விளக்கிச் செல்வது; சங்க நூல்களின் நடைநலம் சான்றது; கற்பனை வளம் சிறந்து நற்பெரும் சுவை பயப்பது; இலக்கண இலக்கியப் பெரும் புதையல் எனத் திகழ்வது; கற்றுவல்லோர்க்கும் தெற்றென விளங்காத கடுமை வாய்ந்தது! இத்தகைய சிறப்புகள் மிக்க தணிகைப் புராணத்தின் இனிய கவி நலங்கள், ஒரு சிலவற்றை மட்டும் இங்குக் காண்போம்,

**விநாயகர் ;**

(1) விநாயகப் பெருமானுக்கு ஐந்து திருக்கைகள் உண்டு, அதனால் அவருக்கு 'ஐங்கரன்' என்றும் ஒரு பெயர் வழங்கும். கச்சியப்ப முனிவர் தம் கற்பனைத் திறனால், விநாயகப் பெருமானின் ஐந்து திருக்கைகளும் செய்யும் செயல்களை அழகுற விளக்குகின்றார்; விநாயகர் தம்முடைய ஒரு கையில் **மோதகம்** ஏந்தியிருக்கிறார். மற்றொரு கையில் **ஏகதந்தம்** ஆகிய ஒற்றைக் கொம்பை வைத்திருக்கின்றார். பிறிதொரு கையில் நீர் நிறைந்த **பொற்கலசம்** இருக்கின்றது. எஞ்சிய இரண்டு கைகளில், **அங்குசமும் பாசமும்,** அமைந்துள்ளன. மோதகம் ஏந்திய கையைத் தமக்காகவும். ஒற்றைக் கொம்புள்ள கையினைத் தேவர்களைப் பாதுகாக்கவும், பொற்கலசம் ஏந்திய கையினைத் தம் தாய் தந்தையர்களாகிய பார்வதி பரமேசுவரனை வழிபடுவதற்காகவும், அவர் பயன் படுத்துகின்றார். இங்ஙனம் ஒவ்வொரு கையினையே பிற செயல்களுக்காகப் பயன் படுத்தும் விநாயகப் பெருமான், தம்முடைய அடியார்களுக்காக மட்டும் **இரண்டு** கைகளை ஒருங்கே தொழிற்படுத்துகின்றார். தம்மை வழிபடும் அன்பர்களாகிய அடியார்களின் துன்பங்களை ஒழித்து இன்பங்களையே தரும் இயல்பினராகிய அவர், ஆணவமலம் என்னும் கொடிய யானையை அடக்கிப் பிணித்து, அடியார்கட்கு அருள் புரிவதற்காக **அங்குசம் பாசம்** என்னும் இருகருவிகளைத் தம் எஞ்சிய இரு கரங்களிலும் ஏந்திக்கொண்டுள்ளார்.

பண்ணியம் ஏந்தும் கரம்தனக்கு ஆக்கிப்,
பால்நிலா மருப்புஅமர் திருக்கை
விண்ணவர்க்கு ஆக்கி, அரதனக் கலச
வியன்கரம், தந்தைதாய்க்கு ஆக்கிக்,

கண்ணில் ஆணவவெங் கரிபிணித்து அடக்கிக்
கரிசினேற்கு இருகையும் ஆக்கும்

அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபற்
சகாயனை அகம்தழீஇக் களிப்பாம்.

விநாயகப் பெருமான் தம் அடியார் களின் மீது கொண்டுள்ள எல்லையற்ற பேரருள் திறனை, இப்பாடலில் இனிதெடுத்து விளக்கியிருக்கும் கச்சியப்பரின் அழகிய கவிநலம் பெரிதும் போற்றுதற்கு உரியது.

## இறைவன் :

சிவபெருமான் உலகின் புற இருளைத் தம் திருமேனியிலுள்ள ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிகளால் நீக்குகின்றார். அசைவில்பொருள் அசையும் பொருள் ஆகிய இரண்டினையும், நம் கண்களுக்குப் புலப்படுத்துகின்றார். உயிர்களைப் பற்றியுள்ள ஆணவமல இருளைத் தம் அருள் ஒளியினால் அழித் தருள்கின்றார். உயிர்களிற் கலந்து நின்று, தன்னையும் தம்மையும் உணர்த்தி அவ்வுயிர்களுக்குப் **பெத்தம் முத்தி** என்னும் இருநிலைகளிலும், **கண்டும் காட்டியும்** உதவி புரிகின்றார். இவற்றின் பொருட்டு எக்காலமும் இடைவிடாமல் ஐந்தொழிற்றிருக்கூத்து ஆடுகின்றார். அதன் பெரும் பயனை ஆருயிர்கள் அனைத்தும் நேரே பெறும் ஆற்றலுடையன அல்ல. ஆதலின், அருள் வடிவமாகிய அம்பிகையின் வாயிலாக அதனை உயிர்கள் பெற்று உய்யும்படி, 'மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே ஆதியும் முடிவும் இல்லாத் தம் அற்புக ஐந்தொழிற் கூத்தினை, அம்பிகைக்குக் காட்டியருளுகின்றார். இத்தகைய சிவபிரானின் திருவடிகளைப் பணிவோம்.

உலகிருள் உருவத்து ஒளிகளின் இரித்து, ஆங்கு
உறுபொருள் எவற்றையும் தெரித்து, உள்

விலகிருள் முழுதும் அருள்கொடு துமித்து,
விராய்ஒளிர் தன்னையும் தன்னால்

இலகுயிர் தனையும் தெரித்து, அறி வுறுக்கும்
இயல்பின்எக் காலமும் பிறழாது

அலகில்அற் புதக்கூத்து, உமையினைக் காட்டும்
அடிகள்சே வடிகளைப் பணிவாம்.

இப்பாடலில் சைவ சித்தாந்தக் கருத்து நுட்பங்கள் பலவற்றைக் கச்சியப்ப முனிவர் சுருக்கி விளக்கிக் காட்டி யிருத்தல் காணலாம்.

## அம்பிகை:

சிவமெனும் செம்பொருள், சத்தியைச் சேர்ந்த வழியே எச்செயலும் செய்யவல்லதாகும். சிவ சக்தியினாலேயே இவ்வுலகப், பொருள்கள் எல்லாம் இயங்குகின்றன. 'அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்'' என்பது சிவஞான சித்தியார். அண்ட கோடிகளை யெல்லாம் ஈன்றெடுத்தவள் அம்பிகையே யாயினும், அவள் என்றும் இளமை குன்றாத எழில் பொருந்திக் கன்னியாகவே விளங்கி வருகின்றாள். ''பவன் பிரம்மசாரி யாவன். பான் மொழி **கன்னியாவாள்**'' என்பது பெரியோர் திருமொழி. இத்தகைய சிவ சத்தியே மும் மூர்த்திகளாகவும், அவர்கள் இயற்றும் முத்தொழிற்கும் மூல காரணமாம் முதல்வியாகவும் விளங்குகின்றாள். இவ்வுண்மையைப் பாமர மக்களும் இனிதுணரும்படி, அவள் தன் திருக்கைகளில் ஏந்தியுள்ள பொருள்களே சான்று பகர்கின்றன.

அம்பிகை தன் கைகளில் சிருக்கு மணி வடம், சங்கு சக்கரம், சூலம், வேல், அங்குச பாசம், கரும்புவில் மலர்க்கணை என்பவைகளை ஏந்தியிருக்கின்றாள், அவைகளால் அம்பிகை ஒருத்தியே, **பிரமன் திருமால் உருத்திரன் முருகன் விநாயகர் மன்மதன்** ஆகியவர்களின் தொழில்களுக்கு எல்லாம் காரணமாதலை நாம் தெளிந்து கொள்ளலாம்.

சீர்அணி சிருக்கு மணிவடம், சங்கு
திகிரி, சூலப்படை, இலைவேல்,

போர்அணி பாசம் அங்குசம், கழைவில்
பூங்கணை, வேறுவேறு அணியா

ஆரணன் மாயன் அரன் இபமுகத்தன்
அநங்கன் என்றிவர் தொழிற்கெல்லாம்

காரணம் ஆதல் தெளித்தருள் கொழிக்கும்
கன்னியை, உன்னி ஏத்தெடுப்பாம்!

இப்பாடல் அம்பிகையின் அருள் நலனையும் திருவுருவச் சிறப்பினையும் அழகுற விளக்குதல் அறிந்து இன்புறத் தக்கது.

**முருகன் :**

இறைவன் எல்லாவற்றிலும் மேம் பட்டவன். ஒளிமயமாகத் திகழ்பவன். ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என்னும் சூக்கும பூதங்கள் ஐந்திலும் அருவமாகக் கலந்து நிற்பவன். அவ்வியல்பினை அறிந்து கொள்ள மாட்டாத பாமர மக்களும் உணர்தற்பொருட்டுப் பருவடிவில் உருவ நிலையிலும் வைத்து உணர்த்துவதே, முருகனின் தோற்றம் பற்றிய வரலாறு கும். சிவபிரானின் நெற்றிக்கண்ணினின்று வெளிப்பட்ட தீப்பொறிகள் முருகன் ஒளி வடிவினனுதலை உணர்த்தும். அப்பொறிகள் முதலில் விசும்பிற் பரந்து நிறைந்தன. அவற்றை வாயு தேவன் திரட்டிக் கொணர்ந்தான். அக்கினி தேவன் அவற்றை எடுத்துச் சென்றான். அவன் அதனைத் தாங்க மாட்டாமையாற் சரவணப் பொய்கை யாகிய நீரில் விடுத்தான். அதன்கண் இருந்து நீங்கி, முருகன் நிலம் எங்கணும் சென்று திருவிளையாடல் புரிந்தான். உலகம் தோன்றுங்கால் விசும்பினின்று வளியும், வளியினின்று தீயும், தீயினின்று நீரும், நீரினின்று நிலமும் ஆகிய ஐம்பூதங்களும் தோன்றும் என வேதங்கள் கூறும். அம்முறையில் உலகங் களுக்கெல்லாம் மூல முதற்காரணனாகிய முருகனின் தோற்றமும் நிகழ்ந்தருளி யமை காணலாம்.

ஓங்குஒளியாய் விசும்புஆதி தொறும்இயலும்
தனதுஇயல்பை, உருவின் மாட்டும்

பாங்குபெறத் தெரித்ததுபோல், பலபொறியாப்
பரமர்விழி பயந்த ஞான்று,

தேங்குஒளியாய், வெளிஅடர்ந்து, வளி
தொடர்ந்து, ஒள்
ஒளிபடர்ந்து, தெளிநீர்ப் புக்கு,

நீங்கி விளையாட்டு அயர்ந்து, தணிகைஅமர்
பெருவாழ்வை நினைந்து வாழ்வாம்.

முருகனின் திருவவதாரத் தத்துவ நுட்பத்தினைக் கச்சியப்பர் இப்பாடலில் விளக்கியிருக்கும் திறம் பெரிதும் போற்றத் தக்கது.

**இயற்கைப் புனைவு :**

ஒரு நல்லிசைக் கவிஞரின் கவிதைச் சிறப்பினை, அளந்தறிந்து சுவைத்து மகிழ் வதற்குப் பல வழிகளுண்டு, அவற்றுள் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் அவர் எங்ஙனம் திறம் படப் புனைந்துரைத்து விளக்கியுள்ளார் எனக் கண்டறிவதும், ஒரு வழியாகும். இயற்கையில் ஈடுபாடும், அதனைப் புனைந் துரைக்கும் ஆர்வமும், கவிஞர்கள் பால் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல் பாகும்.

"கவிஞனின் கண்ணனது, மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினால் விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணி லிருந்து விண்ணையும், சுற்றிச் சுழன்று பார்வை இடுகின்றது; காணவும் அறியவும் படாத பொருள்களின் இயல் புகளைக் கற்பனை உணர்வானது உருவாக்கித் தந்து கொண்டிருக்க, அவைகளைக் கவிஞனின் எழுதுகோல் எழில் கனிந்த கலை ஓவியங்களாக இனிது வடித்துக் கொடுக்கின்றது; காற்றென நுண்ணியவாய்க், காணப்படாமையின் இல்லனவாய் விளங்கும் அவற்றுக்கு, ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது".

வல்லதம் விழியின் வீச்சால்
மண்ணொடு விண்ணும் எல்லாம்

ஒல்லையின் அளந்து தேர்ந்து,
கற்பனை உணர்வின் மாண்பால்

இல்லதொன் றனையும் ஊர்பேர்
இயைபுறப் படைத்துக் காட்டும்,

நல்லியற் கவிஞர் செய்கை
நலமெலாம் நவிலற் பாற்றே?

—* மொழிபெயர்ப்பு, ஆசிரியர்.

எனச் **செகப்பிரியர்,** கவிஞர்களின் இயல்பினை இனிதெடுத்து விளக்குகின்றார்.

---

*"The poet's eye, in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth, from
earth to heaven;
And as imagination bodies forth
The form of things unknown, the poet's pen
Turns them to shapes, and gives to
airy nothing
A local habitation and a name."

—**William Shakespeare,**
A Midsummer-Night's Dream.

இதனால் கவிஞர்களின் கவித்திறனுக்கும் இயற்கைப் புனைவுக்கும், மிக்க பெருந் தொடர்புண்மை இனிது பெறப்படும்.

இங்ஙனம் இயற்கையைப் புனைந்து பாடுவது எல்லாக் கவிஞருக்குமே இயல்பாயினும், கச்சியப்ப முனிவர் இயற்கைப் புனைவுகளில் தத்துவக் கருத்துக்களையும், இலக்கணச் செய்திகளையும் இடைஇடையே மிகுதியாகச் செறித்துப் பாடும் தனிப் பெரும் சிறப்பியல்பு, மிக்குடையவராகத் திகழ்கின்றார். அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்குக் கண்டு இன்புறுவோம்.

**தொண்டை நாடு :**

(1) திருத்தணிகை என்னும் தலம் தொண்டை நாட்டிலுள்ளது. ஆதலின் அந்நாட்டைக் கச்சியப்ப முனிவர் புகழ்ந்து பாட முற்படுகின்றார்: **புகழ்** ஆகிய கவசம் அணிந்து, பல்வகை **அறங்கள்** ஆகிய படைக்கருவிகள் தாங்கி, **வாய்மை சீலம் நோன்பு பக்தி** என்னும் நாற்பெரும் பண்புகளையும் தேர் கரி பரி காலாள் என்னும் நாற்பெரும் படைகளாகக் கொண்டு, **தீவினைகள்** ஆகிய பகைவர்களை அடக்கி வெற்றி கொண்டு, ஓர் அரசனைப் போல விளங்குவது தொண்டை நாடு, என்கின்றார் !

கொடைப்புகழ்க் கவசம் போர்த்துக்
கூர் அறப் படைகள் ஏந்தி

விடைப்பரு வேழம் பொற்றேர்
விரைசெலற் பரியாள் வாய்மை

படைப்பரும் சீலம் நோன்பு
பத்திமை யாகப் பாய்ந்திக்

கடைப்படு பாவத் தெவ்வைக்
கடந்தது, அத் தொன்மை நாடு.

(2) தொண்டை நாடு தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கண நூல்கள் கூறுதற்கு ஏற்ப ஐந்திணை வளங்களும் அமைந்தது. முல்லை நிலமாகிய **காடுகள்** கூந்தலாகவும், குறிஞ்சி நிலமாகிய **மலைகள்** தனங்களாகவும், மருத நிலமாகிய **சோலைகள்** கைகளாகவும், நெய்தல் நிலமாகிய பெரிய **கடல்** கலாபமணிந்த அல்குலாகவும் அமைந்து விளங்க, **நல்லொழுக்கம்** என்னும் கணவனை மணந்து கலந்து, **அறம் பொருள் இன்பம் வீடு** என்னும் மக்களைப் பெற்றெடுத்துப் பாதுகாத்து வளர்த்து, ஒரு தாய்போல விளங்குவது தொண்டை நாடு, எனப் பாடுகின்றார் அவர் !

கருங்குழல் கானில் தோற்றிக்
கதிர்முலை மலையில் தோற்றி

இருங்கையும் பணையில் தோற்றி
எரிமணிக் கலாப அல்குல்

பெருங்கடல் தோற்றி வேத
ஒழுக்கம் ஆம் கணவற் பின்னி

ஒருங்குநாற் பயனும் மக்கள்
உயிர்த்து அளிப்பஃது அந்நாடு.

**பாலாறும் முருகனும் :**

தொண்டை நாட்டிற் பாயும் ஆறுகளில் தலை சிறந்தது பாலாறு. அவ்வாற்றங்கரையிலேயே வளர்ந்து வாழ்ந்து மகிழ்ந்தவர் கச்சியப்ப முனிவர். ஆதலின் அதன் சிறப்பினைப் பலவகைகளில் புகழ்ந்து பாடுகின்றார் அவர் !

(1) பாலாறு ஒரு வகையில் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனைப் போன்று விளங்குவது. முருகன் காந்தள் மலர் வேய்ந்து கொள்வான். களி மயில் ஊர்ந்து கடாவிச் செல்வான். வேலன் வெறியயர் களம் சென்று விளையாடுவான். இங்குலிகம் போன்ற செந்நிறமுடையவனாகச் சேந்தன் என்னும் பேர் பெற்றுத் திகழ்வான்.

அதுபோலப் பாலாறும் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தோடி வருங்கால், காந்தள் மலர்களை வேய்ந்து கொண்டு வருகின்றது. சோலைகளிலுள்ள மயில்கள் அஞ்சிப் பறந்து போகும்படி செய்கிறது. வேலன் வெறி அயர்களம் போன்ற இடங்களிலும், பாய்ந்து பரவித் தேங்கி நிற்கின்றது.

இங்குலிகம் போன்ற செம் மண்ணின் சேறு மிகுந்து சிவந்து தோன்றுகின்றது. இவ்வாற்றால் முருகனைப் போன்றே விளங்கும் சிறப்புடையது பாலாறு.

காந்தள்அம் போது வேய்ந்து
களிமயில் கடாவிப் பல்பூ

வேய்ந்தமென் குழற்கொம்பு அன்னர்
வெறியயர் களந்துச் சார்ந்து

வாய்ந்துஇங் குலிகச் சேற்றின்
வயங்குதன் உருவம் தோற்றிப்

போந்துலாய்ச் சிலம்பிற் செவ்வேள்
போன்றது பாலி நீத்தம்!

**பாலாறும் திருமாலும்:**

2) இம்மட்டோ! முல்லை நிலக் கடவுளாகிய திருமாலையும் போன்று திகழ்கின்றது பாலாறு. திருமால் எடுத்தருளிய அவதாரங்கள் பத்து. அவற்றைத் 'தசாவதாரம்' என்பர். பாலாறு வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிவருங்கால் பல பொருள்களைக் கவர்ந்து அடித்துக் கொண்டு வருகின்றது. அதன் அலைகள் வானளாவி ஓங்கி எழுகின்றன. அதன் வெள்ள நீர் மிகுதியாகப் பெருகிச் சென்று பாய்ந்து கடலைக் கலக்குகின்றது. வயல்களுக்குச்சென்று பாய்ந்து குடைந்து பரவி வளம் படுத்துகின்றது. வெள்ளத்தின் பெருக்கால் ஊர்கள் அழிந்து போய் விடுமோ என்ற அச்சத்தை உண்டாக்குகின்றது. பாலாறு வில் கலப்பை பரசு ஆகிய கருவிகளை அடித்துக் கொண்டு வருவது **இராமன், பலராமன், பரசுராமன்** ஆகிய அவதாரங்களை நினைப்பிக்கின்றது. இடையர் சேரிகளில் பாய்ந்து அவர்களை அஞ்சச் செய்வதனால் இரணியனை அச்சுறுத்திய **நரசிங்கம்**, பால் தயிர் வெண்ணை ஆகியவற்றைக்கவர்ந்து கொண்டு வருதலால், **கிருஷ்ணன்** என்னும் அவதாரங்களை நினைவூட்டுகின்றது. அலைகள் வானளாவி ஓங்கி எழுவதனால், வாமனனாய் வந்து நெடியோனாய் மாறிய **திரிவிக்கிரமன்** என்னும் அவதாரம் போன்றுள்ளது. கடலில் பாய்ந்து கலக்குதலால் **மச்சம் கூர்மம்** என்னும் அவதாரங்களின் நிலையில் விளங்குகின்றது. நிலங்களில் பாய்ந்து குடைந்து வளம் படுத்துதலால் **வராகம்** ஆகிய அவதாரத்தை ஒத்துள்ளது. வெள்ளப் பெருக்கால் ஊர்கள் அழிந்து விடுமோ என்று மக்கள் எண்ணும் நிலையில் பொங்கி எழுந்து வருவதனால், கலியுக முடிவில் தோன்ற உள்ள **கற்கி** என்னும் அவதாரத்தைக் கருதச் செய்கின்றது.

சிலைஅலம் கணிச்சி வெண்ணெய்
தெவ்வி, வான்நிமிர்ந்து, வாரி

நிலைபுகுந்து உழக்கி, ஒல்கும்
நிலன்எடுத்து இருவி, அண்டர்

உலைதர வெறிக்கொண்டு எற்றி,
உறுகலி முடிவு தோற்றித்

தலைவரும் மாயோன் என்னத்
தவழ்ந்தது புறவத்து அம்மா!

இங்ஙனம் திருமாலின் அவதார நிலைகள் பத்தையும் நினைப்பிக்கும் வண்ணம், பெருக்கெடுத்தோடிப் பாய்ந்து வருவது பாலாறு, எனக் கற்பனை வளம் பொலியப் பாடுகின்றார் கச்சியப்ப முனிவர்.

**பாலாறும் இந்திரனும்:**

(3) பாலாறானது விண்ணவர்க்கு அரசனாகிய இந்திரனையும், ஒரு வகையில் ஒத்து விளங்குகின்றது. இந்திரன் தன் உடம்பெல்லாம் செந்தாமரை மலர் போன்ற **கண்கள்** உடையவனாக இருப்பான். கையில் **வச்சிராயுதம்** பற்றி இருக்கின்றான். **ஐராவதம்** என்னும் வாரணத்தை (யானையை) மேற்கொண்டு உலாப் போதருகின்றான். கற்பக மரச் சோலையில் தங்கிக் களிப்புறுகின்றான். அவன் ஒருகாலத்தில் **கற்சிறை** (மலைகளின் இறக்கை)களை அறுத்துச் சிதறும்படி செய்தான். இந்திரனின் இச் செயல்கள் பாலாற்றுக்கும் ஏற்புடையனவாக இருக்கின்றன.

பாலாறு செந்தாமரை மலர்களை அடித்துக்கொண்டு, அவற்றின் **கள்** (தேன்) தன்

மெய்யெல்லாம் பொலியத்தோற்றி வருகின்றது. வைரம் ஏறிய மரங்களையும் வைரமணிக் கற்களையும் கொழித்துக்கொண்டு பாய்கின்றது. வாரணங்கள் (சங்குகள்) பலவற்றை மேற்கொண்டுள்ளது. பூஞ்சோலைகளில் பொருந்துகின்றது. நீண்ட கற்சிறை (அணைக்கட்டு)களை மோதிச் சிதைக்கின்றது.

பூத்தசெந் தாமரைக் கண்
மெய்யெல்லாம் பொலியந் தோற்றித்

தூத்தகை வயிரம் பற்றித்
துலங்கு வாரண மேற்கொண்டு

காத்தலை மருவி நீண்ட
கற்சிறை பலவும் சிந்தி

ஏத்துவிண் அரசன் என்ன
இறுத்தது பழனப் பாங்கர்.

**பாலாறும் வருணனும்:**

(4) வருணன் மேற்றிசைக் குரியவன். கடலுக்கும் அதனைச் சார்ந்த நிலத்துக்கும் உரிமையும் தலைமையும் உடையவன். நெய்தல் நில மக்கள் தங்கள் வலை வளம் தப்பின், புன்னை மரங்களின் சூழலில், மகர மீனின் கொம்பை நட்டு, சுறு மீனின் கொடியைச் செலுத்தி வருணனை வழிபடுவர். வருணனின் இவ்வியல்புகள், பாலாற்றுக்கும் உள்ளனவாகக் கச்சியப்ப முனிவர், கவின் மிகக் கற்பனை செய்து பாடுகின்றார்.

பாலாறும் மேற்குத் திசையின் தொடர்புடையது; கடல்போலப் பரவி நிற்பது; புன்னை மரச் சூழல்களில் துன்னிப் பாய்வது; மகர மீன்களை வெள்ளத்தின்கண் உந்திக் கொண்டு வருவது. இவ்வியல்புகளினால் பாலாறு வருணனைப் போன்று வயங்குகின்றது.

மேற்றிசைத் தொடர்பி னோடும்
விரிகடற் பயிற்சி காட்டித்

தோற்றெழில் நாகச் சூழல்
துன்னும்அத் தொடர்பும் காட்டி

ஏற்றெதிர் மகரம் உந்தி
எங்கில வளனும் போற்றி

ஆற்றல்சால் வருணன் என்ன
அணைந்தது கானற் பாங்கர்.

**நெற்பயிர்:**

(1) வயல்களில் நெற்பயிர் செழித்து வளர்கின்றது. விதையினின்று தோன்றும் முளையானது வெண்மையாக விளங்குகின்றது. அத்தன்மை உயிர்களுக்கு அருள் புரிதலைச் செய்யும் **சதாசிவனின்** வெண்மை நிறத்தை ஒத்துள்ளது. முளை பயிராக மரகதம்போலப் பசுமை நிறத்துடன் தழைத்து வளர்வது, மறைத்தற்றொழிலைச் செய்யும் **மகேசுவரனின்** நீல வடிவத்தை நினைப்பிக்கின்றது. பயிரானது வளர்ந்து கதிர்கள் விட்டுச் செம்பொன்னின் நிறம் பெற்றுத் திகழ்வது, உயிர்களுக்கு இளைப்பாறுதற் பொருட்டு ஒய்வளித்தலாகிய அழித்தற்றொழிலை ஆற்றும் **உருத்திரனின்** சிவந்த வடிவத்தைப் போன்று காணப்படுகிறது. கதிர்களின் சுமையால் பயிர்கள் தளர்வுற்றுத் தலை சாய்ந்து வளைந்திருத்தல், மகவை ஈன்ற மகளிரின் தனங்களைப் போன்றுள்ளது.

மன்னும் சதாசிவன்என்று உடலம் வெண்மை
வாய்ந்து, ஈசன் என நீலஉருவம் பூண்டு,
பின்னர் அரன் எனச்சிவந்த வடிவம் தாங்கும்
பெற்றிமைபோல், வித்துமுளை வெண்மை ஆகி
நன்னர் மரகத ஒளியின் பயிராய் ஓங்கி,
நயந்து அதற்பின் செம்பொன்நிற வயக்கம் மாண்ட
கொன்னும்விளை வாய்ப்பழுத்து, நாளும் தாழ்ந்த;
குழவி பயந்தவர் மணிப்பூண் கொங்கை என்ன!

(2) இங்ஙனம் உழவர் விதைத்த சில விதைகளை ஏற்றுப் பல மடங்காகப் பெருக்கி வயல்கள் நெல்லை விளைவித்தமை, சிறந்த சிவஞானியர்களின் கையில் அளித்த சிறிய தானமும், பெரும்

புண்ணியத்தை விளைவிக்கும் உண்மையினை உணர்த்துவதாக உள்ளது. முதலில் பசுமை நிறமாயிருந்த நெல் மணிகள், பின்னர்ப் பொன்னிறம் அடைந்து, அறங்கள் பலவும் ஆற்றப் பயன்படுகின்றன. அவ்வியல்பு, பசுமை நிறம் கொண்ட **பார்வதி** தேவியானவள் கயிலையினின்று நீங்கி, கவுரம் என்னும் பொன்னிறம் கொண்ட திருமேனியையுடைய **காமாட்சி** ஆகிக் காஞ்சிபுரம் அடைந்து, 32 அறங்களும் ஆற்றியருளிய அருட்பெருஞ் செயலைக் குறிப்பிக்கின்றது.

பரவுசிவ ஞானம்உணர் அடியார் செங்கைப்
படுத்தபொருள் பெரும்பயனைப் பயக்கு மாபோல்,
விரவும் உழவர்கள் அளித்த சிலகொண்டு, ஆற்ற
வியன்பணைகள் பெரும்பயனு விளைத்த சாலி,
மரகதமெல் உருத்தணந்து,கவுர மேனி
வயங்கி, அறம் பற்பலவும் வளர்க்கும் ஆற்றல்,
இரவுவளர் கதிர்ச்சடிலக் குழகன் பாங்கர்
இருந்தருளும் உமைமாதும் புரையும் அன்றே!

இப்பாடல் "பாத்திரமறிந்து பிச்சை இடு" என்றபடி தக்க சான்றோர்களுக்குச் செய்யும் தானம், "தான் சிறிதாயினும் தக்கோர் கைப்பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்துவிடும்" என்னும் உண்மையை அழகுற விளக்குகின்றது. மேலும், "சிவஞானச் செயலுடையோர் கையில் தானம், திலம் அளவே செய்திடினும் நிலம் மலைபோல் திகழும்..." (278) என வரும் சிவஞான சித்தியார் செய்யுட் கருத்தையும் இப்பாடல் அழகுற விளக்கியிருத்தல் காணலாம்.

(3) நெற்பயிர் வளர்ந்து, கதிர்கள் தோன்றி முற்றி விட்ட பின்னர், உழவர்கள் வயலில் உள்ள நீரை எல்லாம் பயிருக்குக் கேடு நேராமையின் பொருட்டு வடித்து விட்டு விடுவர். இவ்வியல்பு, உடல் கருவி உலகம் நுகர்ச்சி என்னும் எல்லாவற்ருேடும் கூடி இருந்தும், உலகப் பொருள்களை எல்லாம் சிவ மயமாகக் காணும் திறன் பெற்ற சீவன் முத்தர்கள், உலக நுகர்ச்சிகளில் தம் உள்ளம் செலுத்தாமல், அவற்றை யெல்லாம் இயல்பாகத் துறந்து ஒழித்து விடும் சிறப்பினைப் போல விளங்குகின்றது.

உடல்கருவி புவனமுறு போகம் எல்லாம்
உடங்கியைந்தும், சிவன்தோற்றம் ஒன்றே காணும்
மடனகன்ற சீரடியார், நுகர்ச்சி யாதும்
மருவாமை ஒழித்துநிற்கும் வாய்மை ஒப்ப,
இடன்அகன்ற தளைகள்தொறும் விளைந்த சாலி
இரும்புனல்வேண் டாமைஒழி பருவம் நோக்கித்
தடநெடுந்தோள் உழவரெல்லாம் அண்மி, யாத்த
தண்புனலைக் கவிழ்த்துணக்கும் தொழிற் கண் நின்ருர்.

இப்பாடல் சீவன் முத்தர்களின் இயல்பை இனிது விளக்குகின்றது. "பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" எனவும், "சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்" எனவும் கூறும் சிவஞான சித்தியார் பாடல்களை அடியொற்றி இப்பாடல் அமைந்துஇருத்தல், நாம் அறிந்து இன்புறத்தக்கது.

**தணிகையின் சிறப்பு:**

தணிகையின் சிறப்புக்கு எல்லையில்லை. செல்வம், அழகு அறிவு ஆற்றல் அருள் முதலிய பண்பு நலங்கள் உடைய எவரையேனும் சிறப்பித்துக் கூற விரும்புவோர், "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்னும் தொல்காப்பிய விதியின்படி முருகனையே உவமையாகக் கூறுவது மரபு. உவமேயத்தைவிட உவமையே எவ்வகையிலும் உயர்ச்சி யுடையதாகும் என்பது அறிஞர் துணிபு. "தாமரை போன்ற முகம்" என்னும் தொடரில் முகம் **உவமேயம்**. தாமரை **உவமை**. முகத்தின் அழகைச் சிறப்பிக்கத் தாமரை உவமையாக வந்திருந்தாலும், முகத்தின் அழகைக் காட்டிலும் தாமரையின் அழகே மிகவும் சிறப்புடைய தென்பதை யாவரும் உடன்படுவர். இதனுல் உவமே

யத்தினும் உவமையே சிறப்புடையதாதலை உணரலாம். முருகன் பிறருக்கு உவமையாகக் கூறத்தக்கவன். ஆனால் அவனுக்கு உவமையாகக் கூறத்தக்கவர் வேறு எவரும் இலர். தனக்குவமை யில்லாதவன் முருகன். அதுபோல அப்பெருமான் எழுந்தருளி விளங்கும் திருத்தணிகையும் பிற தலங்களுக்கு உவமையாகுமே அன்றி, அதற்கு இணையாக உவமை கூறத் தக்க தலம், இவ்வுலகில் எதுவுமில்லை. ஒப்புயர்வற்ற அத்துணைச் சிறப்பு அமைந்தது திருத்தணிகை!

திரு விளங்கிய வனப்பினில் அறிவினில்
திறத்தினில் அருள்தன்னில்
ஒருவர் தங்களை உயர்த்தமுன் முருகனை
உவமை ஆக்குவர்; அன்னான்
பொருவில் வள்ளியொடு ஆடிடம் ஆகிய
புகழ்த்தணிகையும், யாங்கும்
ஒரு நகர்க்கு அணி யுயர்த்தமுன் உவமையா
உரைப்பதால் எவராலும்.

(2) தணிகை நகரம் மூன்று பகுதிகளையுடையது. புடை நகர் அசுத்தம் என்னும் தத்துவம் போலப் பொலிகின்றது. இடை நகர் சுத்தா சுத்தம் என்னும் தத்துவம் போல இலங்குகின்றது. இதற்கும் உள்ளே நின்ற அகநகர் சுத்தம்என்னும் தத்துவம் போலத் திகழ்கிறது. இம் மூன்று தத்துவங்களையும் கடந்து தனிப்பெரும் சிறப்பில் விளங்கும் சிவபரம் பொருள் போல, இம் மூவகைப்பட்ட நகர்ப் பகுதிகளையும் கடந்து மிகவும் ஓங்கித் தணிகை மலை விளங்குகின்றது.

புடைநகர்த் தலை அசுத்த தத்துவம்எனப்
பொலிந்தது; வளஞ் சான்ற
இடைநகர்த் தலை இலங்கு சுத்தாசுத்தம்
எனப் பொலிந்தது; அஃதுள்ளால்
மிடைநகர்த் தலை சுத்ததத்துவம் என
விளங்கியது; அவை மூன்றும்
உடைய தத்துவம் அவைகடந்து ஒளிர்வது ஒத்து
ஓங்கியது, உயர்குன்றம்.

(3) தணிகையின் புடை நகரமானது வேல் வாள் ஈட்டி முதலிய படைக் கருவிகளை வீரர்களின் பொருட்டுப் படைத்துக் கொடுப்பதனால் பிரமனைப் போலும்; ஆடவர் மாதர்களைக் காத்துப் போகங்களை விளைவிப்பதனால், இடைநகர் திருமாலை ஒக்கும்; தன்னை அடைந்தோரின் துன்பங்களைப் போக்கிக் குற்றங்களை அழிப்பதனால், அகநகர் உருத்திரனை நிகர்க்கும்.

ஆய பல்படை ஆதிகள் ஆக்கலிற்
புடைநகர் அயன் போலும்;
மாய மென்மொழி மயக்கில் ஆடவர்துனி
மாதரை உயிர்காத்து
மேய போகங்கள் விளைத்தலின் இடைநகர்
விண்டு ஒத்திடும்; உற்றோர்க்கு
ஓய இன்னல்கள் அறன்கடை துடைத்தலின்
உள்நகர் அரன் நேரும்.

(4) தன்பால் வந்து அடுத்து நிற்பவர்களின் இளைப்பை நீக்குவதனால் புடை நகர் உருத்திரனையும், மாதர்கள் மறைத்து நல்கும் இன்பம் நிறைந்த காதல் வாழ்வினை அளித்தலால் இடை நகர் மகேசுவரனையும், மக்கள் விரும்பும் பொருள்களை யெல்லாம் வழங்கி அநுபவிக்கச் செய்வதனால் அகநகர் சதாசிவனையும், இணையாகக் கூறும்படி தணிகை மா நகரம் விளங்குகின்றது.

அடுத்துளோர் இளைப்பு அலர்கயப்
பொழில்களால்
அனுக்கலால் அரன் போலும்;
மடுத்த மாண்எழிற் புடைநகர் மாதரார்
மறைத்து நல்கிடும் இன்பம்
தொடுத்த காதலின் இடைநகர் ஈசனைத்
துணையும்; வேட்டன துய்ப்பக்
கொடுத்து மேவலின் உள்நகர் சதாசிவக்
கொற்றவன் தனை நேரும்.

(5) தணிகை மாநகரில், பாதலம் வரையில் ஆழ முற்று விளங்கியும் பொருள்களை மறைத்து நிற்பன, மதில்களைச் சூழ்ந்துள்ள அகழிகள் மட்டுமல்ல; அறிஞர்கள் ஆராய்ந்து இனிது அமைத்த அரிய செய்யுட்களும் ஆகும். (முழங்கால் அளவும்) தாழ்ந்து கிடந்தாலும் புகழத்

தக்கனவாக விளங்குவன, மைந்தர்களின் பெரிய **கைகள்** மட்டுமே அல்ல; பலவகை அறச் செயல்கள் நிறைந்த அவர்களின் **மனங்களும்** ஆகும். அறுக்கப்பட்டுக் கிடந்தும் அணிந்து கொள்ளப்படுவன மாதர்கள் அணியும் **வளையல்கள்** மட்டுமே அல்ல; போர் புரியும் மத யானைகளின் **தந்தங்களும்** ஆகும். சோலைகளின் உள்ளே விழுந்து கிடந்தாலும் உயர்வு உடையன, **மலர்கள்** மட்டுமே அல்ல; மகளிர் தம் கணவருடன் ஊடல் கொண்டு வீசி எறிந்த விலையுயர்ந்த **பொருள்களும்** ஆகும்.

ஆழ்ந்து கிடந்தும் கரப்பது அகழ் அன்று, ஏனை
அறிஞர் இனிதமைத்த அருஞ்செய்யுள் தானும்;

தாழ்ந்து கிடந்தும் புகழத்தக்க, மைந்தர்தடம்
கரம் அன்று, அவர் அறஞ்சொல் நெஞ்சம் தாமும்;

போழ்ந்து கிடந்தும் புனைவ வளை அன்று, ஏனைப்
பொருகளிற்றுக் கோடுகளும்; பொழிலின் உள்ளால்

வீழ்ந்து கிடந்தும் உயர்வ மலர் அன்று, ஏனை
வியன்நகருள் வெறுத்த பொருள் பலவும் அன்றே.

இப்பாடலில் நகரின் அகழிச் சிறப்பு, மக்களின் சிறப்பு, இயற்கைவளச் சிறப்பு, செல்வம் நிறைந்த இன்ப வாழ்வின் சிறப்பு, சான்றோர் செய்யுட்களின் சிறப்பு ஆகியவற்றை எல்லாம், கற்போர் உள்ளம் களிதுளும்பும்படி கச்சியப்பர் பாடியிருத்தல் காணலாம்,

**முடிவுரை:**

இதுகாறும் விளக்கிய ஒரு சில செய்யுட்களின் சுவைத்திறனைக் கொண்டே, கச்சியப்ப முனிவரின் கற்பனை நயம் செறிந்த கவி நலம் எத்தகையது என்பதனை, யாவரும் எண்ணி உணரலாம். இன்னோரனைய இனிய கவிஞர் பெரு மக்களையும், அவர்கள் இயற்றியருளிய தெய்வத் தீந்தமிழ்க் கவிதைகளையும் கற்றுச் சுவைத்துப் போற்றி வருவது நம்மனோர் கடமையாகும்.

— ஆசிரியர்.



★

ஆலயத் தூய்மை குறித்து, சென்னை இலிங்கி செட்டித் தெரு - ஸ்ரீமல்லிகேசுவரர் தேவஸ்தானத் திற்குப் பரிசு வழங்கப் பெறுதல்.
(26-3-66)

★

# விடை தெரியுமா?

1. 'சிவன்' என்னும் சொல்லின் பொருள்களைப் பெரியோர்கள் எவ்வெவ்வாறு விளக்கியுள்ளனர்?

2. 'பிரதோஷ காலம்' என்பது எது? அது பற்றிய புராணச் செய்தி என்ன?

3. 'சடங்கவி சிவாசாரியர்' என்பவர் யார்? அவருக்கு அப்பெயர் அமைந்தமை யாங்ஙனம்?

4. 'பஞ்ச கோசங்கள்' என்பன யாவை? அவற்றின் இயல்பினை விளக்குக.

5. கொண்டாடப் பெறும் நாட்களை ஒட்டித் 'திருவிழாக்கள்' எத்தனை வகைப் படும்? முறையே அவற்றின் பெயர்களையும், நாட்களையும் குறிப்பிடுக.

6. 'கோபப் பிரசாதம்' என்பது யாது?

7. 'ததிபாண்டன்' என்பவன் யார்? அவனைப் பற்றிய குறிப்பு வரும் பாடல் ஒன்றைச் சுட்டுக.

8. "ஒளியா வெண்ணெய் உண்டானென்று
உரலோடு ஆய்ச்சி ஒண்கயிற்றால்
விளியா ஆர்க்க ஆப்புண்டு
விம்மி அழுதான்; மென்மலர்மேல்
களியா வண்டு கள்ளுண்ணக்
காமர் தென்றல் அலர்தூற்ற
நளிர்வாய் முல்லை முறுவலிக்கும்
நறையூர் நின்ற நம்பியே"

என்னும் பெரிய திருமொழிப் பாசுரத்தின் வியாக்கியானத்துட் காணப்படும் ஐதிஹ்ய நிர்வாஹம் யாது?

9. "போம் பழியெல்லாம் அமணன் தலையோடே எனனுமா போலே" என்ற ஸ்ரீ ஸூக்தி எங்கே, எதற்காக அருளிச் செய்யப் பெற்றது? விளக்குக.

10. ஸ்ரீ இராமாநுஜர் நியமித்தருளிய 74 சிம்மாசனாதிபதிகள் யார் யார்? அவர்களின் பெயர்களை முறையே குறிப்பிடுக.

[விடை: மறு பக்கம் காண்க]

# விடை விளக்கம்

1 **சிவன்** என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் பல பொருள்கள் குறிப்பிடுவர். மங்கல குணத்தவன் என்றும், அனாதியே மலம் நீங்கி நிற்பவன் என்றும், **சிவஞான சுவாமிகள்** பொருள் கூறுவர்.

"குறைவிலா மங்கல குணத்தன் ஆதலின்
நிறைமலம் அனாதியே நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன்என அறிவின் மேலவர்
இறையவன் பெருமையை யாவர் கூறுவார்"

என்பது காஞ்சிப்புராணச் செய்யுள். திருக்கோவையார் உரையின் கண் (358), **பேராசிரியர்**, சிவன் என்னும் சொல்லுக்கு 'எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மைகள் செய்பவன்' எனப் பொருள் விளக்கியுள்ளார்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்** அவர்கள் "முற்றறிவு முற்றுத் தொழில் உடையவன்; அதி சுத்தம் வாய்ந்தவன்; இறுதிக் காலத்து உலகமெல்லாம் தன்னிடத்தில் ஒடுங்கிக் கிடக்கப் பெறுபவன்; நல்லோருடைய மனங்கள் தன்பால் ஈடுபட்டுக் கிடக்கப் பெறுபவன்; ஆன்மாக்களின் மல வலிமையை மெலிவித்து அருளாற்றலை மிகுவிப்பவன்; பேரொளி மயமானவன்" எனப் பல பொருள்கள் கூறுவர். ஆசிரியர் **மெய்கண்டார்** தமது சிவஞான போத வெண்பா ஒன்றில், பேரின்ப காரணன்; முற்றுணர்வினன்; தூய தன்மையன் எனப் பொருள் விரித்தருளியுள்ளார்.

இனி ஒரு சிலர், **சிவணுதல்** என்னும் சொல்லுக்குப் பொருந்துதல் என்பது பொருள்; ஆதலின் "எல்லாப் பொருள்களும் தன்பாற் பொருந்தியும், தான் எல்லாப் பொருள்களிலும் பொருந்தியும் விளக்கமுற்றுத் திகழ்பவன் எவனோ, அவனே சிவன்" எனப் பொருள் கூறுவர். இப்பொருளைத் தழுவி

ஊனாகி ஊனுள் உயிராய் உயிர்தோறும் ஆகி
வானாதியான பொருளாய் மதியாகி வெய்யோன்
தானாகி ஆண்பெண் உருவாகிச் சரா சரங்கள்
ஆனான் சிவன்! மற்றுஅவன் நீள்கழற்கு அன்புசெய்வாம்!

என்பது கச்சியப்ப சிவாசாரியாருடைய கந்தபுராணச் செய்யுள்.

---

1 **Max Muller** has shown that the use of such words as Rudra, Hara, **Siva**, to denote the Highest God, is much earlier than the use of such words as 'Brahman,' 'Atman' and 'Paramatman' and, in fact, these words do not occur in the Rig Veda at all, to denote the Highest God."

2 Of all Indian preachers, it was the late matakhandana **Venkatagiri Sastrin** that used to dwell on this Universal aspect of the Siddhanta in respect of naming God as 'He', 'She', and 'It' and he used to point out that all names of **Siva** are declinable in all the three genders without change of meaning, whereas other names do not admit of change, and even if they do, the word is meaningless or means something else."

—**J. M. Nallaswami Pillai,** B.A.,B.L.,
Studies in Saiva Siddhanta, P. 4, 230.

2 **பிரதோஷ காலம்** என்பது சுக்கில பட்சம் (வளர்பிறை), கிருஷ்ண பட்சம் (தேய்பிறை) என்பவற்றில் வருகின்ற திரயோதசி திதியிலே, மாலை $4\frac{1}{2}$முதல் $7\frac{1}{2}$ மணிவரை உள்ள காலம் ஆகும். சிவபெருமான் ஆலாலம் என்னும் நஞ்சினை உண்டருளிய நாள் **ஏகாதசி**. அந்நாளில் தேவர்கள் அனைவரும் உணவருந்தாமல் இருந்து சிவபிரானைப் பூசித்தனர். தேவர்கள் செய்த பூசனைக்கு மகிழ்ந்த சிவ பெருமான் அவர்களுக்கு அமுதத்தை வழங்கினர். தேவர்கள் தங்கள் பூசையை முடித்துக் கொண்டு இறைவன் அளித்த அமுதத்தை அருந்திய நாள் **துவாதசி.** மறுநாள் சூரியன் மறைவதற்கு 3-3/4 நாழிகை முதல், திரயோதசியோடு கூடிய நாளில், துன்பத்தில் ஆழ்ந்து வருந்தும் உயிர்களெல்லாம் இன்பம் அடைதற் பொருட்டு, உமாதேவியார் காணும்படி சிவபெருமான் தமது திருக்கையில் டமருகம் (உடுக்கை) ஏந்தி, $7\frac{1}{2}$ நாழிகை திரு நடனம் செய்தருளினர். அந்தக் காலமே **பிரதோஷ காலம்** ஆகும் என்பது புராணச் செய்தி. பிரதோஷ தினத்தன்று சனிக் கிழமையும் சேர்ந்து வருமாயின் அது மிகவும் சிறப்பானதாகும். பிரதோஷ விரதம் நோற்க விரும்புவோர் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ஏதேனும் ஒன்றில் வரும் சனிப் பிரதோஷம் முதலாக அனுஷ்டித்துப் பயன் பெறலாம். பிரதோஷ நாளில் திருக்கோயிலுக்குச் சென்று விதிப்படி அன்புடன் வழிபட்டால் எல்லா நலங்களும் பெறலாம்.

3. நம்பி ஆரூரர் ஆகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு நிகழ்ந்த முதல் திருமணத்தின்போது, அவருக்குப் பெண் கொடுத்த மறையவரின் பெயர், **சடங்கவி சிவாசாரியார்** என்பதாகும். இவர் **புத்தூர்** என்னும் ஊரில் இருந்தவராதலின் 'புத்தூர்ச் சடங்கவி மறையோன்' எனவும் வழங்கப் பெறுவர்.

தந்தையார் சடைய னார்தம் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துட் டங்க ளரும்பெரு மரபுக் கேற்ப
வந்ததோர் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன் றன்பாற்
செந்திரு வனைய கன்னி மணத்திறஞ் செப்பி விட்டார்.

எனவரும் பெரிய புராணப் பாடலால் இதனை உணரலாம். வேதத்தின் அங்கங்கள் ஆறு. அவைகள் முறையே 1 சிட்சை 2. கற்ப சூத்திரம் 3. வியாகரணம். 4. சந்தோபிசிதம் 5. நிருத்தம் 6. சோதிடம் என்பன. அவற்றை **ஷடங்கம்** என்பர். ஷடங்கம் எனப்படும் ஆறு அங்கங்களையும் கற்றுத் தேர்ந்த பெரு மக்களுக்கு ஷடங் கவித் என்பது பெயர். **ஷடங்கவித்** என்பதே, **சடங்கவி** என மருவி வழங்கப் பெறுவதாயிற்று. பெரியோர்களை இயற் பெயரால் கூறுமல், அவர் தம் சிறப்புப் பெயரால் குறிப்பது மரபு. அம்முறைப்படி இவர் தம் இயற்பெயர் மறைவுறச் சிறப்புப் பெயரே வழங்கப் பெற்றது.

4. நம்முடைய உடல் தூல சரீரம் எனப்படும். இவ்வுடலுக்குள்ளாகச் சூக்கும சரீரம், குண சரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம் என நான்கு சரீரங்கள் உள்ளன. இவற்றை முறையே அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் எனவும் வழங்குவர். **கோசம்** என்பது உறை என்னும் பொருளுடையது.

(1) பிருதிவி முதலிய தூல பூதங்களால் உண்டாகிய சரீரம் **தூலசரீரம்.** இது அன்னத்தால் (உணவால்) வளர்க்கப்படுதலின் **அன்னமய கோசம்** எனப்படும்.

(2) சூக்கும பூதங்களாகிய தன் மாத்திரைகளால் இயன்ற சரீரம். **சூக்கும சரீரம்** எனப் பெயர் பெறும். சூக்கும சரீரம் பிராணன் என்னும் வாயுவோடு கூடி நிற்றலால் **பிராணமய கோசம்** என்றும் வழங்கும்.

(3) சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்களாலாகிய சரீரம் **குண சரீரம்** ஆகும். அது மனம் முதலிய அந்தக் கரணங்களைத் தன்னுள் அடக்கி நிற்றலின் **மனோமய கோசம்** என்று சொல்லப்படும்.

(4) காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும் உயிர்க்குக் கஞ்சுகம் என்னும் சட்டை போன்று இருத்தலால், அவற்றால் அமையும் சரீரம் **கஞ்சுக சரீரம்** எனப்படும். உயிரின் அறிவிச்சை செயல்கள் சிறப்பு வகையால் விளக்கமுற்றுப் பொருள் நுகர்ச்சிகளை அறிதலில் உயிர்க்குத் துணை செய்தலின், இச்சிறப்பறிவை உண்டாக்கும் சரீரம் **விஞ்ஞானமய கோசம்** என வழங்கப்படும். (விஞ்ஞானம்-சிறப்பறிவு).

(5) அசுத்தமாயா தத்துவம் மற்றைய தத்துவங்களுக்கும் செயல்களுக்கும் காரணமாயிருப்பதால், அதனால் உண்டாகும் சரீரம் **காரண சரீரம்** ஆகும். அச் சரீரம் பெற்ற அளவில், ஆணவ மலத்தில் அழுந்திக் கிடந்த ஆன்மாவுக்கு அறிவு இச்சை செயல்கள் பொது வகையால் ஒரு சிறிது விளக்கமுறும். அங்கிலையில் ஒரு சிறிது ஒருவகை ஆனந்தம் நிகழப்பெறும். ஆதலின் காரண சரீரம் **ஆனந்தமய கோசம்** எனவும் வழங்கப் பெறும்.

தூலம் சூக்குமம் குணம் கஞ்சுகம் காரணம் என்னும் இப்பஞ்ச கோசங்களும் முறையே ஒன்றுக்கொன்று சூக்குமமாய் நுணுகி அமைந்திருக்கும். இந்த ஐந்து கோசங்களால் பிணிக்கப்பெற்று, ஆன்மாவானது அவற்றோடு அதுவதுவாயும், அவற்றின் வேறாயும் இயங்கி நிற்கும்.

ஆனந்தமய விஞ்ஞானமய கோசங்களான, காரண கஞ்சுக சரீரங்களின் அமைப்பிற்குத் **தோற்பாவைக் கூத்தும்**, மனோமய பிராணமய கோசங்களாகிய குண சூக்கும சரீரங்களுக்கு **மரப்பாவையின் இயக்கமும்**, அன்னமய கோசமாகிய தூல சரீரத்திற்குத் **தேரின்ஓட்டமும்** உவமைகளாக ஞான நூல்களில் கூறப்படும். மனிதன் ஒருவனே வெவ்வேறு வேடங்கள் புனைந்து கொண்டு நடிப்பது போல, ஆன்மா ஒன்றே வெவ்வேறான இப்பஞ்ச கோசங்களிற் பிணிப்புண்டு இயங்கி நிற்கும்.

மருவு ஆனந்தம் விஞ்ஞானம் மனோ பிராணன் அன்னமயம்
உருவாம் தன்மை உண்டாய், முன் ஒன்றுக்கொன்று சூக்குமமாய்
வரும்ஆம்; அன்ன மயம்பற்றி மாயை முதற்காரணம் ஆகும்;
அருவாம் ஆன்மா, ஐங்கோசத்து ஆர்ப்புண்டு, அவற்றின் அகம் புறம் ஆம்.

தோற்பாவைக் கூத்தும், தொல்லை மரப்பாவை இயக்கமும், சேர்த்
தேர்ப் பாரிற் செலவும், வேறாய்ச் செலுத்துவோர் செய்தி தானும்,
பார்ப்பாய வேடம் கட்டி ஆடுவோர் பரிசும் போலும்!
ஆர்ப்பாய காயம் தன்னை ஆன்மாநின்று ஆட்டு மாறே

— சிவஞானசித்தியார்: 213, 214.

5. கொண்டாடப் பெறும் நாட்களை ஒட்டிக் கோயில் திருவிழாக்கள் ஒன்பது வகைப்படும் என்று தெரிகின்றது. விழாவின் பெயர்களும், முறையே அவற்றிற்குரிய நாட்களும் பின் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | சவுரம் | 27. நாட்கள் |
| 2. | சாந்திரம் | 17. நாட்கள் |
| 3. | சாவித்திரம் | 15. நாட்கள் |
| 4. | கவுமாரம் | 13. நாட்கள் |
| 5. | தைவிகம் | 9. நாட்கள் |
| 6. | பவுநம் | 7. நாட்கள் |
| 7. | பவுதிகம் | 5. நாட்கள் |
| 8. | கணம் | 3. நாட்கள் |
| 9. | சைவம் | 1. நாள் |

சவுரம் சாந்திரம் சாவித்திரம் கவுமாரம்
தைவிகம் தழை பவுநம்
பவுதிகம் கணம் சைவம் என ; முறையே
இருபத்தேழ் பதினேழு பதினைந்து
உவமையில் பதின்மூன்று ஒன்பது ஏழ்ஐந்தாம்
ஒருமூன்று ஒன்று இயற்றுநாள் என்னும்
தவமுளார் புகழும் ஆகமம் ; சிறந்த
தவமிய முனிவன் மாணுக்க !

— திருப்பெருந்துறைப் புராணம்.

6. 'கோபப் பிரசாதம்' என்பது ஒரு நூலின் பெயர்; நக்கீர தேவநாயனுர் பாடியருளியது; பதினொன்றும் திருமுறையிற் சேர்க்கப் பெற்றுள்ள பிரபந்தங்களுள் ஒன்ருகத் திகழ்வது. கொடியவர்களைக் கடிந்து ஒறுத்தும், அடியவர்களை நயந்து அருள்புரிந்தும், ஆட்கொண்டு நலம் புரியும் இறைவனின் அருட்டிறனைப் புகழ்ந்து பாடுவது.

"இன்னவை பிறவும் எங்கள் ஈசன்
கோபப் பிரசாதம் கூறுங் காலை"

என இந்நூலில் வருதல் காணலாம். கடிந்து ஒறுத்தல், மறக்கருணை (கோபம்); நயந்து அருள்புரிதல் அறக்கருணை (பிரசாதம்). இவ்விருவகைக் கருணைத் திறனையும் விளக்கி யிருத்தலால், இந் நூலுக்குக் "கோபப்பிரசாதம்" எனப் பெயர் அமைந்தது. கோபமும் பிரசாதமும் என உம்மைத் தொகை விரியாகக் கொள்ளுதல் வேண்டும்.

காமன் உடல்; உயிர்காலன்; பல் காய்கதிரோன் ;
நாமகள் நாசி; சிரம் பிரமன்; கரம் எரியைச்;
சோமன் கலை; தலை தக்கனையும் எச்சனையும்;
தூய்மைகள் செய்தவா தோள்நோக்கம் ஆடாமோ

என மணிவாசகர் பாடுதற்கேற்ப, இறைவன் கோபித்தலும் ஒருவகை அருளேயாம் ஆதலின், கோபம் ஆகிய பிரசாதம் என இருபெயரெட்டுப் பண்புத் தொகையாகவும், இத்தொடருக்குப் பொருள் கொள்ளுதல் பொருந்தும்.

7. **ததிபாண்டன்** என்பவன் ஆயர்பாடியில் வாழ்ந்திருந்த ஓர் இடையன். கண்ணபிரான் ஒருநாள் வெண்ணெய் களவு செய்தார். அதனை யறிந்த யசோதைப் பிராட்டியார் கண்ணனைத் தண்டிக்க எண்ணிப் பிடிப்பதற்கு ஓடி வந்தாள். அப்போது கண்ணபிரான், ததிபாண்டன் என்னும் இடையனின் வீட்டிற்குள் ஓடிச் சென்று, அங்கிருந்த ததிபாண்டனை நோக்கி, "என் தாயார் என்மேல் வெகுண்டு என்னைத் தண்டிக்க வருவதனால், என்னை உன்னுடைய தயிர்த் தாழியின் கீழே மூடி மறைத்து வை" என்று வேண்டிக் கொண்டார். அவனும் அவ்வாறே செய்து, யசோதைக்குக் 'கண்ணன் இங்கு வரவில்லை' என்று சொல்லி அனுப்பி விட்டான். பின்னர்க் கண்ணன், ததிபாண்டனிடம் தன்னைத் தயிர்த்தாழியினின்று வெளியே விடுவிக்குமாறு கூறினார். ஆனால் முன் பல பிறவிகளில் செய்த பெருந் தவத்தின் பயனாகத் ததிபாண்டன், கண்ணனைச் சாதாரணக் குழந்தையாக நினையாமல் கடவுளின் திருவவதாரமெனவே உணர்ந்திருந்தானாதலால், அவர் எல்லோர்க்கும் எளியனாய் அருள் புரிந்து வரும் இந்நிலையில் தானும் பெரும் பேறு அடைய வேண்டுமென விரும்பி, தயிர்த்தாழியின் மேல் ஏறி அமர்ந்து கொண்டு "எனக்குத் தேவரீர் வீடுபேறு அளித்தாலன்றித் தங்களை யான் வெளியில் விடமாட்டேன்" என்று கூறி விட்டான். கண்ணனும் அவனது தவமும் தகுதியும் அறிந்தவராதலின், அங்ஙனமே "நினக்கு வீடுபேறு அளித்தேன்" என்றார். ஆனால் ததிபாண்டன் அப்பொழுதும் அவரை விடுவியாமல், "தங்கள் அருளைப் பெறுவதில் எனக்குத் துணையாக இருந்த இத் தயிர்த்தாழிக்கும் கூட மோட்சம் அளித்தல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். கண்ணபிரானும் தன் நிர்ஹேதுக பரம கிருபையால் அவன் விருப்பத்தின்படியே, "தாழிக்கும் வீடுபேறு தந்தேன்" என்றருளிச் செய்தார் என்பது வரலாறு. இவ்வரலாற்றைப் பின்வரும் பாடல்கள் உணர்த்துதல் காணலாம்.

"சிந்திக்க நெஞ்சில்லை; வாயில்லை நாமங்கள் செப்ப; நின்னை
வந்திக்க மெய்யில்லை வந்திரு போதும்; மொய்ம் மாமலர்ப்பூம்
பந்தித் தடம்பொழில் சூழரங் கா! ததி பாண்டன்உன்னைச்
சந்தித்த நாள்முத்தி பெற்றதென்னே? தயிர்த் தாழியுமே"

—திருவரங்கத்துமாலை

திண்ணமுடன் கோபாலர் மனையில் வெண்ணெய்
திருடினதைக் கண்டவர்கள் துரத்தும் போது
கண்ணில்லாத் ததிபாண்டன் மனையிற் புக்குக்
கண்கொடுத்துச் சாடியிற்போந் தொளித்துக் கொள்ளப்
புண்ணிகராங் கண்வேண்டேன் கதிதா! அல்லாற்
போகவிடேன் எனச்சாடி மூடிக் கொள்ள,
எண்ணரிய பரமபதம் அவனுக் கீந்தாய்!
இறைவநா ராயணனே எம்பிரானே.

—எம்பிரான்சதகம்

8. ஸ்ரீ இராமாநுஜர் திருவடிகளிலே அன்பு செய்து ஒழுகி வந்தவர்கள் பலருள், வங்கிப்புரத்து நம்பி என்பவர் ஒருவர். அவர் ஸ்ரீ இராமாநுசரிடம் தமக்குத் திருவாராதனக் கிரமம் அருளிச் செய்ய வேண்டுமென்று பலகாலும் விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். ஆயினும் தக்க வாய்ப்பு நேராமையால், இராமாநுஜர் அவர்க்கு அதனை யருளிச் செய்ய முடியாமலிருந்தது. இவ்வாறு இருக்கையில், ஒரு சமயம் கூரத்தாழ்வானுக்கும், ஹனுமத் தாசருக்கும் இராமாநுஜர் திருவாராதனக்கிரமத்தை உபதேசிக்க நேர்ந்தது. உபதேசம் முடிகிற சமயத்தில் வங்கிப்புத்து நம்பி அங்கே வந்து சேர்ந்தார். அவரைக் கண்ட அளவில் இராமாநுசரின் திருவுள்ளம் சிறிது அஞ்சி நடுங்கியது. "இவர் பலகால் நம்மைத் திருவாராதனக் கிரமம் அருளிச் செய்யும்படி வேண்டிக் கொண்டிருந்தும் வாய்ப்பில்லாமையால், உபதேசிக்க முடியாமல் போய்விட்டது! இன்று இவ்விருவருக்கும் உபதேசிக்கும் பொழுதாவது இவரையும் வருவித்துச் சேர்த்துக் கொண்டு உபதேசித்திருக்கலாம். அதுவும் செய்யப் பெற்றிலோம்! இவ்வாறு நாம் இவ்விருவகைக் குற்றங்களுக்கும் ஆளாயினோமே" என்று எண்ணி இராமாநுஜர் அஞ்சி நடுங்கினர். எனினும் அப்போது அவர் வங்கிப் புரத்து நம்பியை நோக்கி, ஓர் அழகிய திருமொழியை அருளிச் செய்தார். "ஒளியா வெண்ணெய் உண்டானென்று உரலோடு ஆய்ச்சி ஒண் கயிற்றினல் விளியா ஆர்க்க ஆப்புண்டு விம்மி அழுதான்" என்றும், "எழில்கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்குநிலையும் அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்" என்றும் ஆழ்வார்கள் அருளிச் செய்திருக்கிறார்கள். அவற்றை ஓதுங்கால் எல்லாம், "உண்மையில் இப்படியும் இருத்தல் கூடுமோ? எல்லாவற்றுக்கும் தலைவனை எம்பெருமான் தனக்குக் கீழ்ப்பட்டுத் தன்னல் ஏவல் கொள்ளப் படுபவர்களுக்கும் அஞ்சி நடுங்கி வருந்துவானோ?" என்ற ஐயப்பாடு எமக்கு ஏற்படுவதுண்டு. இப்போது உம்மிடத்தில் நான் அஞ்சித் துணுக்குற்று வருந்த நேர்ந்தது. ஆகையால், அதுவும் நடக்கக் கூடியதே என்பது உணர்ந்து, யாம் எம் ஐயப்பாடு தெளியப் பெற்றோம்" என்றருளிச்செய்தார் என்பது, இத்திருப்பாடலின் வியாக்கியானத்தில் எடுத்துக் காட்டப்படும் ஐதிஹ்யம் ஆகும்.

9. "போம் பழி எல்லாம் அமணன் தலையோடே" என்ற ஸ்ரீ சூக்தி, "மானேய் நோக்கி மடவாளை மார்பில் கொண்டாய் மாதவா! கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா!" எனவரும் திருவாய்மொழிப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் நம்பிள்ளை ஈட்டில் வருகின்றது. ஒரு திருடன் ஓர் அந்தணனின் வீட்டில் கன்னம் வைத்தான், அவ்வீட்டின் அப்பகுதி அன்றைக்குத் தான் சுவர் வைக்கப் பெற்றிருந்தது. ஈரச் சுவராக இருந்ததனல் அஃது இடிந்து விழுந்து, கன்னம் வைத்த கள்வன் மாண்டு போனான். அவன் உறவினர்கள் அந்தணனே அவனைக் கொன்றதாகக் குற்றம் சாற்றினர். அந்தணனும் கள்வனின் உறவினரும் அரசனிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். அந்தணன் யான் குற்றமிழைத்திலேன், சுவர் வைத்த கூலியாட்கள் தான் காரணம் என்றான். அவர்கள் தண்ணீர் விடுகிறவன் அதிகமாக வார்த்து விட்டான் என்றனர். அவனோ, குயவன் பெரிய பானையைக் கொடுத்து விட்டான் என்றான். குயவனோ யான் பானை வனையுங்கால், தெருவழியே ஒரு விலை மகள் சென்றும் வந்து கொண்டும் இருந்தாள். அவளைக் கண்டு மதிமயங்கிய யான், பானையை அளவாகச் செய்யமுடியாமற் போயிற்று என்றான். அரசன் விலைமகளை அழைத்து வினவ, வண்ணான் என் சேலையை

விரைவில் கொணர்ந்து தராமையினால், அதனை வாங்கி வர யான் தெருவழியே போக வரத் திரிந்தேன் என்றாள். வண்ணானே நான் துணி துவைக்கும் கல்லிலே ஓர் அமணன் வந்து அமர்ந்து தியானத்திலிருந்தான். யான் எவ்வளவு முயன்று பார்த்தும் அவன் எழுந்து செல்லவில்லை. அவனாகவே எழுந்து சென்ற பின்பு தான் யான் சேலையைத் துவைத்துத் தர முடிந்தது என்றான், அரசன் அமணனை அழைத்துக் கேட்க, அவன் **மௌன விரதம்** பூண்டவன் ஆதலால் ஒன்றும் பேசாமலிருந்தான். அதுகண்ட அரசன், 'உண்மைக்கு உத்திரமில்லை' என்றிருக்கிறான், ஆதலின் இவனே குற்றவாளி யாதல் வேண்டும் என்று தீர்மானித்து, அவன் தலையை வெட்டிவிடுமாறு கட்டளை யிட்டான் என்பது கதை. "கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்" என்னும் பகுதிக்கு வியாக்கியானம் செய்யும்போது, இக்கதை உவமையாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கூனியின் முதுகில் உண்டைவில் தெறித்த செயல் இராமனு டையது. எனினும் இராமபிரான் இத்தகைய ஒரு தீங்கு செய்ததாகச் சொல்ல ஆழ் வார்க்குத் திருவுள்ளம் இசையவில்லை. ஆதலின் "பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வார்; எல்லாம் உன் மேலன்றிப் போகாது" என்கிறபடியே இத்தீங்கை யும் கிருஷ்ணன் செய்ததுபோலவே வைத்து, அக்குறிப்பு வெளிப்படுமாறு **கோவிந்தா** எனப் பாடியருளினர். அமணன் குற்றம் செய்யாதிருக்கவும், பிறர் குற்றம் அவன் தலையில் ஏறினாற்போல, ஸ்ரீ கண்ணபிரான் தீங்கு செய்யாதிருந்தாலும் பிறருடைய தீங்கு அவன் தலையில் ஏறுமென்பதற்குச் சுவைத்திறன் அமையக்காட்டப் பெற்றது இந்த ஸ்ரீசூக்தி. இராமபிரான் வரலாற்றில் வரும் கூனியின் பெயர் **மந்தரை.** கண்ண பிரான் வரலாற்றில் வரும் கூனியின் பெயர் **நைகவக்கிரை.**

> "அன்றிக்கே, தீம்பு சேருவது கிருஷ்ணனுக்கே யாகையாலே,
> போம் பழியெல்லாம் அமணன் தலையோடே என்னுமா
> போல, அவன் தலையில் ஏறிட்டுச் சொல்லுதல்"

என்பது **நம்பிள்ளை** ஈடு.

10. ஸ்ரீ இராமாநுசர் நியமித்தருளிய 74 சிம்மாசனாதிபதிகளின் பெயர்கள் வருமாறு;—

1 முதலியாண்டான்
2 கந்தாடை யாண்டான்
3 மாருதிப் பெரியாண்டான்
4 மாருதிச் சிறியாண்டான்
5 ஈசுவர ஆண்டான்
6 ஜீயராண்டான்
7 ஆண்டு கொண்டான்
8 ஆட்கொண்டான்
9 ஈயுண்ணி யாண்டான்
10 அம்மங்கி யாண்டான்
11 சோமாசி யாண்டான்
12 கூரத்தாழ்வான்
13 தெற்காழ்வான்
14 நெய்யுண்டாழ்வான்
15 ஈயுண்ணிப்பிள்ளை யாண்டான்
16 மிளகாழ்வான்
17 அனந்தாழ்வான்
18 கோமடத்தாழ்வான்
19 வேதாந்தி யாழ்வான்
20 மாடபூசி ஆழ்வான்
21 சேட்டலூர் ஆழ்வான்
22 கிடாம்பி ஆழ்வான்
23 உக்கலாழ்வான்
24 அரணபுரத்தாழ்வான்
25 உருப்புட்டூர் ஆழ்வான்
26 சொட்டை நம்பி

27 பிள்ளை திருமலை நம்பி
28 தொண்டனூர் நம்பி
29 மருதூர் நம்பி
30 மழவூர் நம்பி
31 திருக்குறுங்குடி நம்பி
32 முடும்பை நம்பி
33 பராங்குச நம்பி
34 வில்லிபுத்தூர் நம்பி
35 வடுக நம்பி
36 வங்கிபுரத்து நம்பி
37 செடி எடுத்த நம்பி
38 சொக்கத்தூர் நம்பி
39 வங்கிபுரத்து ஆச்சி
40 புண்டரீகாட்சர்
41 பராங்குச பட்டர்
42 சிறுபள்ளி தேவராச பட்டர்
43 கோவிந்த பட்டர்
44 நம்பியூர் அரங்கராச பட்டர்
45 உள்ளூர்ப் பெரிய பெருமாள் பட்டர்
46 வரந்தரும் பெருமாள் பட்டர்
47 எம்பார்
48 சிறிய கோவிந்தப் பெருமாள்
49 சுந்தரத் தோளுடையார்
50 குறுகைப்பிரான் பிள்ளான்
51 ஆற்காட்டுப் பிள்ளான்
52 இராமாநுசப் பிள்ளான்
23 திருமலை நல்லான்
54 வங்கிபுரத்து ஆச்சான்
55 கோமாண்டூர் ஆச்சான்
56 கிடாம்பி ஆச்சான்
57 கொங்கில் ஆச்சான்
58 ஈச்சம்பாடி ஆச்சான்
59 கணியனூர்ச் சிறிய ஆச்சான்
60 மஞ்சப்பூர்ச் சிறிய ஆச்சான்
61 என்னுச்சான்
62 எச்சான்
63 ஆசூரி ஆதிகேசவப் பெருமாள்
64 கிடாம்பிப் பெருமாள்
65 மகாமுனிப் பெருமாள்
66 அம்மங்கிப் பெருமாள்
67 பிள்ளை திருநறையூர் அரையர்
68 இராச மகேந்திரப் பெருமாள் அரையர்
69 பிள்ளை திருநாராயணபுரத்து அரையர்
70 பிள்ளை திருக்குறுங்குடி அரையர்
71 பிள்ளை திருவாய்மொழி அரையர்
72 திருவரங்கப் பெருமாள் அரையர்
73 ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர்
74 இராச நாராயணப் பெருமாள் அரையர்

"திருமாலை யாண்டான், திருக்கோட்டி நம்பி, திருவரங்கப்
பெருமாள் அரையர், திருமலை நம்பி, பெரியநம்பி,
அருமால் கழல்சேர் எதிராசர் தாளிற் சிங்காதனராய்
வரும் ஆரியர்கள் எழுபத்து நால்வர் என் வான் துணையே."

—திருவரங்கத்து அந்தாதி

---

## செய்திச் சுருக்கம்:

சிவாசாரியர்களுக்கு மிகவும் பயன்படத் தகுந்த "**கால சந்தி பூஜா விதி**" என்னும் நூல், காஞ்சி காமகோடி வியாச பாரத கலாநிதி ஸதஸ் ஸமாஜம் வாயிலாக வெளியிடப் பெற்றுள்ளது. பெற விரும்புவோர் "செயலாளர், ஸ்ரீ ஏ. எஸ். பானு பந்த், 10, கிருபா சங்கரி தெரு, மேலை மாம்பலம், சென்னை - 33" என்னும் முகவரிக்கு, 20 புதுக்காசு அஞ்சல்தலை மட்டும் அனுப்பி, இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

# சிவஞான போதத் தெளிவுரை

## பாச நீக்கம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க,
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

(இ - ள்) அவன் - (ஞானக் கண்ணிற் சிந்தை நாடப் பெறல) அவ்விறைவன், (பொருட்டன்மையால் வேறேயாயினும், வேறு காணப் படாமல் யானே கண்டேன் என்னும்படி),

தானே ஆகிய - உயிரே ஆகி நின்ற,

அந்நெறி - அந்தப் பெத்தநிலை போல,

ஏகன் ஆகி - உயிரானது தான் என வேறுகாணப்படாமல் அவ் விறைவனே யாகும்படி ஒற்றுமைப்பட்டு அடங்கி,

இறைபணி நிற்க - இறைவனுக்குரிய தொண்டுகளைச் செய்து அவற்றில் வழுவாது ஒழுகின்,

மலமாயை தன்னொடு - (பாசங்கள் நீங்கிய நிலையிலும், வாசனை யால் வந்து தாக்குகின்ற) ஆணவம் மாயை ஆகியவற்றுடன்,

வல்வினை - வலிய கன்மமலமும்,

இன்று - இல்லையாகிப் பற்றறக் கழியும்.

[அவன் - இறைவன், தான் - உயிர்.
நெறி - போல; உவமவுருபு: இடைச்சொல்.
அந்நெறி - அதுபோல,
ஏகன் ஆகி - ஒற்றுமைப்பட்டு.
இறைபணி நிற்றல்-இறைவனுக்குத் தொண்டு செய்து ஒழுகுதல்
நிற்றல் - ஒழுகுதல்.]

ஈண்டு ''ஏகன் ஆகி இறைபணி நிற்றல்'' என்று குறிக்கப்பட்டதனை,

''அவன் இவனாய் நின்றமுறை ஏகன் ஆகி
அரன் பணியின் நின்றிடவும் அகலும் குற்றம்''

''ஒக்கஉறைந் திவர்அவனை அவன்இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன்தோற்றம் ஒன்றுமே காண்பர்''

என அருணந்தி சிவாசாரியரும்,

''ஆணவத்தோ டத்துவிதம் ஆனபடி, மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ?''

எனத் தாயுமானவரும் விளக்கியிருத்தல் காண்க.

பாசங்கள் நீங்கிய நிலையிலும், உயிரை வாசனமலம் வந்து தாக்கும் என்பதனை,

''போதம் மேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்கு மாபோல், மழைப்பெயல் மாறித் தீர்ந்தும்
காதல்செய் துறையும் புள்ளும் மாக்களும் கவன்று நெஞ்சம்
நோதக மரங்கள் எல்லாம் நுண்துளி துவற்றும் மாதோ''

எனச் சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணச் செய்யுளிற் குறிப்பிடுதல் இங்கு அறிதற்கு உரியது.

ஏழாஞ் சூத்திரத்தால், சாதிக்கும் பொருளின் இயல்பும், எட்டாஞ் சூத்திரத்தால் சாதனமும், ஒன்பதாஞ் சூத்திரத்தால் சாதிக்கும் உபாயமும் உணர்த்தியவர், இப்பத்தாம் சூத்திரத்தால் அச்சாதனத்தாலாகிய பயனின் தன்மையை வகுத்துக் கூறலுற்ருர். அப்பயனுவது, பாசநீக்கமும், சிவப்பேறும் என இருவகைப்படும். இப்பத்தாம் சூத்திரம், அவ்விரண்டனுள் 'பாச நீக்கம்' கூறியதாகும். (10)

## (சிவப்பேறு)

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்,
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

(இ - ள்) காணும் கண்ணுக்கு - காட்டக் காண்பதாகிய கண்ணுக்கு,

(காணக்) காட்டிக் காணும் உளம்போல் - (பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று) உருவத்தைக் காணும்படி காட்டித் தான் காண்கின்ற உயிரைப் போல,

(காணும்) உள்ளத்தை - அறிவிக்க அறிவதாகிய உயிருக்கு,

காணக் காட்டி (அரன்) காண்டலின் - (பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று) நுகர் பொருள்களை அறியும்படி அறிவித்துமுதல்வன் தான் அறிந்து வருவதால்,

அயரா அன்பின் - (அவ்வாறு முதல்வன் செய்து வரும் பேருதவியினை) மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பினல்,

அரன் கழல் செலும் - (உயிர்கள்) அம் முதல்வன் திருவடியாகிய சிவானந்தஅனுபூதியைத் தலைப்படும்.

உளம் - உயிர். அயராமை - மறவாமை.
அரன் - உயிர்களின் பாசத்தை அரிப்பவன்.
பிரிப்பின்றி உடங்கியைந்து நிற்றல் - அத்துவிதமாய் இயைந்து நின்று உதவி செய்து வருதல்.

1. **'கண்டு காட்டலின்'** என்னும் தொடரைக் **'காட்டிக் காண்டலின்'** என மாற்றிப் பொருள் கொள்க. சிவஞான சித்தியாரின்கண்,

"காயம்ஒழிந் தாற்சுத்த னாகி ஆன்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை உடைய கண்ணுக்கு
ஏயும்உயிர் காட்டிக்கண் டிடுமா போல
ஈசன் உயிர்க்குக் காட்டிக்கண் டிடுவன்"

என அருணந்திசிவாசாரியர் இப்பொருளைத் தெளிவுற விரித்து விளக்கியிருத்தல்காண்க.

2. உள்ளத்தை - உள்ளத்திற்கு உயிருக்கு; (உருபு மயக்கம்),

(3) 'காணும் கண்ணுக்கு' என்பதிலுள்ள அடைமொழியைக் 'காணும் உள்ளத்திற்கு' எனவும் இயைத்துப் பொருள் கொள்க.

(4) '(அரன்) கண்டு காட்டலின்' என்பதிலுள்ள கண்டு என்னும் வினையைக் 'காட்டும் உளம் போல்' என்பதனோடும் இயைத்துக் 'காட்டிக் காணும் உளம்போல்' என மாற்றிப் பொருள் கொள்க.

(5) 'காண உள்ளத்திற்கு' என்பதனைக் 'காணக் கண்ணுக்கு' எனவும் கூட்டிக் கொள்க.

(6) அறிவு இச்சை செயல்களின் நிகழ்ச்சியாகிய அயராமையும் அன்பும் அரன்கழல் செல்லுதலும், முறையே காரணகாரியங்களாய் ஒருங்கு நிகழும் என்பார் **'அயரா அன்பின் அரன் கழல் செல்லும்'** என்றார்.

மேற்சூத்திரத்துள் கூறியபடி ஏகனாகி இறைபணி நிற்கும் உயிர், முதல்வன் பெத்தநிலையினும் முத்திநிலையினும் அத்துவிதமாய் நின்று உபகாரஞ் செய்து நிற்கும் உரிமையை நோக்குமாயின், நோக்குந்தோறும் நோக்குந்தோறும் உயிர்க்கு, இறைவனாகிய அருட்பொருளைத் தலைப்படும் இச்சையானது அடங்காமல் மீதூரும். அவ்வழி அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அனுபவிக்கும் என்று, முத்தான்மாவின் அறிவு இச்சை செயல்கள் மூன்றும் சிவத்தை விடயித்து நிற்கும் விதத்தை யுணர்த்தி, அதீத நிலையின் இயல்பினைக் கூறியவாறாயிற்று.

இரண்டாம் சூத்திரத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட **அத்துவிதம்** என்னும் இறையுயிரிற் புணர்ப்பின் இயல்பு, ஐந்தாம் சூத்திரத்தில் மேலும் விளக்கப்பட்டு, இச்சூத்திரத்தில் முழுதாக விளக்கம் செய்யப்பட்டது என்று உணர்க. இச்சூத்திரம் **சிவப்பேறு** கூடுதலாகிய சிறந்த பயனை உணர்த்தியது.

எட்டாம் சூத்திரம் கேட்டலையும், ஒன்பதாம் சூத்திரம் சிந்தித்தலையும், பத்தாம் சூத்திரம் தெளிதலையும் குறிக்கும். இப்பதினொன்றும் சூத்திரம் **'நிட்டையின் இயல்பு'** உணர்த்தியது எனவும் கூறலாம். *(11)*

## அணைந்தோர் தன்மை

## (சீவன் முத்தர் இயல்பு)

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ,
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.

(இ - ள்) செம்மலர் – சிவந்த தாமரை மலர் போன்ற,
நோன்தாள் - (அன்பரைத்) தாங்குகின்ற திருவடிகளை,

சேரல் ஒட்டா - சேரவிடாமல் தடுக்கின்ற,
அ - அத்தகைய (கொடிய) இயல்பினையுடைய,
மலம் - (ஆணவம் கன்மம் மாயை என்னும்) மலங்களின் அழுக்கினை,
கழீஇ - (ஞான நீரால்) கழுவி,
அன்பரொடு - மெய்ஞ்ஞானிகள் ஆகிய அடியார்களுடன்,
மரீஇ - கலந்து கூடி,
மால்அற - (மலங்களின்) மயக்கம் நீங்க,
நேயம் மலிந்தவர் வேடமும் - அன்புமிக்கவர்களாகிய அடியார்களின் சிவ வேடத்தையும்,
ஆலயம் தானும் – சிவாலயத்தையும்,
அரன் என - முதல்வன் என்றே கண்டு,
தொழும் - (சிவன் முத்தன்) வழிபடுவான்.

1. மேற் பதினொன்றும் சூத்திரத்துள், சிவன் மூத்தராவர் நீங்காத அன்போடு ஆண்டவன் திருவடியில் அறிவு இச்சை செயல்களைச் செலுத்துபவர் என்று கூறியவர், அந்தச் சிவன் முத்தர்க்கே அறிவு இச்சை செயல்கள் ஒருகால் புறத்துச் செல்லுமாயின், அவை செல்லுகின்ற இடம் இவையென்பதனை இச் சூத்திரத்தில் உணர்த்துகின்றார்.

2. மேலும், இப்பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் வாக்கிற்கும், மனத்திற்கும் அப்பாற்பட்ட இறைவனைப் பத்தியினால் உணர்வின்கண் வழிபட்டு வந்தது போலல்லாமல், வாக்குக்கும் மனத்துக்கும் எட்டும்படியாகவும் தெளியக் கண்டு வழிபடும் விதம் இது வென்று அறிவுறுத்தப்படுகின்றது. **நேயம் மலிதல்** கூறவே, வழிபாடும் பெறப்படும்.

3. 'அம்மலம் கழீஇ' என்றதனால் சிவன்முத்தர்க்குப் புறத்தே **அறிவு** நிகழும் இடமும், 'அன்பரொடு மரீஇ' என்றதனால் **இச்சை** நிகழும் இடமும், 'தொழும்' என்றதனால் **செயல்** நிகழும் இடமும் உணர்த்தப்பட்டன.

4. '**தொழுக**' என்னாது '**தொழும்**' எனக் கூறியதனால், இஃது அணைந்தோர் தன்மை உணர்த்திற்று என்பது பெறப்படும்.

5. சிவன் முத்தர் என்பவர்கள், சிவிக்கும்பொழுதே பாசத்தினின்று விடுபட்டோர்: பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர்; 'சிவமே கண்டிருப்போர்'

6. மலங்களைதலும், அன்பரொடு மருவுதலும், சிவவேடத்தையும் சிவாலயத்தையும் அரன் எனக்கண்டு தொழுதலும், சிவன் முத்தர்களுக்கு உரிய இயல்பு. இவ்வியல்பினைச் சிவன்முத்தர்களாக விளங்கியிருந்த அறுபான் மும்மை நாயன்மார் முதலாயினர் வரலாறுகளில் வைத்து உணர்ந்துகொள்ளலாம். (12)

---

# "வையந்தோறும் தெய்வம் தொழு"

**முன்னுரை :**

பிறப்பும் இறப்பும் பெருந் துன்பம் பயப்பன. ஆதலின் ஞானிகள் அனைவரும் பிறப்பும் இறப்பும் அற்ற பெருநிலையை அடையவே பெரிதும் முயல்வர். ஞானி களில் மிகப் பெரும்பாலோர், பிறவி அறல் வேண்டும் என்றே இறைவனைப் பெரிதும் பரவித் துதிப்பர். "வேண்டுங் கால் வேண்டும் பிறவாமை" என்பது திருக்குறள். "பாருருவாய பிறப்பு அறவேண்டும் பத்திமையும் பெற வேண்டும்" என்பது திருவாசகம். இங்ஙனம் சான்றோர்கள் பலரும் பிறவி வேண்டாம் என்றே இறைவனை வேண்டி யிருக்க, **நாவுக்கரசர்** மட்டும் ஓர் இடத்தில் பிறவியும் வேண்டுவதுதான் என்று, ஒரு புதிய இனிய சிறந்த கருத்தை வெளியிடுகின்றார்.

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்

பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்

இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப் பெற்றால்

மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

என்னும் பாடலில் நாவுக்கரசர் "இந்த மாநிலத்தில் மனித்தப் பிறவியும் வேண்டுவதே" என்று குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

**மனிதப் பிறவி :**

தில்லைத் திருச்சிற்றம்பலப் பெரு மானின் திருவுருவ அழகின் சிறப்பினைக் காணப்பெறும் பேறு பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே என்பது அவர் கருத்து. அம் மனித்தப் பிறவியும்' இம் மாநிலத்திலேயே அமைவதாக இருத்தல் வேண்டும் என்பதும், அவருடைய விருப்பம் என்பது புலனாகின்றது! உலக நாடுகளில் வேறு பிற எந்த நாட்டிலும் பிறவாமல், இத் தெய்வத் தமிழ் நாட்டிலேயே பிறக்கப் பெறுதல் வேண்டும் என்பதே அவர் விருப்பம். வெறும் மனிதப் பிறவியை மட்டுமே அவர் விரும்பவோ சிறப்பிக்கவோ இல்லை. இவ்வுண்மை "மனித்தப் **பிறவியும்**" என்று, அவர் இழிவு சிறப்பு உம்மை கொடுத்துக் கூறி யிருப்பது கொண்டு தெளியப்படும். இத்தெய்வத் தமிழ் நாட்டில் எய்தக் கிடைக்கும் மனிதப் பிறவியையே, அவர் சிறப்பாக விரும்பு கின்றார். அதனால் தான் "**இந்த மாநிலத்தே**" என்று அழுத்தமாக வலியுறுத்திக் கூறுகின்றார் போலும்!

மனிதப் பிறவி அடைவது ஒன்று மட்டிலுமே மாண்புடையதாகாது, நாகரிகம் சிறிதும் எய்தப் பெறாமல் விலங்கியல் நிலையிலுள்ள மனிதப் பிறவி யினரும், இவ்வுலகில் ஒரு சில நாடுகளில் உள்ளனர். அந்நாடுகளில் நாம் மனிதப் பிறவியை அடையினும் பயன் இல்லை. ஒருகால் நாகரிகம் அடைந்த நாடுகளிற் பிறக்கப் பெறினும், அவைகள் உயர்ந்த தெய்வத் திரு நூல்கள் வழங்கப் பெறாதன வாக இருப்பின், அப்போதும் நமக்குப் பயன் இல்லை. ஆதலின் நாகரிக நலம் நிறைந்து, தெய்வத் திருவருள் நலங் களிலும் சிறந்த நமது பாரத தேசத்தில், சிறப்பாக ஆழ்வார்களும் நாயன்மார் களும் அவதரித்தருளிய நமது தமிழ் நாட்டில், அடையப் பெறும் மனிதப் பிறவியே பெரிதும் விரும்பத்தக்கதாகும்.

**நீர்பயில் தேயம் தன்னில்,**
**நான்மறை பயிலா நாட்டில்,**

**விரவுதல் ஒழிந்து சேறல்**
**மிக்க புண்ணியந்தான் ஆகும் ;**

தரையினிற் கீழை விட்டுத்
தவஞ்செய்சா தியினில் வந்து,
பரசம யங்கள் செல்லாப்
பாக்கியம் பண்ணொ ணாதே!

எனவரும் சிவஞான சித்தியார் பாடல், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்,

**புண்ணிய பூமி:**

நமது பாரத தேசம் உலகிலேயே மிகவும் ஒப்புயர்வற்ற சிறப்புடையது. பிற தேசங்களை நோக்க இதுவே புண்ணிய பூமியாகும். இப்புண்ணிய பூமியில் வந்து பிறப்பதற்குத் தேவர்களும் கூட மிகவும் விரும்புகின்றார்கள். "நாம் மண்ணுலகில் (பாரத தேசத்தில், தெய்வத் தமிழ் நாட்டில்) சென்று பிறக்கும் பேறு பெறவில்லையே; இங்கே விண்ணுலகிலிருந்து வாணாளை வீணாக்கிக் கொண்டிருக்கின்றோமே; சிவபிரானால் ஆட்கொள்ளப்பெறும் சிறப்பு நிலவுலகில் சென்று பிறந்தார்க்கே அன்றோ உரியது?" என்று எண்ணித் தேவர்களெல்லாம் ஏக்கற்று நிற்கின்றனராம். இச்செய்தியை **மாணிக்கவாசகர்** தம்முடைய திருவாசகத்தில், திருப்பள்ளியெழுச்சி என்னும் பதிகத்தின் இறுதிப் பாடலில், உறுதியாகச் சொல்கின்றார்.

புவனியிற் போய்ப்பிற வாமையில், நாள்நாம்
போக்குகின்றோம் அவமே; இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறு
என்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்!
திரு மாலாம்
அவன் விருப்பு எய்தவும், மலரவன்
ஆசைப்படவும்,
நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள வல்லாய்!
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே!

மாணிக்க வாசகர் கூற்றின்படி, தேவர்களும் **புண்ணிய பூமி**யாகிய இம்மண்ணுலலேயே வந்து பிறக்க விரும்புகின்றனர். மண்ணுலகில் மனிதராகப் பிறந்தால் தான், இறைவனை வழிபடும் பெறலரும் வாய்ப்பு இனிது கைகூடுகின்றது. எனவே, தேவர்களும் இப்புண்ணிய பூமியில் வந்து இறைவனை வழிபடுகின்றனர். அங்ஙனம் விண்ணுலகத் தேவர்களும் மண்ணுலகில் போந்து வழிபட்டுள்ள தலங்கள், எண்ணில்லாதன பல நம் பாரத தேசத்திலும் தமிழ் நாட்டிலும் உள்ளன. அத்தெய்வத் திருத்தலங்களின் பெருமையை அறிந்து கொள்ளவும், அங்கெல்லாம் சென்று கண்டு தரிசித்து இறைவனை வழிபட்டு உய்யவும், மக்கள் முயல்கின்றனர் இல்லையே என்று, தாம் இயற்றிய சிவஞான சித்தியார் நூலில், சிந்தை நொந்து வருந்துகின்றார், அருள் நந்தி சிவாசாரியார்!

மானிடப் பிறவி தானும்
வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும்
அரன்பணிக் காக அன்றோ?
வானிடத் தவரும் மண்மேல்
வந்தரன் தனைஅர்ச் சிப்பர்!
ஊன் எடுத் துழலும் ஊமர்
ஒன்றையும் உணரார் அந்தோ!

**சான்றோர்களும் தலவழிபாடும்:**

இவ்வாற்றால் தெய்வத் திருத் தலங்களின் சிறப்பும், தலவழிபாட்டின் மேன்மையும் இனைத்தென்று யாவரும் உணரலாம். தல வழிபாட்டின் சால்பினையும், இன்றியமையாமையினையும், நாம் பெரிதும் உணர்தல் வேண்டும். "வையந்

"To-day I stand here and say, with the conviction of truth, that this is the **Punya Bhumi**, the land of karma. If there is any land on earth that can lay claim to be the blessed Punya Bhumi, to be the land to which all souls on this earth must come to account for karma, the land to which every soul that is wending its way Godward must come to attain its last home, the land where humanity has attained its highest towards gentleness, towards generosity, towards purity, towards calmness, above all, the land of introspection and of spirituality – it is **India**."

– Swami Vivekananda.

தோறும் தெய்வம் தொழு" என்பது ஔவைப் பிராட்டியாரின் அருளுரை. 'தலங்கள் தோறும் சென்று, அங்கங்கே யுள்ள தெய்வத் திருவுருவங்களை வணங்குக' என்பது அதன் பொருள்.

> நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
> தேடித் திரிந்து சிவபெருமான் என்று
> பாடுமின்! பாடிப் பணிமின்! பணிந்தபின்
> கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க்
> கொள்வானே.
>
> —திருமந்திரம், 1445

எனத் திருமூலரும் தல வழிபாட்டின் சால்பினை வற்புறுத்துகின்றார். இவ்வாறே இராமலிங்க அடிகளாரும், தலங்கள் தோறும் சென்று செய்யும் வழிபாட்டினை விரும்பி உவந்து வற்புறுத்துகின்றார்.

> தலங்கள் தோறும் சென்று அவ்விடை
> அமர்ந்த
> தம்பிரான் திருத்தாளிணை வணங்கி
>
> வலங் கொளும்படி என்னையும் கூட
> வாளென் கின்றனை வாழி என் நெஞ்சே!
>
> —திருவருட்பா

ஆழ்வார்களும் நாயன்மார்களும் எல்லாம் தல யாத்திரை செய்து, தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவி வழிபட்டு மகிழ்ந்திருக்கின்றனர். அத்தகைய அருளாளர்களும் ஞானிகளுமே தல யாத்திரையையும் வழிபாட்டையும் இன்றியமையாப் பெருஞ் சிறப்பியற் கடமையாகக் கருதிக் கடைப்பிடித்திருக்கின்றனர் என்றால், நம்மனோர்க்கெல்லாம் தல வழிபாடு எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்பதனைச் சொல்ல வேண்டுவதில்லை.

**தல வழிபாட்டின் பயன்:**

தல யாத்திரையும் வழிபாடும் மேற்கொள்ளுவதனால், நாம் எய்தும் நலங்களுக்கு அளவேயில்லை. துன்பமும் துயரமும் நிறைந்த இவ்வுலகத்தில் நம்முடைய குறுகிய வாழ்நாளில் நாம் அடையக் கூடிய ஏதோ ஒருசில இன்பங்களில், உண்மையானதும் உயர்ந்ததும் ஒப்புயர்வற்றதும், தல யாத்திரைகளால் பெறும் இன்பமே எனலாம். தல யாத்திரையால் நாம் நம் கவலைகளை மறக்கின்றோம். நம் மாசுகள் அகன்று ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாத இடங்களையும் காட்சிகளையும் கண்டு களிக்கின்றோம். கேளாத செய்திகள் பலவும் கேட்டுக் கிளர்ச்சியும் வளர்ச்சியும் பெறுகின்றோம்.

நாட்டின் பல பகுதிகளிலுள்ள பல மக்களைக் கண்டு பழகி, நாட்டு வளப்பங்களை அறிந்து கொள்ளுகின்றோம். தல வழிபாட்டால் நம் உள்ளமும் உணர்வும் புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. உள்ளம் விரிவடைகின்றது. உணர்வு பண்படுகின்றது. இறையருளும் பக்தியும் படிமுறையே நம்மிடம் வளர்ந்து ஓங்குகின்றன. நாம் நம்முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும், அரும்பெரும் செயல்களையும் கண்டும் உணர்ந்தும் களிப்புறுகின்றோம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று தரிசிக்குங்கால், நமக்கும் அவர்களின் அருள் ஆற்றல் ஓரளவு பதிகின்றது. காலமும் இடமும் வேறுபட்டுக் கடந்திருப்பினும், நாம் அவர்களோடு மானதத் தொடர்பு கொள்ளுகின்றோம், அவர்களை நாம் நேரே காண இயலாவிட்டாலும், அவர்களின் தொடர்புபெற்ற தலங்களையும் கோயில்களையும் காணுகின்றபோது, ஒருவகையில் அவர்களை நேரே காண்பது போன்ற உணர்ச்சியும் மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகின்றது.

---

"We **travel** that we may see other nations at home—their 'cities of men and manners, climates, councils, Governments'; and this we rightly conceive as an important agency in humane culture.

The study of literature is a form of **travel**; it enables us to move about freely among the minds of other races; with this additional advantage that, as Profsssor Barret Wendell has happily said, it gives us the power of **travelling** also in time.

We become familiar not only with the minds of other races, but with the minds of other **epochs** as well".

—William Henry Hudson.

பல்லவரும் சோழரும் பாண்டியரும் பிறரும் வானளாவக் கட்டிய உயர்ந்த கோபுரங்களையும் கோயில்களையும், அவற்றின் எழில் மிக்க அற்புதச் சிற்பத் திருவுருவங்களையும், பிறவற்றையுமெல்லாம் நேருக்கு நேராக நாம் நம் கட்புலனுற் காணுங்கால் நாம் எய்தும் வியப்பிற்கும் விம்மிதத்திற்கும் எல்லையுண்டோ? நம் மனித வாழ்விலேயே நாம் பெறக்கூடிய மிக மேலான சிறந்த தெய்விக இன்பம் இதனிலும் வேறு பிறிதொன்று இல்லை. இருத்தல் இயலாது என்பதும் தேற்றம்!

**முடிவுரை;**

எனவே, நாம் அனைவரும் நம்முடைய குறுகிய சிறிய வாழ்நாளில், பொன்னும் பொருளும் போகமும் பிறவுமே தேடி அலைந்துழலாமல், அவற்றிற்கு இடை இடையிலேனும் இயன்ற பொழுதெல்லாம் தல யாத்திரையும் வழிபாடும் செய்தற்குரிய வாய்ப்பு வசதிகளை, எவ்வாற்றுலேனும் தேடி அமைத்துக்கொண்டு, இறைவனை வழிபட்டு உய்யமுயலுதல் வேண்டும். "தவமும் தவமுடையார்க்கு ஆகும்" எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவதற்கேற்ப, இத்தகைய ஒரு சிறந்த பேறு, வாய்ப்பும் வசதியும் பெற்றிருப்பினும், எல்லோர்க்குமே கிடைப்பதில்லை. பலர் செல்வர்களாக இருப்பினும், தக்க ஓய்வும் வாய்ப்பும், பண்பட்ட நல்ல மனப் பக்குவமும் அமையப் பெறுமையால், தல யாத்திரையும் வழிபாடும் செய்ய முடியாமலே, உலகியற் சகதியிலேயே வறிதே உழன்று அலைந்து திரிந்து இறந்து போகின்றனர். அவர்களின் நிலை மிகவும் இரங்கத் தக்கது!

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரான்அடி பேணுர்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

—திருமந்திரம்

எனத் **திருமூலர்** பாடுதல் போல, நாம் பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் அதன் பயனை இழந்து போகாதபடி, 'காலமுண்டாகவே காதல் செய்து உய்மின்' என மணிவாசகர் பணித்தருளியதற்கு ஏற்ப, வாய்ப்பு நேரும்போதெல்லாம் தலயாத்திரை செய்தலை மேற்கொண்டு, **வையம் தோறும் தெய்வம் தொழுது**, உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.

**(தல வழிபாடு**

சைவத் தமிழர் எனப்பிறந்த
தக்கோர் எவரும் தம்வாழ்வில்
எய்தற் குரிய பேறுகளுள்,
இனிய நால்வர் பெருமக்கள்
தெய்வப் பாடல் பெற்றுெளிரும்
சிறந்த தலங்கள் பலவும் கண்டு,
உய்யத் தொழூஉம் பெருவாய்ப்பின்
உயர்ந்த தொன்று பிறிதில்லை. (1)

'இறக்கும் முனர்நேப் பிள்ஸ்நகர்கண்டு
இறக்க' என்பர் மேல்நாட்டார்!
சிறக்க நால்வர் பாடல்பெறும்
தெய்வத் தலங்கள் சென்றுகண்டு
மறக்க இயலாப் பெருநலத்தின்
வழிபட் டுவத்தல், சைவர்எனப்
பிறக்கப் பெற்றேர் அனைவருக்கும்
பெரிதும் சிறந்த பெரும்பேறும்! (2)

சிற்பம் ஓவம் இசை கூத்து
சிறப்பே மிக்க பிறகலைகள்
பொற்பத் தழைத்தே ஆங்காங்கும்
புதுமை புனிதம் பேரழகு
பற்பல நலங்கள் விளங்கநின்று
பண்டைத் தமிழ் நாகரிகத்தின்
வெற்றித் தூணும் கோயில்பல,
மேவிக் காண்டல் வியன்சிறப்பாம்! (3)

தூய நால்வர் பாடல்பெற்றுத்
துரிசில் சோழர் பாண்டியர்கள்
பாய சீர்த்திப் பல்லவர்கள்
பலரும் பண்டு பணிசெய்யச்
சேய திசையும் புகழ்விளைத்துத்
திகழும் சிறந்த சிவதலங்கள்
ஆயம் கொண்டு போய்ப்பணிந்தோர்,
அவர்தாம் வாழ்வின் பயன்கொண்டோர்! (4)

பொங்குநற் பக்தி வெள்ளப்
புணரியில் திளைத்து மூழ்கி

நன்குயர் ஆழ்வார் கள்தாம்
நலமிகப் பணிந்தி றைஞ்சி

மங்களா சாச னம்செய்
வைணவத் தலங்கள் யாவும்

இங்குநாம் கண்டு போற்றல்
இனியநற் கடமை யாகும். (5)

மனிதன் ஒருவன் எய்துதற்காம்
வாழ்வின் இன்பம் பலவற்றுள்,

புனித நமது பாரதத்திற்
பொலியும் சைவ வைணவமாம்

இனிய தலங்கள் கண்டுதொழும்
இன்பிற் சிறந்த தொன்றில்லை;

கனிநன் றுயர்ந்த அப்பேற்றை
நலமே அடைய முயன்றுய்வோம்! (6)

—ஆசிரியர்.

---

# மதிப்புரைகள்

**நாடோடி :**

(1) இது மாதந்தோறும் வெளிவரும் ஒரு பத்திரிகை. தமிழகத்தின் புகழ் பெற்றஎழுத்தாளர்களுள் ஒருவராக விளங்கிவரும் திரு. **எம். வெங்கட்ராமன், எம்.ஏ.** ('நாடோடி') அவர்களால் நடத்தப் பெறுவது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஆசார்யசுவாமிகளின் அருளாசியினைப் பெற்று, புதிய திருப்பத்துடன் சமயவுணர்வையும் கடவுள் நம்பிக்கையையும் வளர்க்கும் குறிக்கோளுடன், சிறப்புடன் வெளிவருகின்றது. தேவி பாகவதம், துளசி ராமாயணம் முதலிய பல அரிய நூல்களின் தமிழாக்கம், விரிவாக இதன்கண் இடம் பெறுகிறது. உயர்ந்த நோக்கம் குறித்து வெளிவரும் சிறந்த பத்திரிகை! தனி இதழ் விலை : **50 காசு.** ஆண்டுச் சந்தா : ரூபா **ஆறு.**

**இராஜ மன்னார்குடித் தலவரலாறு :**

(2) சம்பகாரண்ய க்ஷேத்திரம் எனவும், குலோத்துங்க சோழ விண்ணகரம் எனவும், புகழ்பெற்றுத் திகழும் மன்னார்குடி ஸ்ரீ இராஜகோபாலசுவாமி கோயிலின் வரலாற்றைவிளக்கும் இந்நூல், திரு. **எஸ். சோமசுந்தரம்,** பி.ஏ., பி.எல். அவர்களால் எழுதப்பெற்று, ஷை தேவஸ்தானத்தின் சார்பில் வெளியிடப் பெற்றது. பொதுக்குறிப்புகள், கோயில் அமைப்பு, திருவாபரணங்கள், மண்டபங்கள், தீர்த்தங்கள், திருவாராதன காலங்கள், திருவிழாக்கள், வாகனங்கள், சொத்துக்கள், கட்டளைகள் ஆகிய விவரங்கள் பலவும் தரப் பெற்றுள்ளன. தியான சுலோகம், கோபால விம்சதி, கமலாஸ்துதி, இராஜகோபால மங்களம், தீட்சிதர் சாகித்யம், கட்டியம், சுப்ரபாதம், நவரத்தின மாலிகை முதலிய துதி நூல்களும், கல்வெட்டுகளும் படங்களும் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. பக்தர்களுக்குப் பயன்படும் சிறந்த நூல். விலை : **ரூபா 1-50.**

— ஆசிரியர்.

# இன்பியல் மனிதன்

மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவரும் உயர்ந்த உள்ளம் உடையவராதல் வேண்டும். ஒரு மனிதனுக்குச் சிறப்பு, செல்வம் முதலியவற்ருல் உண்டாவதில்லை. அவனது உயர்ந்த உள்ளத்தாலும் பண்பினுலுமே சிறப்பு அமைகின்றது. "வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு" எனத் திருவள்ளுவரும் இக் கருத்தை வலியுறுத்துவர்.

மனிதன் உணவினுல் மட்டும் வாழ்வதில்லை. உயர்ந்த நோக்கங்களும் குறிக்கோள்களும் மனித வாழ்வை மாட்சிமைப் படுத்துகின்றன. "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று **திருநாவுக்கரசர்** கூறி வருந்துகின்ருர், உயர்ந்த நோக்கங்களுக்காகவும் குறிக்கோள்களுக்காகவும், நாம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால், நம் வாழ்க்கை சீரும் சிறப்புமுற்று இன்பமயமாக விளங்கி வளமுறும் என்பது திண்ணம்.

உண்மை இன்பத்தை அடைய விரும்பும் ஒவ்வொருவரும், வாழ்க்கையில் நேர்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். நல்ல மனிதனுடைய உள்ளமானது மாசு மறுவற்றுக் குற்றம் இல்லதாக விளங்குதல் வேண்டும். அகந்தை உணர்வும், கரவுச் செயல்களும் அவனிடத்தில் இருத்தல் கூடாது. ஆரவாரமில்லாத நிலையில், "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணுதன செய்யாமல்", அவன் தன் நாட்களை இன்பமாகக் கழிப்பான். வீண் ஆசைகளுக்கும், வீண் கவலைகளுக்கும் அவன் இடம் கொடுக்க மாட்டான். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதற்கு மதில்களோ, படைகளோ அவனுக்கு வேண்டுவதில்லை. உலகியற் கொடுமைகளாகிய அதிர்ச்சிகளினின்று தப்பித்துக்கொள்ள, அவனுக்கு மறைவான சுரங்கப் பாதைகள் தேவைப்பட மாட்டா. கடலின் கொந்தளிப்புக்களையும், வானத்தின் இடிமுழக்கங்களையும் போன்ற எதற்கும், அவன் அஞ்சாத நெஞ்சுடன் இருப்பான். திருநாவுக்கரசர் "அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை" என்ருர். **ஆகூழ்** கொணரும் இன்பங்களுக்காக அவன் மகிழமாட்டான். **போகூழ்** விளைக்கும் துன்பங்களுக்காக மனம் தளரமாட்டான். சுவர்க்கத்தையே தான் கற்கும் நூலாக, அவன் செய்து கொள்வான்! மேலும் வானுலகப் பொருள்களே அவனுடைய ஞானமாக விளங்கும். நல்ல எண்ணங்கள் மட்டுமே, அவனுடைய சிறந்த நண்பர்கள்! அறநெறியிற் கழிக்கப் பெற்ற வாழ்க்கையே, அவனுடைய செல்வ வளம்! இவ்வுலகமானது அவனுக்கு ஒரு விடுதி போன்றதாகும். அவனது உலக வாழ்க்கை, அமைதியான ஒரு தெய்விக யாத்திரையாக இருக்கும்! இத்தகைய நிலையில் தன்னுடைய வாழ்வினை எவன் அமைத்துக் கொள்கின்ருனே, அவனே துன்பம் நிறைந்த இவ்வுலகில் இன்பமாக வாழ்பவன் ஆவான்! அத்தகைய ஒருவனை நாம் **'இன்பியல் மனிதன்'** (Happy Man) என்று குறிப்பிடலாம். இத்தகைய பண்புகள் அமைந்த மனிதன் "இன்பமே! எந்நாளும் துன்பம் இல்லை" எனத் திருநாவுக்கரசரைப் போன்று கூறத்தக்க நிலையில் சிறந்தினிது வாழ்வான்!

எவனுடை வாழ்க்கை நேர்மை
எய்திநன் ருளிரும்? யாவன்

அவமிகு செயலும் சூதும்
அறிவிலாச் செருக்கும் இன்றி

நவமிகும் உளத்தி னேடு
நல்வழி இன்பம் துய்த்துத்

தவமிக அமைதி யோடு
தன்னுடை நாள்க ழிப்பான்?

நிறைபெருஞ் சீரின், யாவன்
நினைந்துதற் காத்துக் கொள்ள

மறைவழிச் சுருங்கை வேண்டான்;
மதிலொடு படைகள் வேண்டான்;

அறைகடல் ஆழத் தச்சம்
அகன்றவான் முழக்கம் எல்லாம்

இறையள வஞ்சான், தன்கண்
இனிதுறக் காண வல்லான்? (2)

எத்தகை விழைவ வாவும்
ஏய்த்திடல் கூடா மற்றவ்

வித்தகன் தன்னைத்; துன்பும்
மெலிவித்தல் ஒண்ணு; ஊழின்

பற்பல கவலை நன்மை
பற்றிடா யாவும்; நல்ல

இத்தகு மனிதன் தானே
இன்பியல் மனிதன் என்க! (3)

துறக்கமே அவன்தன் நூலாம்;
தூயவான் பொருள்கள் ஞானம்:

சிறக்குநற் றூஉய்எண் ணங்கள்
செறிவுடை அவன்றன் தோழர்;

குறிக்கொளக் கழித்த வாழ்நாள்
குறைவறு செல்வ மாகும்;

நெறிக்கொளிவ் வுலகோர் வீடும்,
நீள்வழிச் செலவும் ஆகும். (4)

– ஆசிரியர், மொழி பெயர்ப்பு

---

"The man of life upright,
Whose guiltless heart is free

From all dishonest deeds
Or thought of Vanity; (1)

The man whose silent days
In harmless joys are spent,

Whom hopes cannot delude,
Nor sorrow discontent; (2)

That man needs neither towers
Nor armour for defence,

Nor secret vaults to fly
From thunder's violence; (3)

He only can behold
with unaffrighted eyes

The horrors of the deep
And terrors of the skies (4)

Thus, scorning all the cares
That fate or fortune brings,

He makes the heaven his book,
His wisdom heavenly things; (5)

Good thoughts his only friends,
His wealth a well-spent age,

The earth is his sober inn,
And quiet pilgrimage." (6)


—*The Character of A Happy Man*.

---

கும்பாபிஷேகம்: (திருச்சி மாவட்டம் முசிரி வட்டத்தைச் சேர்ந்த காட்டுப்புத்தூர் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி ஆலயத்திருப்பணியும் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகமும் பொது மக்கள் ஆதரவால் 8-6-1966-ஆம் தேதியில் நடந்தேறியது.)

[குறிப்பு: இம்மாத இதழில், "மடாதிபதிகள் மாநாட்டு நிகழ்ச்சி" யின் போது எடுக்கப் பெற்ற நிழற்படங்களை வெளியிட இயலவில்லை. அடுத்த இதழில் அவைகள் வெளிவரும்.

— ஆசிரியர்]




ஓங்கார மாகிய உயர்குகன் அருளால் தீந்தமிழ் தரவரு தெய்வக் குழவி.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS



செந்தி லாண்டவன் திருவருள் பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பாடி யருளியது.



தெய்வக் கவிஞரைச் சிவிகையில் ஏற்றித் திருமலை நாயகர் திருவிழா கண்டது.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS



நாயக் மன்னன் மடியமர்ந்து உலக நாயகி நற்றமிழ் நயந்து கேட்டது.




கிள்ளை மீனாட்சி பிள்ளைத்தமிழ் கேட்டு
ஒள்ளிய முத்தின் மாலை சூட்டியது.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR



கமலைத் தியாகரைக் கண்டு களித்தங்கு அமல நான்மணி மாலை அருளியது.



கந்த புரிக்குகன் கவிஞரை அழைத்துப் பிள்ளைத் தமிழ்கேட்டு உள்ளம் உவந்தது

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS



ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள ஆனந்தக் கூத்தன் அரும்புகழ் உரைத்தது

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

தாமிரபரணி நதியின் வடகரையில் **ஸ்ரீவைகுண்டம்** என்று வழங்கும் திருப்பதியின் வடபாலில் **ஸ்ரீகைலாசம்** என ஒருதலம் உண்டு. அங்கே பரம்பரையாகத் தமிழ்ப் புலமையும், முருகக்கடவுளின்பாற் பக்தியும் வாய்ந்த சைவ வேளாள குலத்தில் **சண்முக சிகாமணிக் கவிராயர்** என்ற ஒருவர் தம் மனைவியாரான **சிவகாமசுந்தரி** அம்மையாரோடு வாழ்ந்து வந்தார். அவ்விருவருக்கும் ஓர் குழந்தை உதித்தது, அதற்குக் **குமரகுருபரன்** என்னும் பெயர் சூட்டி அவர்கள் வளர்த்து வருவாராயினர்.

குமரகுருபரர் ஐந்தாண்டு வரையிற் பேச்சின்றி ஊமை போல இருந்து வந்தனர். அதுகண்டு நடுங்கிய பெற்றோர்கள் அவரைத் திருச்செந்தூருக்கு எடுத்துச் சென்று செந்திலாண்டவர் சந்நிதியிலே வளர்த்திவிட்டுத் தாமும் பாடு கிடந்தனர். முருகவேள் திருவருளால் குமரகுருபரர் பேசும் ஆற்றல்பெற்றுக் கல்வியிலும் சிறப்புற்றனர். செந்திற் பெருமான் திருவருளால் வாக்குப் பெற்ற இவர், அப்பெருமான் விஷயமாகக் **கந்தர் கலிவெண்பா** என்ற பிரபந்தத்தைப் பாடினார். அப்பால் தம் ஊரிலெழுந்தருளியுள்ள ஸ்ரீ கைலாசநாதர்மீது **கைலைக் கலம்பகம்** என ஒரு பிரபந்தம் இயற்றினார். இவருக்குக் **குமாரசுவாமிக் கவிராயர்** என ஒரு தம்பியார் இருந்தனர்.

குமரகுருபரர் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் ஞானசாத்திரங்களையும் திருவருளால் விரைவில் கற்றுத் தேர்ந்தார்; மருவுக்கு வாசனை வாய்த்தாற் போன்று பக்திஞான வைராக்கியங்கள் இவரிடத்தே உண்டாகி வளரத் தொடங்கின. அப்பால் பல சிவ தலங்களுக்கும் சென்று சிவதரிசனம் செய்யத்தொடங்கினர். மதுரையிலே சில காலம் தங்கியிருந்தார். அப்போது ஸ்ரீ மீனாட்சியம்மையின் இரத்து ஒரு **பிள்ளைத் தமிழ்** பாடி அக்காலத்தில் மதுரையில் அரசாண்டிருந்த திருமலை நாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினார். அதனை அரங்கேற்றுகையில் ஸ்ரீ மீனாட்சியம்மையே குழந்தையுருவாக எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்தனரென்றும், குமரகுருபரர் முத்தப்பருவத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கையில் தம் திருக்கழுத்திலிருந்த முத்துமாலையொன்றை எடுத்து இவருக்கு அணிந்துவிட்டு மறைந்தனரென்றும் கூறுவர். அந்தப் பிள்ளைத்தமிழைக் கேட்டு மனமுவந்த **திருமலை நாயக்கர்** குமரகுருபரருக்குப் பலவகையான பரிசில்களை அளித்து வழிபட்டனர். குமரகுருபரர் பின்னும் சிலகாலம் மதுரையிலே தங்கி **மதுரைக்கலம்பகம்** என்னும் பிரபந்தத்தை இயற்றினார். பிறகு சோழநாட்டுத் தலங்களைத் தரிசிக்கத் தொடங்கித் திருவாரூருக்குச் சென்றார். அங்கே ஸ்ரீ தியாகப்பெருமானைத் தரிசித்துக்கொண்டு சிலகாலம் இருந்தனர். அக்காலத்தில் **திருவாரூர் நான்மணிமாலை** யென்னும் பிரபந்தத்தை இவர் இயற்றினார்.

சிவஞான வுபதேசம் பெறவேண்டுமென்ற கருத்து இவருக்கு வரவர அதிகமாயிற்று. தமக்குரிய ஞானாசிரியரைத் தேடித் தேர்ந்து சரண்புகவேண்டுமென்று இவர் மனம் ஆவலுற்று நின்றது. அக்காலத்தில் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 4-ஆம் பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கிய **ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்** சிவஞானச் செல்வராக இருப்பதையறிந்து அவரிடம் சென்றார். அங்கே உண்டான சில குறிப்புக்களால் அப்பெரியாரே தமக்குரிய ஆசிரியரென்பதை இவர் தேர்ந்தனர். அப்பால் தமக்குத் துறவுநிலை யருள வேண்டுமென்று அத்தேசிகர்பால் குமரகுருபரர்

வேண்டினர். அங்ஙனம் செய்வதற்கு முன் தல யாத்திரை செய்துவரும்படி பணித்தல் அவ்வாதீன மரபாதலின், அப்பெரியார் காசியாத்திரை செய்துவரும்படி கட்டளையிட்டனர். காசிக்குச் சென்று வருவதில் நெடுங்காலம் செல்லுமேயென்று கவன்ற குமரகுருபரரை நோக்கிச் சில காலம் சிதம்பரவாசமேனும் செய்யும்படி பணித்தனர்.

ஞானாசிரியர் கட்டளைப்படி சிதம்பரத்துக்கு இவர் பிரயாணமாகி இடையே ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயிலில் தங்கித் தரிசனம் செய்துகொண்டு, அங்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துக்குமார சுவாமியைத் துதித்து ஒரு **பிள்ளைத் தமிழ்** இயற்றினர். பிறகு சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜப்பெருமானைத் தரிசனம் செய்துகொண்டு சில காலம் தங்கினர். அக்காலத்தில் **சிதம்பர மும்மணிக் கோவை** யென்னும் பிரபந்தம் இவரால் இயற்றப்பெற்றது. அதில் முதற் செய்யுளில் காசிக்குச் செல்வதில் உளவாகும் துன்பங்களையும் சிதம்பரத்திற்குச் சென்று தரிசனம் செய்யும் எளிமையையும் "காசியினிறத்த னேக்கி" (452) என்பது முதலிய அடிகளில் உணர்த்தியிருக்கின்றார். அவ்வடிகள், தம்மை ஆசிரியர் காசிக்குச் செல்லப்பணித்ததும் அதன் அருமையைத்தாம் விண்ணப்பித்துக்கொண்டபோது சிதம்பரவாசம் செய்யும்படி கட்டளையிட்டதுமாகிய நிகழ்ச்சிகளின் நினைவிலிருந்து எழுந்தனவென்றே தோன்றுகிறது.

சிவநேசச் செல்வர்களும் தமிழறிவுடையவர்களுமாகிய சில அன்பர்கள், "யாப்பருங்கலக் காரிகையில் காணப்படும் உதாரணச் செய்யுட்கள் பெரும்பாலும் பிறசமயச் சார்புடையனவாக விருத்தலின், அந்நூலின் இலக்கணங்களுக்கு உதாரணமாக ஸ்ரீ நடராஜப் பெருமான் விஷயமாகச் செய்யுட்களை இயற்றித்தர வேண்டும்" என்று பிரார்த்திக்க இவர் அங்ஙனமே **சிதம்பரச் செய்யுட் கோவை** யென்னும் பிரபந்தத்தை இயற்றி அளித்தார்.

இவர் சிதம்பரத்தில் இருந்த காலத்திலேயே **நீதிநெறி விளக்கம்** என்னும் நீதிநூலும் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று தோற்றுகின்றது. அந்நூலுக்குச் சிதம்பரம் நடராஜப் பெருமானது துதியை முதலிற் காப்பாக அமைத்திருத்தல் இதற்கு ஓர் ஆதாரமாகும்.*

சிதம்பரத்தில் இங்ஙனம் வாழ்ந்து வந்த குமரகுருபரர் பின்பு தம் ஞான தேசிகர்பாற் சென்று தம்முடைய வேட்கையை மீட்டும் விண்ணப்பித்துக் கொண்டனர். இவருடைய பரிபக்குவத்தை யறிந்து ஞான தேசிகர் இவருக்குக் காஷாயம் உதவினர். அது முதல் இவர் **குமரகுருபர முனிவர்** என வழங்கப் பெறுவாராயினர். அப்பொழுது தம் ஞான தேசிகர் விஷயமாகப் **பண்டார மும்மணிக் கோவை** யென்ற பிரபந்தம் ஒன்றை இயற்றினர்.

அப்பால் ஞான தேசிகரிடம் விடை பெற்றுக் காசிக்குச் சென்று தம்முடைய கல்வியறிவினாலும் தவப்பண்பினாலும் டில்லி பாதுஷாவின் உள்ளத்தைக் கவர்ந்தார். அப்பாதுஷாவின் தாய்மொழியாகிய ஹிந்துஸ்தானியை விரைவில் அறிந்துகொள்ள வேண்டுமென்றெண்ணிச் **சகலகலாவல்லி மாலை** யென்னும் பிரபந்தத்தை இயற்றிக் கலைமகளை வேண்டினர். கலைமகள் திருவருளால் அம்மொழியிலே சிறந்த அறிவு பெற்றுப் பாதுஷாவிடம் பேசிப் பழகினர், அவர் இவர் பால் ஈடுபட்டு இவருடைய விருப்பத்தின்படியே இவர் காசியில் இருத்தற்குரிய மடம் அமைப்பதற்குக் கேதார கட்டத்தில் இடம் உதவினர். குமரகுருபரர் அதுகாறும்

---

*திருமலைநாயக்கரது வேண்டுகோளின் படி மதுரையில் இருந்தபொழுது இது பாடப் பெற்றதென்றும் கூறுவதுண்டு.

மறைபட்டிருந்த * ஸ்ரீ விசுவலிங்கப் பெருமானை வெளிப்படுத்தி அங்கே கோயில் முதலியன நிருமிக்கச் செய்து நித்திய நைமித்திகங்களும் குறைவற நடக்கும்படி செய்தார்.

குமரகுருபர முனிவரர் காசியில் தங்கியிருந்த மடத்திற்குக் **குமாரசாமி மடம்** என்று பெயர். அங்கே இவர் சிவயோகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் **காசித்துண்டி விநாயகர் பதிகமும், காசிக் கலம்பகமும்** இவரால் இயற்றப்பெற்றன. இவர் தாம் வாழ்ந்திருந்த மடாலயத்தில் புராணசாலை ஒன்று ஏற்படுத்தி அங்கே ஹிந்துஸ்தானி பாஷையிலும், தமிழிலும் புராணப் பிரசங்கமும் செய்ததுண்டு. சிறந்த இராமபக்தராகிய துளஸீதாஸர் அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு உவந்தனரென்றும், அதனுற் கம்பராமாயணத்திலுள்ள கருத்துக்களைத் தாம் ஹிந்துஸ்தானியில் அமைத்துக் கொண்டனரென்றும் அறிஞர்கள் கூறுவர்.

* கேதார கட்டத்திலுள்ள கேதாரலிங்கத்தை முகம்மதியர் மறைத்திருந்தனரென்றும், குமரகுருபர முனிவர் அம்மூர்த்தியை வெளிப்படுத்தி ஆலயம் முதலியன கட்டுவித்து நித்திய நைமித்தியங்கள் நடத்தச் செய்தனரென்றும், இன்றும் ஆகம விதிப்படி தமிழ்நாட்டு முறையில் சில திருவிழாக்கள் அங்கே நிகழ்கின்றன வென்றும் சிலர் கூறுவர்.

குமரகுருபரர் பின்னும் ஒருமுறை **தருமபுரம்** வந்து ஞானாசிரியரைத் தரிசித்து, மீட்டும் காசிக்கே சென்று வாழ்ந்து விளங்கியிருந்து, ஒரு வைகாசி மாதத்தில் கிருஷ்ணபக்ஷத் திருதியையிலே சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்தனர்.

[ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் அரிய வரலாற்றினை விளக்கும் அழகிய படங்களை, நமது 'திருக்கோயில்' இதழில் வெளியிடுவதற்குத் தம் பேரருட் பெருங்கருணைத் திறனல் அனுப்புவித்துதவிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் திருவடிமலர்கட்கு நம் நன்றி பெரிதும் உரியது.]

— ஆசிரியர்.

திமிரம் அகற்றும் சிறப்புமிகும்
தெய்வக் கவிஞர்! திருச்செந்தூர்

நமது முருகன் அருள்பெற்ற
ஞானச் செல்வர்! தவமுனிவர்!

அமிழ்தின் இனிய நூல்கள்பல
அளித்த வள்ளல்! காசிவரை

தமிழை வளர்த்த குமரகுரு
பரநற் சான்றோர், தாள்போற்றி!

— ஆசிரியர்.

---

## அருளாளர் அறிவுரைகள்

பரபரக்க வேண்டாம்! பலகாலும் சொன்னேன்!
வரவரக்கண்டு ஆராய் மனமே! —ஒருவருக்கும்
தீங்கு நினையாதே! செய்ந்நன்றி குன்றாதே!
ஏங்கி இளையா திரு!

ஆசையறாய்! பாசம்விடாய்! ஆனசிவ பூசைபண்ணாய்!
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்!—சீ சீ
சினமே தவிராய்! திருமுறைகள் ஓதாய்!
மனமே உனக்கென்ன மாண்பு?

—ஸ்ரீ குருஞான சம்பந்தர்.

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ.. பி.எல்.,
(பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8.)

சித்தர்கள் என்பவர்கள் ஒரு தனிப் பட்ட சமயத்தினரோ, குலத்தவரோ அல்ல. மனிதத் தன்மை வாய்ந்த மனிதர்களே சித்தர்களாயினர். ஆண்டவன் கருணை வடிவாயுள்ளவன். அவனைப் போல் மனிதனும் கருணை வடிவாதல் வேண்டும்.

இதற்கு அடிப்படையாக வுள்ளது சிவ காருண்ய ஒழுக்கம். அதாவது தன் னுயிரைப்போல் மன்னுயிர்களைப் பாவித்தல். எல்லா உயிர்களிலும் சிவன் ஒன்றே. பூமி சக்தியாகவும், ஆகாயம் சிவமாகவும், சக்தி உடலாகவும், சிவம் உயிராகவும், தீபம் அறிவாகவும் உள்ள பராபரம், எங்கும் எல்லாச்சீவராசிகளிடத்தும் ஒருவித பேதமுமின்றி வியாபித்துள்ளதென்பது யாவரும் அறிந்ததே. அப்படி யிருக்க ஓர் எறும்பைக் கொல்பவனுக்கும், மனிதனைக் கொல்பவனுக்கும் பாபத்தில் பேதமில்லையென்றே சொல்ல வேண்டும்.

மனிதனுக்கு ஆறறிவு உண்டென்றும், மற்ற சீவராசிகளுக்கு ஆருவது அறிவு கிடையாதென்றும் சொல்வதைச் சித்தர்கள் ஒப்புக் கொள்வதில்லை. மனிதனுக்கு மற்ற சீவராசிகளினிடத்திலுள்ள அறிவைப் புரிந்து கொள்ளக் கூடிய அறிவு இல்லை யென்றே அவர்கள் கருதுகின்றனர்,

உதாரணமாக, பட்சிகள் மனிதன் கற்றுக் கொடுக்கும் வார்த்தைகள் எந்த பாஷையிலாயினும் சரி, அதைக் கற்றுத் திருப்பிச் சொல்லும் ஆற்றலுள்ளனவாயுள்ளன. மனிதன் கற்றுக் கொடுக்கும் வித்தைகளைப் பட்சிகளும், மிருகங்களும் திறம்படக்கற்று அவ்வித்தைகளைத் திருப்பிச்செய்து காட்டும் வல்லமையுடையனவாயுள்ளன. நாய், மாடு, ஆடு முதலியன எல்லாவற்றிற்கும் தமக்குள் வசனிக்கும் மொழிகளும் உள்ளன. அவைகளின் பாஷைகளை மனிதன் புரிந்து கொள்ளாதது மனிதனுடைய குற்றம். எறும்பு மற்றொரு எறும்புடன் பேசுகிறது. இந்தப் பக்கம் போகாதே நீ பின்பக்கம் திரும்பிப் போ என்று சொல்லுகிறதோ வென்னவோ, ஒன்றொடொன்று வாயொடுவாய் வைத்துச் சில விநாடிகள் நிற்கின்றன. எதிரே வந்த எறும்பு பின் பக்கம் திரும்பிப் போகிறது. இராணுவத்தினர் கோடிட்டு நடந்து போவதுபோல் ஒன்றின் பின் ஒன்ருய் வரிசையாய் நடந்து போகின்றன. அவைகளிடத்திலிருக்கும் ஒழுக்கம் நம்மிடத்திலில்லை. ஒரு நாய் நம்முடைய பாஷையைச் சில நாட்களில் புரிந்து கொண்டு நாமிடும் உத்திரவுப்படி நடக்கின்றது. ஆனல் ஒரு மிருகத்தினுடைய பாஷையையோ, ஒரு பறவையினுடைய பாஷையையோ நம்மால் ஆயிர வருடங்களாயினும் கற்றுக் கொள்ளமுடியுமா? ஆகையால் மனிதர்களுக்கு மாத்திரந்தான் அறிவு உள்ளது, மற்ற சீவராசிகளுக்குக் கிடையாதென்று புறக்கணித்து இகழ்வது முறையில்லை என்று சித்தர்கள் சொல்லுகின்றார்கள். ஆண்டவனை மிருக ரூபமாகவும், பட்சிகள் ரூபமாகவும் கூட நாம் வணங்குகிறோம். ஏன்! மரத்தையும் கல்லையும் கூட வணங்குகிறோம், அப்படியிருக்க உயிருள்ள சீவன்களிடத்தில் நாம் இரக்கம் காட்டவில்லையேல் நாம் மனித வர்க்கத்தைச் சார்ந்தவர்களாவோமா?

இரக்கம் என்னுமிடத்துப் புலால் மறுத்தல், கொல்லாமை யென்பன குறிப்பாக நம் முன் வந்து நிற்கின்றன. மனிதனுடைய வயிற்றை மற்ற பல சீவராசிகளைச் சுடும் சுடுகாடாக்கலாமா? சண்டாளன் ஒருவனைத் தெய்வீகமுள்ள ஒரு சாதகன் தொடுவதினலேயே அவனிடமுள்ள தெய்வ சக்திகள் மறைந்து விடுகின்றன என்று பெரியோர்கள் சொல்லு

கின்றனர். அப்படி இருக்க ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய சீவராசிகளின் மாமிசங்களையும், எலும்புகளையும் கடித்து ருசிக்கும் மனிதர்கள் மனிதத் தன்மை வாய்ந்தவர்களென்று எப்படிச் சொல்வது ?

பிணங்களைப் புதைக்குமிடங்களில் பேய், பிசாசு, பூதங்கள் குடியிருக்கின்றனவென்பது மரபு. அப்படியிருக்க, பிணங்களின் அணுக்களை நம் உடலில் கொண்டு சேர்த்து நாமும் உயிருள்ள பிணங்களாக நடமாடுவது முறையா ?

மனிதன் மனிதனைக் கொன்றால் கொலைக் குற்றம். கொலைக்குக் கொலை; அதாவது தூக்குத் தண்டனை. அக்குற்றத்தை விசாரிக்க நீதிபதிகள். கொலை செய்தவன் நிரபராதியென்று வாதாடப் பெரிய பெரிய வழக்கறிஞர்கள், கொலை செய்த ஊரில், கொலை செய்யப்பட்ட நேரத்தில் கொலை செய்தவன் இல்லவேயில்லை யென்பதற்குக் குவியல் குவியலாய்ப் பொய்ச் சாட்சிகள்.

ஆனால் நிரபராதியாய் ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாமலும், "எங்கள் கடன் பணி செய்து கிடப்பதே" என்று காலம் கழிக்கும் குற்றமற்ற சீவராசிகளை நாள் ஒன்றுக்கு லட்சக் கணக்கில் கொலை செய்து, பேயைப் போல் தின்னவும் செய்து, பேயைப் போல் திரியும் ஒரு சடத்தை மனிதனென்று கூறுவது பொருந்துமா? இந்தக் குற்றத்தை விசாரிக்க ஒரு நீதி மன்றம் கிடையாதா ?

ஆயினும் மனிதன் என்பவன் செய்யும் அட்டூழியம் வீண் போவதில்லை. கொலையுண்ட சீவன் கொலையாளியைத் துடர்ந்து கொண்டேதானிருக்கிறது. எந்தெந்த சீவனுக்கு மனம் வாக்கு காயத்தால் குற்றத்தை விளைவித்தானோ அவைகளெல்லாம் ஒருங்கே சேர்ந்து குற்றவாளியைக் கொலை செய்தே முடிக்கின்றன. அதாவது மரணத்தை உண்டு பண்ணுகின்றன. ஆனால் மனிதன் அது விணைப்பயனென்று சொல்லி ஆறுதல் செய்து கொள்ளுகிறான். ஆறறிவு படைத்த மனிதன் செய்யக் கூடிய குற்றங்களை நாம் என்னென்று சொல்வது?

அந்தக் குற்றங்கள் எப்படி மனிதனைத் தொடருகின்றன. அவைகள் பேயாக, நிழல் ரூபமாக அவனைத் தொடர்ந்து போகின்றன. வேண்டாம்! என்னோடு வராதே என்று சொன்னால் அது கேட்குமா? இந்த மனித உடலுக்கும் பூத உடலென்றல்லவா பெயர்? இந்த பூத நிழலை எவன் விரட்டி யடிக்கிறானோ அன்றுதான் மனிதன் மனிதனாகிறான். நிழலற்ற மனிதனே சாகா நிலையடைகிறான். இராமலிங்க வள்ளலுக்கு நிழல் கிடையாதென்பது அறிந்தவர்கள் மொழி.

எத்தனை எத்தனை கோயில்கள் சுற்றியென்ன பயன்? எத்தனை எத்தனை மந்திரங்கள் செபித்தென்ன பயன்? எத்தனை எத்தனை தீர்த்தங்களில் மூழ்கி என்ன பயன்? இரக்கமில்லாதவன் என்றும் பூதகணமாய்த் திரிந்து நரகமென்ற துக்கத்திலேயே உழன்று செல்வான். புலால் உண்பவனுக்கும் கொலை செய்பவனுக்கும் பாபகிருத்தியத்தில் வித்தியாசம் கிடையாது. சீவன்களை வெட்டி விற்பவன் தன்னுடைய தொழில் விருத்திக்குச் செய்கிறான். அவன் செய்யும் கொலைக்குக்காரண கர்த்தாவாயுள்ளவன் புலாலை உண்ணுபவனே யாவான்.

பஞ்சாட்சரப்பதிபசுபாச விளக்கத்தில் கண்டுள்ள சில செய்யுட்கள் இங்குக் குறிப்பிடத்தக்கன.

"கங்கையிற் படிந்திட்டாலுங்
கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடி தானம்
வள்ளலாய் வழங்கினாலுஞ்
சங்கையில்லாத ஞான
சாத்திர முணர்ந்திட்டாலும்
பொங்குறும் புலால் புசிப்போன்
போய் நரகடைவனன்றே"

"கலையெலா முணர்ந்தானேனுங்
சரிசறத் தெளிந்தானேனும்
மலையென வுயர்ந்தானேனும்
மனமயல்அகன்முனேனும்
உலகெல்லாம் புகழப் பல்லோர்க்
குதவிய கையனேனும்
இலகிய இரக்கம் இன்றேல்
எழுநரகடைவ னன்றே"

"இத்திறனருள் கைப்பற்றி
உயிர்க்கெலாம் இதத்தைச்செய்க
சத்தியம் இரக்கம் இன்றேல்
முத்தியைச் சார்கிலார், சற்
பத்தியால் யோகஞ்சாரும்;
யோகத்தாற் பரம ஞானம்
சித்தியாம்; இதற்காதாரஞ்
சிவகாருண்யம் அன்றே"

இச் செய்யுட்களுக்கு விளக்கம் தேவையில்லை. இவற்றால் ஞானமென்ற உயர் நிலையடைய வேண்டின் சிவகாருண்யமே ஆதாரமென்பது தெள்ளெனப் புலனுகின்றது அன்றே?

நம் நேர்ப் பாட்டனர் வாழ்ந்த காலத்தில் நம்முடனிருந்து வாழ்ந்த வள்ளலார் என்ற கடைசிச் சித்தர் கொலையை வெகுவாகக் கண்டித்துள்ளனர். புலாலுண்ணும் மனிதரைக் கண்டு பயந்து நடுங்கிஞராம். ஏன்! அவர்கள் மனித ரூபத்திலிருப்பினும், அவர்கள் பேய்ரூபமாய்த் தோற்றமளித்திருக்க வேண்டும். அவர் என்ன சொல்கிருர் பாருங்கள்.

"வன்புலாலுண்ணும் மனிதரைக் கண்டு
மயங்கி உள் நடுங்கி ஆற்றுமல்
என்பெலாங்கருக இளைத்தனன்; அந்த
இளைப் பையும் ஐய நீ அறிவாய்"

என்கிருர்.

"துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்;
கண்ணிஞலேயோ பிறவுயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பயந்தேன்;
மண்ணினில் வலையுந் தூண்டிலும் கண்ணி
வகைகளுங் கண்ட போதெல்லாம்
எண்ணி யென்னுள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தை நின் திருவருள் அறியும்"

'கொல்லா நெறியே குருவருள் நெறி' என்ருர். கொலை புரிபவன் ஆண்டவன் குலத்துக்குப் புறம்பானவனல்லவா? அது மாத்திரந்தானு! இறந்தவர்களைச் சுடுவதும் கூட அவரால் சகிக்க முடியவில்லை. தவம் செய்து பெற்று உயிர் போல் வளர்த்து அம் மக்கள் இறந்தால் அப் பெற்ருேர்களே அம்மக்களைச் சுடுகின்ருர்களே! என்னே அவர்கள் கடின மனம் என்கிருர் வள்ளலார். அவர்கள் பேயினும் பேய் என்று கூடக் கண்டித்திருக்கிருர்!

"பிறந்தவரை நீராட்டிப் பெருக
வளர்த்திடுகின்றீர் பேயரேநீர்
இறந்தவரைச் சுடுகின்றீர்; எவ்வண்ணஞ்சம்
மதித்திரோ? இரவிற்றூங்கி
மறந்தவரைத் திமுட்ட வல்லீரால்;
நும்மனத்தைவயிரமான
சிறந்த வரை யெனப் புகழச்செய்து
கொண்டீர் ஏன்பிறந்து திரிகின்றீரே"

என்கிருர்.

அதோடு நின்ருரில்லை வள்ளலார். இறந்தவரைச் சுடுவது கொலையென்கிருர்.

"குணம்புதைக்க உயிரடக்கங்
கொண்டதுசுட்டால்
அதுதான் கொலையாமென்றே
வணம்புதைக்க வேண்டுமென வாய்தடிக்கச்
சொல்லுகின்றேன்"

பார்த்தீர்களா! சிவகாருண்யம் எந்த அளவற்று வள்ளலாரிடத்தில் வளர்ந்திருந்தது. பூதவடல் மறைந்து சூக்கும உடலாகி, நிழலற்ற நிலையை அவரடைந்ததற்குக் காரணம் மற்றும் விளக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே சித்தி அடைவதற்கு ஆதாரம் சிவகாருண்ய ஒழுக்கமாகும்.

—தொடரும்

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அன்றிரவு திருநாராயணப் பெருமாள் உடையவர் கனவிலே தோன்றி 'ஏன் வருந்துகிறீர் எம்பெருமானாரே. இங்கே கலியாணித்தடாகம் உள்ளதல்லவா? அதனருகே தென்மேற்கு மூலையின் தென்மேற்கே உள்ள சம்பகவனத்தின் சமீபமாகத் தென் கிழக்கே ஒரு திருத்துழாய் மரமிருக்கிறது. இம்மரத்தின் கீழுள்ள புற்றிலே நாம் எழுந்தருளியிருக்கிறோம். உமக்கு வசதியாக அவ்விடத்தைக் காட்ட இங்கிருந்து அவ்விடம் வரை திருத்துழாய்த் தளங்களை உதிர்த்திருக்கிறோம். அவ்வடையாளத்தைப் பற்றி வாரும்'' என்றருளி மறைந்தார். கவலை தீர்ந்து வியப்பும் களிப்பும் பெற்றவராய் உடையவர் எழுந்து தம் அநுஷ்டானங்களை விரைவில் முடித்துக் கொண்டு வெளிவந்து பார்த்தார். அவர் திருமாளிகை வாசலிலிருந்து திருத்துழாய் முறிகள் ஒரு கோடாகக் கிடப்பதைக் கண்டார். அதனைப் பற்றி அவ்வழியே தம் கோஷ்டியோடு சென்றார். முறியொழுங்கு அவரை ஒரு துழாய் மரத்தடியே கொண்டு சேர்த்தது. அத்திருத்துழாய் மரத்தை வலம் வந்து தெண்டனிட்டு அம்மரத்தின் அடியே உள்ள திருமண்காப்பைத் தம் திருக்கரங்களால் மெல்ல மெல்ல நீக்கினார். கீழே எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருமேனிக்குத் தம் கை பட்டு ஏதேனும் நேர்ந்துவிடக் கூடாதே என்ற கவலை அவருக்கு!

பையப் பையத் திருமண் காப்பு நீக்கப் பெற்ற அளவிலே பெருமாளின் திவ்ய மங்கள விக்ரகம் ஸேவை ஸாதித்தது. கண்ட உடையவர் கால் நிலம் கொள்ளாமல் குதித்தார். தம் சீடர்களுடன் குணலைக் கூத்து (வெற்றி பெற்றோர் ஆடும் கூத்து) ஆடினார். விஷ்ணு வர்த்தனனை அழைத்துக் காட்டினார். அவனும் பெருமகிழ்வெய்தினான். பின்னர் மெல்லப் பக்கத்துள்ள திருமண்காப்பை யெல்லாம் நீக்கித் திருநாராயணன் திருவடிவை மெல்ல மேலே எழுந்தருளப் பண்ணினார். சங்கவாத்ய கோஷங்கள் முழங்கின. மூன்று நாட்கள் இடையருது சொரியப் பெற்ற பாலினாலே அவ்விக்ரகத்தைத் திருமஞ்சன மாட்டினார் உடையவர். பெருமாள் திருமேனியின் அழகை அள்ளிப் பருகினார். 'பகல் கண்டேன் நாரணனைக் கண்டேன்; கனவில்மிகக் கண்டேன்; மீண்டவனை மெய்யே மிகக்கண்டேன்'' என்று ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளியது எழுத்துக்கெழுத்து தமக்குப் பலித்ததே என்ற உத்ஸாகம் உடையவருக்கு. அந்த ஸ்ரீமந்நாராயணனைக் கண்களார விழுங்கினார். மாறன் அடி பணிந்துய்ந்தவராதலாலும், அப் பராங்குசருக்குப் பரமஹித புத்ரராகையும், தந்தையின் பொருளைத் தனயன் பெறுவது போலப் பெற்று, தமிழ் மறை ஆயிரமும் தாய் நிலையில் நின்று சடகோபன் பெற்றதை மொய்ம்பால் வளர்த்த செவிலித் தாயாதலால் அத்திரு நாராயணனைக் குறித்து ஆழ்வார் அருளிய 'ஒரு நாயகமாய்' என்ற திருவாய் மொழியை அப்பெருமான் திருமுன்பே ஸமர்ப்பித்துப் பேருவகை எய்தினார்.

அப்பெருமான் தோன்றிய இடத்தருகே எம்பெருமானார் தம் திரிதண்டால் கீற அங்கே பால்போல் குழம்பும் திருமண்குவை தென்பட்டது. திருமண்காப்புத் தீர்ந்து விட்டதே என்று கவலையுற்ற உடையவர் பெருமகிழ் வெய்தி அத்திருமண் காப்பினாலே தாம் ஆராதிக்கும் பேரருளாளனுக்கு அழகாகத் திருமண் காப்பிட்டுத் தாமும் காப்பிட்டுக்கொண்டு வேண்டளவும் சேகரித்தும் கொண்டார். இங்ஙனம் உடையவர் திருநாராயண விக்ரகம் கண்டெடுத்த நாள் சக வருஷம் 1012 பகுதான்ய வருஷம் தை மாதம் சுக்ல சதுர்த்தசியும் வியாழக் கிழமையும் புனர்பூச நக்ஷத்ரமும் கூடிய நன்னாள் என்று பன்னீராயிரப்படி குருபரம்பரை கூறும்.

பின்னர் உடையவர் அவ்விக்ரகத்தை ஸ்ரீ பாஞ்சராத்ர ஸாத்வத ஸம்ஹிதையாலே மந்திர நீராட்டு, திருவாராதனம் முதலிய வற்றை ஸ்ரீ ரங்கராஜபட்டர் என்ற பெரியவர் திருக்கைகளாலே செய்வித்தருளினர். அப்படிப் பிரதிஷ்டை செய்யப் பெற்ற மூலவருக்கு பெருந்திருவிழா முதலிய செய்ய வாய்ப்பாக உத்ஸவ மூர்த்தியில்லையே எனக் கவன்றார் உடையவர். ஒருநாள் திரு நாராயணன் அவர் கனவிலே தோன்றி 'நம்முடைய உத்ஸவ பேரமான ராமப்பிரியர் இப்போது லீலையாக டில்லி எழுந்தருளி, துருக்க அரசர் அரண்மனை யிலே எழுந்தருளியிருக்கிறார் நீர் அங்கிருந்து மீண்டும் எழுந்தருள்வித்து வாரும்'' என்று அருளினர். உடையவர் இக்கனவை அரசனுக் கறிவித்துத் தாம் டில்லி செல்லத் திருவுள்ள மானமையும் கூறினர். அரசனும் மிகவும் உகப் புடன் உடையவர் டில்லி செல்ல வேண்டிய வசதிகளை எல்லாம் அளிக்க உடையவரும் பயண கதியாய் டில்லிக்கு எழுந்தருளினர். டில்லியி லிருந்த துருக்க அரசனும் உடையவரை வர வேற்றுபசரித்து வந்த காரியம் என்னவென்று விநயத்தோடு கேட்க, எம்பெருமானாரும் எங்கள் தெய்வமான ராமப்பிரியர் உமது அரண்மனை யிலே எழுந்தருளியிருக்கிறார். அவரைத் திரும்ப நம்மிடம் தரவேண்டும்' என்று கூறினர். அரசன் வியப்பு மேலிட்டவனாய் 'உங்கள் தெய்வம் நமது அரண்மனை வர ஏதுவில்லையே. எனினும் தேவ ரீர் கூறுவதால், நான் அநேக விக்கிரகங்களை ஒரு அறையில் இட்டு வைத்திருக்கிறோம். அங்கு போய் தேவரீருடைய சக்தியாலே அந்தத் தெய் வத்தை உம்மருகே வருவித்துக் கொள்வீராயின் அவரைத் தேவரீர் எடுத்துச் செல்லத் தடையில்லை'' என்று கூறி அந்த அறையைத் திறந்து காட்ட ஆக்ஞையும் இட்டான். உடையவர் அங்கே சென்று பார்க்கப் பெருமாள் ஸாதித்தபடி திரு நாரணன் திருவடிவுக் கொத்த பேர விக்ரகம் காணப் பெறுமையாலே மிகவும் சோகித்தார். அன் றிரவு பெருமாள் மீண்டும் அவர் கனவிலே தோன்றி 'நாம் அவள் மகளாலே பூஜை கொண்டு அவள் அந்தப்புரத்திலே இருக்கிறோம் காணும்'' என்றருளினர். உடையவர் மறுநாள் அரசன் முன்பு சென்று தம் கனவை அறிவிக்க அவனும் மேலும் வியப்பெய்தி ''உங்கள் தெய்வம் நம் மகளாலே பூஜை செய்யப் பெறுகின்றதா? எனி னும் தேவரீர் நம் மகள் அந்தப்புரம் சென்று முடியுமானால் உம் தெய்வத்தை அழைத்துக் கொள்ளும்'' என்று கூறினன் உடையவர் அரசன் மகளுடைய அந்தப்புரம் செல்ல அநுமதி வழங்கப் பெற்றது. உடையவர் சென்றார். செல்பவர் அரசனை நோக்கி ''அவரை நீரும் கண்ணால் கண்டு அநுபவிக்கலாமே'' என்ன அரசனும் உடன் சென்றான்.

அந்தப்புரக் கதவு திறக்கப்பட்டது. அங்கே ஒரு ஊஞ்சலில் ராமப்பிரியர் சர்வாலங்கார பூஷித ராய் எழுந்தருளியிருந்தார். அழகிய சட்டை அவர் திருமேனியை அலங்கரித்தது. கால்களிலே சிறு பொற் சதங்கைகள் பூட்டப் பெற்றிருந்தன. திரு முக மண்டபத்திலே கஸ்தூரி திலகம் ஒளி வீசியது அரசன் திருமகள் மிக்க ஆர்வத்தோடு அவ்வூஞ் சலை ஆட்டிக் கொண்டு ராமப்பிரியர் ஊஞ்சல் அசைவிலே சென்று வரும் நேர்த்தியை அநுபவித் துக் கொண்டிருந்தாள். முதலில் சென்ற துருக்க அரசனுக்கு வியப்பால் கண்கள் மலர்ந்தன. அவன் உடையவரை ஒரு ஆசனத்திலே அமரச்செய்தான் அவ்விக்கிரகத்தைக் கண்ட ராமாநுசர் அது திரு நாராணன் உத்ஸவ பேரமே என்பதை உணர்ந்து கொண்டார். அரசன் உடையவரின் முகவிலாசத் தை நோக்கி ''இதுதான் உங்கள் தெய்வமா, இப் படியென்றால் தேவரீர் அவரை அழைத்துக்கொள் ளும்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஊஞ்சலில் சதங்கையொலி கேட்டது. அனைவரும் காண ராமப்பிரியர் தன்னியலோசை சலன்சலென் றிடத் திருவடி பெயர்த்தார். உடல் புளகிந்த உடையவர் ''தொடர் சங்கிலிகள் சலார் பிலார் என்ன'' என்ற பாசுரத்தை அநுஸந்தித்து என் மணிவண்ணன் தளர் நடை நடவானோ!'' என்று முடிக்கவும் ராமப்பிரியர் ஊஞ்சலினின்றும் குதித் துத்தளர் நடையிட்டுச் சென்று உடையவர் திரு மடியிலேறி விறுதோன்ற அமர்ந்தார். பெருமாளின் ஸௌலப்யம் தாங்கவில்லை உடையவருக்கு. தன்னை மறந்தார். விம்மல் மேலிட்டது. தோளும் மார்பும் உண்ணிற மகிழ்ச்சியால் பூரித்து விம்மின. அப்படியே ''என்னுடைய செல்வப் பிள்ளை யன்றோ'' என்று கூவியவராய்த் தம்மிரு கரங் களாலும் ராமப்பிரியரை அணைத்துக் கொண்டார் பார்த்த துருக்க மன்னன் பரவசனானன். இப்படி யும் சுலபனான ஒரு தெய்வமா! என வியந்தது.

அப்போதைய அவன் மனம். உடையவரை வணங்கி ‘ஸ்வாமீ! இவர் உங்கள் தெய்வமே என்பதை என் கண்ணாலே கண்டேன். தேவரீர் இவரை எழுந்தருள்வித்துக் கொள்ளலாம்'' என விண்ணப்பித்து அநேகம் திருவாபரணங்களையும் மிகுந்த திரவியத்தையும் உடையவருக்களித்து வியப்புடனும் களிப்புடனும் அவரை வழியனுப்பி வைத்தான். அவ்விக்ரகத்துடனே யதுகிரி நாய்ச்சியாரின் விக்கிரகத்தையும் உடையவர் எழுந்தருளப் பண்ணி வந்தார் என்று ‘ஆறாயிரப்படி பன்னீராயிரப்படி குருபரம்பரை’ என்ற நூல் கூறும்.

உடையவர் அவ்விக்கிரகங்களைத் திருப்பல்லக்கிலே எழுந்தருளிவித்து வெகு விரைவிலே யாதவாத்திரி என்ற திருநாராயணபுரம் எழுந்தருளினார். செல்வப் பிள்ளை என்று உடையவர் அழைத்தது தொடங்கி அதுவே திருநாமமாகப் பெற்ற ராமப்பிரியரையும் யதுகிரி நாச்சியாரையும் மந்திர பூர்வமாகப் பிரதிஷ்டை செய்து மகிழ்ந்தார். அரசனைக் கொண்டு அவருக்கு நித்ய, பக்ஷ, மாஸ, அயன, வருஷத் திருவிழாக்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்தார். திருநாராயண புரத்திலே எதிராஜ மடம் ஒன்று நிறுவினார். ஐம்பத்திரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கோயில் காணியாக்ஷியாளராக நியமனம் செய்தார். அவர்களுக்கு சமுதாயத்திருநாமமும், தாஸ்ய நாமங்களும் ப்ரஸாதித்தருளினார். அவர்களைச் செல்வப்பிள்ளையின் கைங்கர்யங்கள் குறைவற நடத்திவாருங்கள் என நியமித்தார். யாதவாத்திரி அன்றுதொட்டுத் திருநாராயணபுரம் எனப்பெயர் பெறுக என அருளினார். சீடர்கள் பன்மடங்காகப் பெருகினர். தம் ஸ்ரீ பாதத்தில் உள்ள ஆசார்யர்கள், ஜீயர்கள், சமுதாயத்தாராகத் தாம் நியமித்த ஐம்பத்திருவர், சாத்திய சாத்தாத முதலிகள் பல்லோர், திருமேனி காவலர், திருவிளக்குடையார் இத்தகையோர் பலருடனும் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து மாறன் ஈன்ற மறைவழியை வளர்த்து அருளினார். திருவரங்கத்தே தென்னரங்கன் செல்வம் திருத்தினார், இங்கே திருநாரணனைத் தேடிக்கண்டு திருக்கோயிலெடுப்பித்து, டில்லி வரை சென்று ராமப்பிரியரைத் தன் செல்வப் பிள்ளையாக்கிக் கொணர்ந்து அவர்களுக்குக் கைங்கர்யங்களும் திருவிழாக்களும் என்றென்றும் நடந்து வருமாறு செல்வம் அமைத்து வைத்து வந்தார்.

அத்திருமலை திருநாரணன் ப்ரதிஷ்டை செய்யப் பெற்றதாலே நாராயணாத்திரி என்றும், த்ரேதாயுகத்திலே வேதபுருஷர்கள் வேதாத்யயனத்தை இடைவிடாது செய்தமையாலே வேதாத்ரி என்றும், த்வாபரயுகத்திலே யாதவர்களாலே ஆராதிக்கப் பெற்றமையின் யாதவாத்ரி என்றும், கலியுகத்திலே எதிராஜரான ராமானுஜரால் ஏற்றம் பெற்றமையின் எதிசைலம் எனவும் பெயர்கள் பெற்றது.

(தொடரும்



ஸ்ரீ ஆதிநாதசுவாமி கோயில்
தோற்றம்;
ஆழ்வார் திருநகரி.

# மதுரகவியும் மணிமொழியும்

(திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை)

## கண்ணிநுண் சிறுத்தாம்பு :

திருமாலடியார்களான ஆழ்வார்களைப் பன்னிருவர் என்றும், பதின்மர் என்றும் பெரியோர் பணிப்பர், ஸ்ரீ ஆண்டாளைத் தமப்பரான பெரியாழ்வாருடன் ஒன்றுபடுத்தியும், மதுரகவியைத் தம் ஆச்சாரியரான இன்பமாரியாம் நம்மாழ்வாருடன் ஒருமைப்படுத்தியும் பதின்மரென்று கணக்கிடுவார்கள். இதனால் தான் ஆழ்வார்களின் தோற்றம் பத்திற்கு "அபிநவ தசாவதாரம்" (புதிய பத்து அவதாரம்) என்னும் ஸமயப் பெருவழக்குண்டு, திருமாலின் ஒவ்வொரு அவதாரத்தையும் ஆழ்வார்களின் ஒவ்வொரு அவதாரத்துடன் ஒற்றுமைப்படுத்தி மிக அழகான பொருள் நயம் கூறுவார்கள். மதுரகவியார் ஆழ்வார்களின் வரிசையில் ஆறுவதாகக் கணக்கிடப்படுவர். மதுரம் (இனிமையாக) கவி (கவிபாடுபவர்) எனப் பொருள் கொண்டவர் மதுரகவியார். திருமங்கை ஆழ்வார் நாலுகவிப் பெருமாள் என்றால், இவர் மதுரகவி மறையோராவர். இவர் நம்மாழ்வார் பற்றிப் பாடிய தேனிலும் இனிய கவிதைகள் பதினொன்றாகும். ஸ்ரீ அமுதனார் இராமாநுசனை நடுநாயகமாய்ப் பாடிய இராமாநுச நூற்றந்தாதியைப்போல், இவர் நம்மாழ்வாரையே நடுநாயகமாய் வைத்து இப்பாட்டுக்களைப் பாடினார். முதல்பாட்டின் முதல் சொல் தொடர்ச்சியான "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்பதைக் கொண்டே இவர் நூலிற்குப் பெயரிட்டார்கள். பாட்டுக்களின் முதல் கடைச் சொற்றொடர்களை ஒன்றுபடுத்திப் பார்த்தால் "கண்ணிநுண் சிறுத்தாம்பினால், நம்புவார் பதிவைகுந்தம் காண்மினே" என்றதொரு பொருள் நயத்தையும் காணலாம். இவர் பிரபந்தத்தை முதலாயிரம் என்ற பிரிவில் கடைசியில் சேர்த்து வைத்துள்ளார்கள்.

## அடியார்க்கு அடிமை :

எம்பெருமானுக்கே அடிமைப்பட்ட நிலையை "பகவந்நிஷ்டை" என்றும், அவன் அடியார்களுக்கே அடிமைப்பட்டிருப்பதை "பாகவதநிஷ்டை" என்றும் ஸ்ரீ வைணவர்கள் கூறுவார்கள். இந்தப் பாகவதநிஷ்டையையே "சரமபர்வம்" என்றும் "ஐந்தாம்பருவம்" என்றும் "சரமநிஷ்டை" என்றும் அழைப்பார்கள். கன்றைக்காட்டிக் காராம்பசுவை அழைப்பதுபோல், அடியார்கள் பக்தியைக் காட்டி எம்பெருமானை அழைப்பதுதான் மிக எளிது என்பது ஸமயப் பெரியார்களின் துணிவு. "தேவுமற்றறியேன், குருகூர்நம்பி பாவின் இன்னிசை பாடித்திரிவனே (2) திரிதந் தாகிலும் தேவபிரானுடையக் கரிய கோலத் திருவுருக்காண்பன்நான் (3)" என்று இவர் கூறிய நல்லுரையே நல்லுரையாகும். இவர் வடமொழி நூல்களின் துறை கண்ட மாபெரும் புலவர், முதலில் இறைவன் பொன்னடியையே போற்றிப் பூரித்தார். ஆனால் கடைசியில் "வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த மாறன்" எனக் கூறி இன்பத்தின் இறுதி கண்டவர். "துன்பற்ற மதுரகவிதோன்றக் காட்டும் தொல்வழியே நல்வழியாம் துணிவார்கட்கே" என்றுதிருவாய் மலர்ந்த ஸ்ரீவேதாந்த தேசிகன், மதுரகவியின் வழியையே நல்லதோர் நயவழியாகக் கூறினார். இவ்வழியையே "சத்துருக்னன்" காட்டிய வழி என்றும் இராமாயணப் பேரறிஞர் போற்றுவர். அந்தணராய்த் தோன்றிய இவர் நம்நம்மாழ்வாரையே, நலமந்தமில்லா நற்பொருளாகக் கொண்டார் என்பதையும் நாம் கண்டுகளிக்கவேண்டும்.

எம்பெருமானைக் கொண்டு காரியம் கொள்வது, கையைப்பிடித்துக் காரியம் கொள்வதற்கு ஒப்பென்றும், அடியார்களைக் கொண்டு காரியம் கொள்வது காலைப் பிடித்துக் காரியம் கொள்வதற்கு ஒப்பென்றும் கூறுவார்கள். எண் திசையும் புகழ்கொண்ட ஸ்ரீ இராமாநுசரும், பிள்ளை வில்லிஉறங்காதாஸருக்கு "நாம் எம்பெருமாள் கை பார்த்திருப்போம் அல்லோம் காணும், எனக்குப் பெரிய நம்பிகள் உண்டு, உமக்கு நான் உண்டு" என்று கூறி ஆசாரிய ஸம்பந்தத்தின் மூலமாய் அடியார் பெருமைக்கு முத்தாய்ப்பிட்டார். "தந்தை என நின்ற தனித் திருமால் தாளில் தலைவைத்தோம் சடகோபன் அருளினாலே" என்று பேசும் அமிருதாசுவாதினி, ஆழ்வார் பக்தியே ஆலிலை எம்பெருமானை அடைய எளிய வழியாகும் எனப் பேசிற்று. பகவானும் "தன் சங்கல்பத்தைக் குலைத்தாகிலும் ததீயர் (அடியார்கள்) சங்கல்பத்தை (எண்ணத்தை) நிறைவேற்றுவன்" என்ற பெரியோர் பொன்மொழிக்கிணங்க அடியார்க்கு அடியார்களிடத்தில் தாம் அதிகம் பற்றுள்ளவன். தன் அடியரான திருமழிசைப் பிரானின் அடியரான கணிகண்ணனுக்காகத், தன் பைந்நாகப் பாயைச் சுருட்டிக்கொண்டு புறப்பட்டுச் சொன்னவண்ணம் செய்தான் என்றால், அடியார்களின் பெருமையை ஏட்டில் எழுதி, கருத்துரையால் காட்ட இயலுமோ?

### 3 மதுரகவியார் அவதாரப் பெருமை:

செந்தமிழ் நாடென்று சிறப்புற்ற பாண்டி நாட்டிலே ஈரொன்பதாகிய திருப்பதிகளில் "திருக்கோளூர்" என்ற திருப்பதி மிகவும் பெருமை பெற்றது. இங்கு ஆதிசேஷ சயனக் கோலத்தில் "வைத்த மாநிதி" என்ற பெருமாள் யோகு செய்கிறான். "நிக்ஷேபவித்தன்" எனவும் அவரது திருநாமம். கோளூர் வல்லி நாச்சியார், ஸ்ரீகரவிமானம், குபேரதீர்த்தம், தாமிரபரணிநதி என்றவற்றாலும் சிறப்புடைய தலமாகும். அதர்ம தேவதை குபேரனிடம் இங்கே நவநதிகள் ஒளித்துக் கொண்டிருக்கின்றன எனக் கோள்சொல்லியதால் இத்தலத்திற்குத் திருக்கோளூர் எனத் திருப்பெயர் ஏற்பட்டது. "பிசுன க்ஷேத்திரம்" எனவும் அழைப்பார்கள். இத்திவ்விய தேசத்தின் கிழக்கே இருபது கல் தொலைவில் தான், ஆழ்வார் அவதார க்ஷேத்திரமான ஆழ்வார் திருநகரியுள்ளது.

வையம் எல்லாம் வாழவைக்கும் இத்திருக்கோளூரிலே, ஈசுவர வருஷம் சித்திரை மாதம் வெள்ளிக்கிழமை சித்திரை நக்ஷத்திரத்திலே, குமுதர் கருடன் இருவர் அம்சமும் ஒரு அம்சமாய், நம்மாழ்வாராகிய கதிரவன் தோன்றும் முன்பு அருணோதயம் போலத் தோன்றினார். நம்மாழ்வாரைவிட வயதால் முந்தியவர். கண்ணபிரான் வாழ்ந்த காலத்தவர் எனவும் கூறுவார்கள். வடநாட்டுத் திருப்பதிகள் காணச்சென்ற இவர் கடைசியில் திரு அயோத்தி சென்று அங்கு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ இராமபிரானை ஸேவித்து வரும் நாளில் ஓர் நள்ளிரவில், தென்திசையில் வானளாவி நின்ற சோதியைக் கண்டு அதனைக் கண்டு தெளியத்தம் நாடான தமிழ் நாட்டை நோக்கிப் புறப்பட்டார். அச்சோதி படிந்து அமைந்த, ஆழ்வார் திருநகரியில் வீற்றிருந்த, நம்மாழ்வார் திருமேனியைக் கண்ணாரக்கண்டு வணங்கி அவருக்குக் கட்புலன் உள்ளது என்பதை ஒருவகையால் உணர்ந்தார். வாய்ப்புலன் உளதா என அறிய "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?" (இந்த உடலில் பிறந்த அணுவான ஜீவான்மா எதை உண்டு எப்படிவதியும்?) என்ற கேள்வியைக் கேட்க, ஆழ்வாரும் "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" (அந்த உடலின் இன்ப துன்ப நுகர்ச்சிகளையே நுகர்ந்து அத்துடன் இருக்கும்) என மறுமொழி பகரவே, அவரையே பரமாசாரியனாகத் தேறித்தண்டனிட்டு வணங்கினார். அவர் சோதிவாய் திறந்து பணித்த திருவாய்மொழியைப் பட்டோலை சார்த்திக்காத்தார். "ஆயிரம் பாட்டந்தாதிச் செம்மொழிப்பாமாலை ஒன்றும் செப்பிடக் கேட்டு எழுதி வைத்தான்" எனப் புலவர்

புராணமும் கூறும். மதுரகவியாழ்வாரும் அத்திருப்பதியிலே சிலநாள் எழுந்தருளி இருந்து, ஆழ்வார் திருநாட்டை அலங்கரித்தபின் அவருக்குத் திருக்கோயில் அமைத்து வழிபட்டுவந்தார். இவ்வாறு மதுரகவிகள் தமது ஆசாரியரது திருப்பாதம் அல்லது வேறொன்றும் காணுது சிலநாள் வாழ்ந்து, பிறகு சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தான பேரின்ப வீட்டை அடைந்தார். ஆழ்வாருக்குப் பல ஆண்டுகளுக்குப்பின் தோன்றி, நாலாயிரம் வகுத்த நாதமுனிகள் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்று இவர் பாடிய பாட்டையே மந்திரமாகப் பன்னீராயிரம் தடவை ஜபித்து நம்மாழ்வாரிடமிருந்து அமுதமொழியைப் பெற்ருர். இதனல் இக் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பாடலுக்கு வேதமந்திரத்திஞேடு ஒப்புவமை சொல்லி ஏற்றம் கூறும் பெருமை ஏற்பட்டது. இவர் வெளியிட்டருளிய தொடர்புடன் கூட்டி "இன்பத்தில் இறைஞ்சுதலில்" என்ற பாடலிலே ஸ்ரீ வேதாந்த தேசிகன் மிக அருமையாக எடுத்துக் காட்டி உள்ளார்.

### (4) பாவில் காணும் ஆழ்வார் பேச்சு :

மதுரகவியாழ்வார் தம் பாடல் ஒவ்வொன்றிலும் ஆழ்வார் திருநாமத்தையும் பெருமையையும், எம்பெருமான் பெருமையுடன் முத்தும் பொன்னும் கலந்து வைத்தாற்போல் கலந்து தொகுத்துக் காட்டியுள்ளார். (1) தேவு மற்றறியேன் (2) வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் (3) காரிமாறப்பிரான் (4) சடகோபன் என்நம்பிக்கு, பெரிய வண் குருகூர் நம்பிக் காளுரியனய் அடியேன் பெற்ற நன்மையே. (6) என்னை ஆண்டிடும் தன்மையான் (7) செயல் நன்ருகத் திருத்திப்பணி கொள்வான்" என்றும் இப்புடையிலே ஆழ்வாரையே உண்ணும் சோறு தின்னும் வெற்றிலை, பருகுநீராக்கிப் பார்புகழ் எய்தினர்.

" மன்றே புகழும் திருவழுந்தூர்வள்ளல்
மாறனை முன்
சென்றே மதுரகவிப் பெருமாள்தென்
தமிழ்த்தொடையில்
ஒன்றேபதிகம் உரைத்தவன் பொன்னடி
உற்றுநின்ருன்
என்றே பதிகம் பதிகமதாக இசைத்
தனனே "

என்றபடி கம்பருக்கும் இவரே வழி காட்டிஞரானர்.

---

## மதுரகவியாழ்வார் துதி

வேறொன்றும் நான்அறியேன்! வேதம் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்—ஏறு, எங்கள்
வாழ்வேம்என் றேத்தும் மதுரகவி யார், எம்மை
ஆள்வார் அவரே அரண்

—ஸ்ரீமந்நாதமுனிகள்

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS

# சிவாலயப் பரிவார மூர்த்திகள்

## (தட்சிணமூர்த்தி)

(திரு எஸ். சுவாமிநாத சிவாசாரியார், தருமபுரம்)

சிவாலயத்திலுள்ள பரிவார மூர்த்திகளுள், தட்சிணமூத்தியும் ஒருவர். இவரைத் தமிழில் **தென்முகக் கடவுள்** எனவும், **ஆலமர் செல்வர்** எனவும் வழங்குவர். இம் மூர்த்தி கருவறையின் வெளியில், தென்புறமுள்ள தேவ கோட்டம் என்னும் மாடத்தில் வீற்றிருப்பார். தட்சிணமூர்த்தி, இறைவன் குருவடிவாக எழுந்தருளி ஞானோபதேசம் செய்தருளும் நிலையைக் குறிப்பதாகும். இவர் எண் வகை நிலையினராவர்.

1. கபில தட்சிணமூர்த்தி
2. கைலாசவாச தட்சிணமூர்த்தி
3. விணு குஞ்சித தட்சிணமூர்த்தி
4. யோகவீணுதர தட்சிணமூர்த்தி
5. விபுல தட்சிணமூர்த்தி
6. ஞானமுத்திராதர தட்சிணமூர்த்தி
7. கௌரி ஆலிங்கித தட்சிணமூர்த்தி
8. திரிபுவன தட்சிணமூர்த்தி

பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் எழுந்தருளி யிருப்பவர் கைலாசவாச தட்சிணமூர்த்தியே யாவர். இவருக்கு **வியாக்கியான தட்சிணமூர்த்தி** என்றும் ஒரு பெயர் வழங்கும். கல்லால மரத்தின் கீழ், புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்து, புன்முறுவலுடன் இவர் தோற்றமளிப்பார். வலக்காலைக் கீழே தொங்கவிட்டு, இடக்காலை மடித்து வலது துடையின் மீது பொருந்தும் வண்ணம் வைத்திருப்பார். கீழே தொங்கும் காலின் அடியில், **அபஸ்மாரன்** என்ற அசுரன் ஒருவன் மிதிக்கப் பெற்றபடி இருப்பான். வலக் கைகளில் ஒன்றில் சின் முத்திரையுடன் இருப்பார். மற்ருென்று உருத்திராக்க மாலையுடன் விளங்கும். இடக்கைகளில் ஒன்று சிவஞான போதம் என்னும் நூலையும், மற்ருென்று தீச்சுடர் அல்லது பாம்பு ஒன்றையும் ஏந்தி இருக்கும். திருமேனி வளைவின்றி நிமிர்ந்தமர்ந்து, பளிங்கு நிறமுடையதாகத் திகழும். தலையில் உள்ள சடை, பலவேறு வகைகளில் அழகுற அமைந்து காணப்படும். சடையில் சந்திரன் கங்கை வெண்தலை பாம்பு எருக்கம் பூ முதலியன இடம் பெற்றிருக்கும். முகம் மலர்ச்சியும், அமைதி ஒளியுமுற்று அழகுற விளங்கும். கட் பார்வை மூக்கு நுனி நோக்கிப் பதிந்திருக்கும், அபஸ்மாரன் அல்லது **முயலகன்** எனப்படும் அசுரன், உயிர்களைப் பற்றியுள்ள ஆணவ மலத்தின் அடையாளம். தட்சிணமூர்த்தி அவனை மிதித்துக் கொண்டிருப்பது, அவர் உயிர்களைப் பற்றி வருத்தி வரும் கொடிய ஆணவ மலத்தின் வலியை, அடக்கி அருளுதலைக் குறிக்கும். ஞானோபதேசம் செய்யும் நிலையிலுள்ள தட்சிணமூர்த்தியைச் சுற்றி அமர்ந்திருப்பவர்கள் **சனகர் சனந்தனர் சனுதனர் சனற்குமாரர்** என்போர் ஆவர். இவர்களை அகத்தியர் புலத்தியர் விசுவாமித்திரர் ஆங்கிரசர் என வேருகவும் கூறுவதுண்டு.

தட்சிணமூர்த்தி நிலையினை, முற்குறிப்பிட்ட எண்வகை நிலைகளின் வேருக, மற்ருெரு வகையில் வேறுபல பேதங்களாகவும் கூறுவதுண்டு.

1. ஆசீன தட்சிணமூர்த்தி
2. சுந்தர தட்சிணமூர்த்தி
3. அகோர தட்சிணமூர்த்தி
4. மேதா தட்சிணமூர்த்தி
5. கிருத்சிர தட்சிணமூர்த்தி
6. விமல தட்சிணமூர்த்தி
7. நிருத்த ரூப தட்சிணமூர்த்தி
8. யோக தட்சிணமூர்த்தி

இத்தகைய பேதங்களெல்லாம், அமர்ந்தருளியிருக்கும் நிலை வேறுபாட்டாலும், சிற்சில வடிவ வேறுபாடுகளாலும்,

அமைவனவாகும். சிற்ப நூலிலும் ஆக மங்களிலும் இம் மூர்த்தி விகற்பங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. சின் முத்திரை நெருப்பு பாம்பு சிவஞானபோதம் ஆகிய வற்றைத் தாங்கிய நான்கு கைகளையுடையவர் **கைலாச வாசி**. பரசு பாணம் மான் வில் என்பவற்றைத் தாங்கிய நான்கு கைகளுடையவர் **விஜ குஞ்சிதர்**. ஞான முத்திரை உருத்திராக்கமாலை சிவஞானபோதம் வீணை ஆகியவற்றை ஏந்தியிருப்பவர் **வீணு தட்சிணமூர்த்தி**. பரசு மான் அபயம் வரதம் என்பவற்றையுடையவர் **சுந்தர தட்சிணமூர்த்தி**. நெருப்பு வீணை பொற்கிண்ணம் உருத்திராக்கமாலை ஆகியவற்றைக் கொண்டிருப்பவர் **அகோர தட்சிணமூர்த்தி**. ஞான முத்திரை சிவஞான போதம் உருத்திராக்க மாலை அமிர்தகலசம் என்பவற்றையுடையவராய், இடப்புறத்திலிருக்கும் தேவியை ஆலிங்கனம் செய்து தழுவிக் கொண்டிருப்பவர் **கௌரி ஆலிங்கிதர்**. சிவஞான போதம் மூங்கிற்கழி என்பவற்றைக் கொண்ட இரண்டு கைகளை மட்டுமேயுடையவர் **துவி புஜர்**. பரசு பாம்பு வாள் ஞானமுத்திரை மான் நெருப்பு கேடயம் சிவஞான போதம் என்பவற்றைத் தாங்கிய எட்டுக் கைகளையுடையவர் **அஷ்டபுஜர்**. இங்ஙனம் தட்சிணமூர்த்தி ஒருவரே பலவேறு பெயர்களில் வழங்கப் பெறுவர்.

தட்சிணமூர்த்தி ஆசிரியர்களுக்கெல்லாம் மேலான ஆசிரியர்! திருமால் பிரமன் உபமன்னியர் சூரியன் நந்திதேவர் முருகன் இந்திரன் முதலியவர்கள், ஆசிரியத் தன்மை பெறுதற்கு உரியராகும்படிச் செய்தருளியவர், தட்சிணமூர்த்தியே என்று 'சிவதத்துவ விவேகம்' என்னும் நூல் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

திருமால் இந்திரன் பிரமன் உபமனியன்
தபனன் நந்தி செவ்வேள் ஆதித்
தருமுது குரவருக்கும் தனது அருளால்
ஆசிரியத் தலைமை நல்கி
வரும் எவர்க்கும் முதற்குருவாய் மெய்ஞ்ஞான
முத்திரைக் கைம்மலரும் வாய்ந்த
உரு அழகும் குறுநகையும் காட்டி, அருள்
தரும்சிவனை உளத்தில் வைப்பாம்!

— சிவதத்துவ விவேகம்.

திருவிளையாடற் புராணத்தில், **பரஞ்சோதி முனிவர்** அருளிச் செய்துள்ள தட்சிணமூர்த்தியின் துதிப்பாடலும், இங்கு நாம் அறிந்து இன்புறத்தக்கது.

கல்லாலின் புடையமர்ந்து, நான்மறை ஆறு
அங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய், மறைக்கு அப்பாலாய்,
எல்லாமாய் அல்லதுமாய், இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை, நினையாமல்
நினைந்து, பவத் தொடக்கை வெல்வாம்.

— திருவிளையாடற்புராணம்,

---

## கோயில் நிகழ்ச்சிகள்.

1. சிரவணபுரம் கௌமார மடாலயம் ஸ்ரீ தண்டபாணி சுவாமி கோயில் கும்பாபிஷேக விழா (1-6-1966)
2. திருப்புறம்பயம் ஸ்ரீ சாட்சிநாத சுவாமி தேவஸ்தானம்—இராஜகோபுரத் திருப்பணித் துவக்க விழா, தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா (30-6-1966)
3. சீர்காழி தாலுக்கா வடரங்கம் ஸ்ரீ ஜம்புநாத சுவாமி கோயில்—அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா (30-6-1966)
4. திருநெல்வேலி ஸ்ரீநெல்லையப்பர் தேவஸ்தானம்—ஆனிப் பெருந்திருவிழா (23-6-1966 முதல் 2-7-1966 முடிய)

# உள்ளுறை பொருள் ஆராய்ச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## 5. களிறு விசேஷார்த்தம்

எம்பெருமானை ஆழ்வார்கள் பல விடங்களிலும் யானையாகப் பேசி யநுபவிக்கிறார்கள். தென்னானாய் வடவானாய் குடபாலானாய் குணபால மத யானாய் என்றும், என்னானை யென்னப்ப னெம்பெருமான் என்றும் சோலை மழகளிறே என்றும் பலபல அருளிச் செயல்களுள்ளன. குஞ்ஜரம் வா அத்ரி குஞ்ஜே என்றார் பட்டரும்.

யானைக்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ·ஸாம்யமுண்டு :-

1. யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும் போதெல்லாம் அபூர்வவஸ்து போலவே யிருந்து பரமானந்தம் பயக்கும்; எம்பெருமானும் "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழி தொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னாரா வமுதமே" என்னும்படி யிருப்பன்.

2. ஆனையின்மீது ஏறவேண்டியவன் ஆனையின் காலைப் பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடஞ் சென்று சேரவேண்டியவர்களும் அவனது திருவடியையே பற்றிச் சேரவேண்டும் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே, என்றார் நம்மாழ்வார்.

3. ஆனை தன்னைக் கட்டத் தானே கயிறு எடுத்துக் கொடுக்கும்; "எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால்" (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடியே எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றானே தந்தருள்வன்; 'மதி நலமருளினன்" என்றார் நம்மாழ்வார், "நின்ன பாத பங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே" என்றார் திருமழிசை யாழ்வார்.

4. யானையை நீராட்டினாலும் அடுத்த க்ஷணத்திலே அழுக்கோடே சேரும்; எம்பெருமான் சுத்த ஸத்வமயனாய்ப் பரம பவித்திரனாயிருக்கச் செய்தேயும் பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பு முடைய நம் போல்வாரோடே சேரத் திருவுள்ளமா யிருப்பன் வாத்ஸல்யத்தாலே.

5. யானையைப் பிடிக்க வேண்டில் பெண் யானையைக் கொண்டே பிடிக்க வேண்டும்; பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படாமையாலால் பிராட்டியை முன்னிட்டே எம்பெருமானை வசீகரிக்க வேண்டும்.

6. யானை, பாகனுடைய அநுமதியின்றித் தன் பக்கல் வருமவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றபடி பாகவதர்களை முன்னிட்டுப் புகாதாரை அங்கிகரித்தருளான்.

7. யானையின் பாஷை யானைப் பாகனுக்கே தெரியும்; எம்பெருமானுடைய பாஷை திருச்கச்சி நம்பி போல்வார்க்கே தெரியும். பேரருளாளப் பெருமாளோடே பேசுமவர் திருக்கச்சி நம்பிகள். "ஸ்ரீ காஞ்சி பூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபி பாஷிணே" என்றருளிச் செய்தார் மணவாள மாமுனிகள்.

8. யானையினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் முதலிய தொழில்கள் யாவும் பாகனிட்ட வழக்காயிருக்கும்; எம்பெருமானும் "கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்க வேண்டா--உன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்றும், "கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்றுஞ் சொல்லுகிற திருமழிசைப்பிரான் போல்வார்க்கு ஸர்வாத்மநா விதேயனாயிருந்தமை சரித்திரப் பிரஸித்தம்.

9. யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி பலகோடி நூறாயிர மெறும்புகளுக்கு உணவாகும். எம்பெருமானமுது செய்து சேஷித்த பிரஸாதத்தாலே பலகோடி பக்த வர்க்கங்கள் உஜ்ஜீவிக்கக் காண்கிறோம்.

10. யானைக்குக் கை நீளம், எம்பெருமானும் அலம்புரிந்த நெடுந்தடக்கையமரர் 'வேந்தன்' என்றும் "நீண்ட அந்தக் கருமுகிலை யெம்மான் றன்னை" என்றும் திருமங்கையாழ்வாரால் நீண்ட கையனுகப் பாடப்பட்டான்.

11. யானை இறந்தபின்பும் உதவும், எம்பெருமானும் தீர்த்தம் ப்ரஸாதித்துத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளின பின்பும் இதி ஹாஸ புராணங்கள் அருளிச் செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை உணர்த்தி உதவுகின்றமையைக்காணுகின்றோம்.

12. யானைக்கு ஒரு கையே உளது, எம்பெருமானுக்கும் கொடுக்குங் கையொழியக் கொள்ளுங் கை இல்லை. 'வேண்டிற்றெல்லாந்தரும் கோதில் வள்ளல்' என்று நம்மாழ்வாரும், அர்த்தி தார்த்த பரிதாந தீக்ஷிதம் என்று கூரத்தாழ்வானும் கூறினர்.

13. பாகனுக்கு ஜீவனங்கள் ஸம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகர்களுக்கும், தன்னை நிர்வகிக்கின்ற வித்வான்களுக்கும் ஜீவநோஜ்ஜீவனங்களை நிர்வஹித்துப் போருகிறான். "எனக்கே தன்னைத்தந்த கற்பகம்" என்றார் நம்மாழ்வார்.

இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்களுங் கண்டு கொள்க.

6. பொன்னப்பன் விசேஷார்த்தம்.

ஆழ்வார்கள் எம்பெருமானைப் பொன்னாகவும் பேசி யனுபவிக்கின்றார்கள். "பொன்னப்பன் மணியப்பன்" என்றார் நம்மாழ்வார், "பொன்னை மாமணியை" "பொன்னானாய்" என்றார் கலியன். "பொருது வருகின்றபொன்னே!" என்றார் பெரியாழ்வார்,

1. இங்ஙனம் எம்பெருமானைப் பொன்னாகக் கூறுவதற்கு ஒரு பொருத்தஞ் சொல்லலாம்; அதாவது "ஹேம்ந. கேதோ ந தா ஹேநச் சேதே ந கஷணே ந வா —ஏததேவ மஹத்துக்கம் யத் குஞ்ஜாஸமதோலநம்.,, என்றார் ஒரு மஹாகவி பொன்னைத் தீயிலிட்டுச் சுடுகிறோம்; உளியையிட்டு வெட்டுகிறோம், உரை கல்லிலே யிட்டுக் கனக்கவுரைக்கிறோம். இன்ன மெத்தனை ஹிம்ஸைகள் செய்யினும் அவற்றால் பொன் சிறிதும் வருந்தமாட்டாது." வருத்தமில்லை யென்பது மாத்திரமேயன்று, அந்த ஹிம்ஸைகளெல்லாம் தனக்குப் பரமபோக்கியமே யென்பது தோன்ற ஒளியை மிகுத்தும் காட்டும், பொன்னைத் தீயிலிட்டுச் சுடும்போதும் உளியிட்டு வெட்டும் போதும் உரைகல்லிலுரைக்கும் போதும் அதற்கு ஒளிமிகுதலைக் காண்கின்றோமன்றோ ஆனால் அந்தப் பொன்னுக்கு ஒருவருத்தம் மாத்திரம் சாலவுண்டாம்.

அஃது என்னென்னில்; மிக அற்பமானதொரு குன்றுமணியோடொக்க நம்மை நிறுப்பதே! என்பதே அதற்கு மிக்க வருத்தமாம். ஒரு தராசில் குன்றுமணியையும் மற்றொரு தராசில் பொன்னையுமிட்டு நிறுக்கக் காண்கிறோமன்றோ. 'பொன் என்று போற்றப்படுகின்ற நமக்குக் கடைகெட்ட குன்றுமணிதானோ ஈடாக வேணும்' என்று வருந்தி மிகவும் குன்றிப் போகாநின்றதாம். அது போல எம்பெருமானும், தூதனுப்ப்ப் பெறுகை, தாம்பால் கட்டுண்கை முதலானவற்றால் சிறிதும் வருந்தான்; வருந்தாமை மாத்திரமேயன்று, அவற்றால் மிக்க முகமலர்ச்சியும் பெற்றிடுவான்; அப்படி யுண்டோவென்னில்; "இன்னார் தூதனென நின்றான்" என்றது கண்டீரே; 'இன்னார் தூதனெனப்பட்டான்' என்னாமல் 'இன்னார் தூதனென நின்றான்' என்கையாலே பாண்டவர்க்குத் தூது செல்லுகையாகிற இழிதொழில் செய்து பாண்டவ தூதனென்று பேர்பெற்ற பின்புதான் எம்பெருமானுக்குத் தரிப்பு உண்டாயிற்றென்பது விளங்கவில்லையோ?

இனி, தாம்பால் கட்டுண்கையினால் முகமலர்ச்சியுண்டானமை அறிந்தபடி யெங்ஙனே யென்னில்; பட்டர் திருக்கோட்டியூரிலெழுந்தருளி யிருக்கும் போது ஒரு ஸ்வாமி வந்து அடியேனுக்கு ஒருகு திருவிருத்தம் பொருளருளிச் செய்ய வேணும் என்று பிரார்த்திக்க, 'நம் பெருமாளைப் பிரிந்த துயரத்தினால் எனக்கொன்றும் சொல்லப் போகிறதில்லை, நஞ்சீயர் பக்கலிலே கேட்டுக் கொள்ளும்' என்று சொல்லி நஞ்சீயருக்கு நியமித்தார்.

—தொடரும்